www.padippakam.com


# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 483 | 1997 செப்டம்பர் | ரூபா 6.00


## உள்ளே


■ ரெலிகொம் தொழிற் சங்கங்கள் தனியார்மயத்துக்கு செங்கம்பளம் விரித்தது எப்படி? ........ 2
■ இலவசக் கல்வியைக் காக்க மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்புவோம்! ........ 3
■ பிரான்சுத் தேர்தலில் ஆளும் கூட்டரசாங்கத்துக்கு படுதோல்வி ........ 4
■ இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் .. 6
■ பொலிஸ்-இராணுவ கைதியாக இருந்து விடுவிக்கப்பட்ட இராஜ்குமார் உரைநிகழ்த்தும் கூட்டத் தொடர் ஆரம்பம்!வடக்கு-கிழக்கு சோசலிசக் குரல் 8


**வடக்கு-கிழக்கு சோசலிசக் குரல்**
8-9 பக்கம்

# கொடிய யுத்த பயங்கரங்களில் இருந்து மீட்சி பெற வழி என்ன?

### ஆசிரியர் குழு அறிக்கை

பொதுஜன முன்னணி அரசாங்கம் வன்னியில் நடாத்தி வரும் யுத்தம் இன்று உலகில் இடம்பெறும் யுத்தங்களில் பெரியதும் பயங்கரமானதுமாகும். இதை மூடி மறைப்பதற்காக பொதுஜன முன்னணி அரசாங்கம் சமாதானம், சுபீட்சம் சிருஷ்டிப்பது பற்றிய பழையதும் துருப்பிடித்ததுமான கதையளப்புக்களை மீண்டும் உக்கிரம் ஆக்கியுள்ளது. கடந்த ஆகஸ்ட் 25ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அனுராதபுரத்தில் 'சமாதான பட்டறை' என்ற பெயரில் பொதுமக்களின் கண்களில் மண்தூவும் புதியதொரு நடவடிக்கையை ஆரம்பித்து வைத்துள்ளார். வன்னியில் இனவாத யுத்தத்தின் பெறுபேறாக தமிழ், சிங்கள தேசிய இனங்கள் இரண்டினதும் மக்களின் இரத்தம் ஆறாகப் பாய்கையிலேயே இந்த சமாதானப் பட்டறை மோசடியை தொடக்கி வைத்துள்ளார்.

இந்த இரத்தக் க்ளரிக்கு ஏகாதிபத்தியவாதிகளின் ஆசீர்வாதங்களும் யூ.என்.பி.காரர்களதும் இனவாத வெறியர்களதும், சந்தர்ப்பவாதிகளதும் முண்டும் கிடைத்துள்ளது. இந்தப் பயங்கர இனவாத யுத்தத்துக்காக பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆயிரமாயிரம் படையாட்களைக் கொண்ட இரண்டு படைப் பிரிவுகளையும் விமான, கடற்படை தாக்குதல் படைகளையும் இறக்கியுள்ளது. யுத்த களத்தில் படையாட்களின் மரணத்தினாலும் காயங்களினாலும் ஏற்படும் இடைவெளியை நிரப்ப இராணுவத்துக்கு தினமும் வேலையற்ற இளைஞர்களில் இருந்து ஆட்திரட்டப்படுகின்றது. பிரிவினைவாத விடுதலைப் புலிகள் தமக்கு 4000 படையாட்களைத் திரட்டிக் கொண்டுள்ளதாக செய்திகள் வந்துள்ளன. 'ஜெய சிக்குறுயி' இராணுவ நடவடிக்கையின் போது மட்டும் அது ஆரம்பமான மே 13 தொடக்கம் ஆகஸ்டு 22 வரையிலான காலப்பகுதியில் மட்டும் - இராணுவத்தைச் சேர்ந்த 600 படையாட்கள் இறந்தும் 4000 படையினர் காயமடைந்தும் உள்ளதாக அரசாங்க அறிக்கைகள் குறிப்பிட்டுள்ளன. விடுதலைப் புலிகள் தரப்பில் 1000க்கும் அதிகமானோர் இறந்தும் சுமார் 2000 பேர் காயமடைந்தும் உள்ளதாக அரசாங்க அறிக்கைகள் பெருமையடித்துக் கொண்டுள்ளன.

பொதுமக்கள் உயிர் வாழ்க்கையைப் பற்றி ஒரு துளியும் கணக்கெடுக்காது இடம்பெற்றுவரும் இந்தக் காட்டுமிராண்டி யுத்தத்தின் மூலம் இந்நாட்டின் ஜனத் தொகையில் நூற்றுக்கு 15 வீதத்தினரான தமிழ் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவை பாருங்கள்:

இராணுவத்தினர் நடாத்தும் விமான, பீரங்கித் தாக்குதல்களில் இருந்து உயிர்தப்பும் பொருட்டு வன்னிப் பகுதி மக்கள் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளில் இருந்து வேறு இடங்களுக்கு தப்பிச் செல்கின்றனர். அந்த இடங்களிலும் அவர்கள் நிற்க இருக்க முடியாத நிலை இருந்து கொண்டுள்ளது.

வன்னியில் தொழிற்படும் பிரான்சிய வைத்திய அமைப்பான எம்.எஸ்.எஸ். புதிதாக வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் இம்மக்களை இடத்துக்கு இடம் கலைத்து மரணத்துக்கு பலியாக்கும் விதத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

ஆகஸ்ட் 15ம் 16ம் திகதிகளில் விமான, பீரங்கி தாக்குதல்களினால் 6 பேர் இறந்ததோடு 33 பேர் காயமடைந்தனர். 15ம் திகதி வன்னிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலினால் ஐவர் இறந்ததோடு 17பேர் காயமடைந்துள்ளனர். சில கிழமைகளுக்கு முன்னர் இராணுவத் தாக்குதல்களின் காரணமாக ஒட்டுச்சுட்டானில் இருந்து இங்கு தப்பி வந்த குழுக்களுக்கே விமானத் தாக்குதல் இடம்பெற்றது. காயமடைந்தவர்களுள் இரண்டு, மூன்று, ஆறு வயது கொண்ட மூன்று குழந்தைகளும் இருந்தனர். மூன்று வயதுக் குழந்தையை சுகப்படுத்தும் பொருட்டு அதன் வலது கால் துண்டிக்கப்பட வேண்டும். அன்றைய தினம் புதுவிளக்கம் பகுதியில் நடாத்தப்பட்ட தாக்குதலினால் இரண்டு சிறுவர்கள் உட்பட்ட அறுவர் காயமடைந்தனர். மறுதினம் குருக்கை குளத்தில் நடைபெற்ற பீரங்கித் தாக்குதலினால் 10பேர் காயமடைந்தனர். புதுக்குடியிருப்பு பாடசாலைக்கு சமீபமாக விழுந்த ஷெல் வெடியினால் உயர்தரப்

(19ம் பக்கம் பார்க்க)

## பகிரங்க கூட்டங்கள்



**பொலிஸ்-இராணுவ கைதில் ஓராண்டுகால அனுபவம்: கைதியாக இருந்து விடுதலை செய்விக்கப்பட்ட இராஜ்குமார் விளக்குகின்றார்**

* செப்டம்பர் 12 மாலை 3மணி
அம்பலாங்கொடை நகர சபை மண்டபம்.
* செப்டம்பர் 14 காலை 10 மணி,
அட்டன் நகரசபை மண்டபம்.

சோசலிச சமத்துவக் கட்சி,
இளம் சோசலிஸ்டுகள்

# சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு நூல் வடிவில் வெளிவந்துள்ளது

சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு நூல் வடிவில் வெளிவந்துள்ளது. அந்த முன்நோக்கு சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயசின் அறிமுக உரையுடன் வெளிவந்துள்ளது. நூல் ரூபா.30 ஆக விற்பனையாகின்றது. இதனை சோ.ச.க.தலைமை அலுவலகம் அமைந்துள்ள 90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் இருந்தும் மற்றும் பிரபல புத்தகசாலைகளில் இருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

இது சோசலிச சமத்துவக் கட்சியை ஸ்தாபிதம் செய்ய தீர்மானம் செய்யப்பட்ட 1996 நவம்பர் 2-3ம் திகதிகளில் நடைபெற்ற புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மாநாட்டில் ஒருமனதாக நிறைவேற்றப் பட்ட முன்நோக்கு பிரேரணையாகும்.

அனைத்துலக நிலைமையினுள் இலங்கையின் இன்றைய பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடியை ஆய்வுசெய்யும் இந்த பத்திரம் தொழிலாளர் வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் முகம் கொடுத்துள்ள முன்னோக்கு, தலைமை நெருக்கடியை தீர்க்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

உலக முதலாளித்துவ நெருக்கடி நிலைமையின் கீழ் பொதுமக்கள் அழிவு நிலமைகளுக்கு முகம் கொடுப்பது தற்செயலானது அல்ல. நாற்றம் கண்டுபோன முதலாளித்துவ அமைப்பைத் தூக்கிவீசி, மனித இனத்தின் முன்னேற்றத்துக்காக சோசலிச பரிமாணத்தை எடுக்க நிஜ சமூகச் சக்தியானது கடைகெட்ட தலைமையினால் தவறான வழியில் திருப்பபட்டு, காட்டிக்கொடுக்கப்பட்டமையே அதற்கான முக்கிய காரணமாகும். முதலாளி வர்க்கம் இராணுவ-பாசிச சர்வாதிகாரத்தின் கீழ் பொதுமக்களை நசுக்கித் தள்ளும் பொருட்டு காட்டுமிராண்டி நடவடிக்கை எடுப்பது அதன் பெறுபேறாகவேயாகும்.

தமிழ் சிங்கள தேசிய இனங்கள் இரண்டையும் சேர்ந்த கிராமப்புற ஏழைகள், வீட்டுப்பெண்கள், இளைஞர்கள் தொழிலாளர் வர்க்கத்தைச் சூழ அணிதிரள்வதற்கு அவசியமான அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தை சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே முன்வைக்கின்றது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை பகுதியாகப் போராடும் சோசலிச சமத்துவக் கட்சி பொதுமக்களை புரட்சிகரமான முறையில் அணிதிரட்ட எடுக்கும் ஆரம்பிப்பும் அதன் வேலைத் திட்டங்களும் இந்தப் பத்திரத்தில் விளக்கப்படுகின்றது.

இந்த முன்நோக்கையும் வேலைத்திட்டத்தையும் கவனமாக வாசித்து, அது பற்றிய கலந்துரையாடலில் கலந்து கொண்டு, சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ள முன்வருமாறு நாம் சகல போராளிகளையும் வேண்டுகின்றோம்.

விஜே டயஸ்
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி.
1997-06-28

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள- தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

www.padippakam.com

எண்ணம்

தொழிலாளர் பாதை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90, 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

# ரெலிகொம் தொழிற் சங்கங்கள் தனியார்மயத்துக்கு செங்கம்பளம் விரித்தது எப்படி?

ஆகஸ்ட் 5ம் திகதி பொதுஜன முன்னணி அரசாங்கம் ஜப்பானின் நிப்பொன் ரெலிபோன் அன்ட் ரெலிகிராப் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிக்கு ரெலிகொம் கூட்டுத்தாபனத்தை விற்றுத்தள்ளியது. அரச நிறுவன மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் மனோ தித்தவெல ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதில் டெலிகொம் தொழிற்சங்கங்கள் இந்த தனியார்மயத்துக்கு செங்கம்பளம் விரித்தது எப்படி என்பதை பின்வருமாறு விபரிக்கின்றார்:

"எப்படி என்றாலும் இந்த தீர்க்கமான தனியார்மயத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில் அரசாங்கமும் இலங்கை ரெலிகொம் கூட்டுத்தாபனமும் அரச நிறுவனங்கள் மறுசீரமைபபு ஆணைக்குழுவும் தனியார்மயத்தின் சகல கட்டங்களையும் தொழிற்சங்கங்களுக்கு விளக்கி வைத்ததேயாகும். அதைப் பற்றி தொழிற்சங்கங்களை நனவூட்டியதேயாகும். அதன் அர்த்தம் முழுக் கொடுக்கல் வாங்கல்களைப் பற்றியும் புரிய வைப்பதேயாகும். தொழிற்சங்கங்கள் இந்த நடவடிக்கைக்கு முழுப்படியே உதவி வழங்கி சில சிறப்பான கருத்துக்களை முன்வைக்கவும் கூட முன்வந்தன"

அமைச்சர் மங்கள சமரவீரவினால் இந்தப் பிரிவின் தொழிற்சங்கங்கள் 38ஐக் கொண்ட ஒரு தொலைத்தொடர்பு தொழிற்சங்கக் கூட்டுக் குழு அமைக்கப்பட்டதோடு அது தனியார்மயத்தின் சகல அம்சங்களை யிட்டும் ஒத்துழைத்தது.இரண்டு கிழமைக்கு ஒரு தடவை இந்தக் கமிட்டி கூடியது. இந்தப் பகுதியை விற்பனை செய்கையில் தொழிற்சங்கம் அரசாங்கத்துக்கு உதவி வழங்கியதோடு, போட்டியுடன் இயங்குவதற்காக தனியார்மயத்தை துரிதப்படுத்துவதன் அவசரத்தை சுட்டிக்காட்டியது தொழிற்சங்கங்களே ."

உலகின் பெரிய தொலைபேசி, தொலைத்தொடர்பு பன்னாட்டுக் கம்பனியும் உலகின் மூன்றாவது பெரிய கம்பனியுமான நிப்பொன் கம்பனிக்கு ரெலிகொம் கூட்டுத்தாபனத்தை விற்பதற்கு தொழிற்சங்கங்கள் எந்தளவுக்கு வேகமாகவும் அக்கறையாகவும் தொழிற்பட்டுள்ளன என்பதை விளக்க வேறும் ஏதும் விளக்கம் அவசியமா?

சில்லி, மெக்சிக்கோ, ஆர்ஜன்ரைனா முதலான நாடுகளின் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தொழிலாளர்களின் எதிர்ப்பை நசுக்கி தனியார்மயத்துக்கான நிலைமைகளைச் சிருஷ்டித்து கொடுத்தது எப்படி என்பதை அறிந்து வரவும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு முதுகில் கத்தியால் குத்தவும் ரெலிகொம் தொழிற்சங்கத் தலைவர்கள் பலர் மேற்சொன்ன நாடுகளுக்கு அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டனர். இவர்களுடன் தனியார்மயத்தினால் தொழில்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய "ஆபத்துக்களை" இல்லாமல் செய்யும் சட்டங்களை ஆக்குவது பற்றி பேரம்பேச வேண்டும் என நடித்தபடி மற்றொரு குழுவினர் நின்று கொண்டிருந்தனர். இக்கோஷ்டியில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கங்கள் அடங்கி இருந்தன. சமசமாஜ தொழிற்சங்கம் தனியார்மயத்துக்கு முண்டு கொடுத்து வருகையில் சமசமாஜக் கட்சி தாம் தனியார்மயத்துக்கு எதிரானவர்கள் எனப் பாசாங்கு செய்கிறது.

கடந்த பல வருடங்களாக ரெலிகொம் தனியார்மயத்துக்கு எதிராக ஊழியர்களிடையே வளர்ச்சி கண்டுவந்த எதிர்ப்பின் முதுகில் குத்துவதற்கு ரெலிகொம் தொழிற்சங்க அதிகாரிகள் பிற்போக்கு தேசியவாத வேலைத் திட்டங்களைக் கடைப்பிடித்து வந்தனர். "அரச நிறுவனங்களை தனியார்மயத்தில் இருந்து காக்கும் கூட்டு முன்னணி" எனப்படுவதில் தொலைத் தொடர்பு தொழிற்சங்க கூட்டு அமைப்பும் அஞ்சல், தொலைத் தொடர்பு அதிகாரிகள் சங்கமும் இணைந்து இருந்தன. இந்த முன்னணி வெளியிட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர "உயிர்த்தியாகம் செய்து " செயற்பட்டதால் தமது பேச்சுக்கு காது கொடுக்கும்படி கேட்டு, ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தின் இறுதி வாக்கியம் வருமாறு:

"ஒரு சில அரச நிறுவனங்களை தனியார்மயமாக்குவதற்குப் பதிலாக ஊழல், அழிவுகளை தவிர்த்து திறமையுடன் செயற்படவும் தேசிய சுயாதீனத்தையும் அபிவிருத்தியையும் முன்வைத்து சுதந்திர பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் திட்டமிட்ட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி அரசாங்கத்தை நெருக்கி வேண்டுகின்றோம் "

இந்த தேசியவாத சூத்திரத்தை உச்சரித்தோர் நீண்ட காலமாக அதற்கு "முற்போக்குச்" சாயம் பூசி இருந்தனர் இது பொதுமக்களின் கண்களில் மண் வீசுவதற்கேயாகும். அதற்குள் இணைந்து உண்மையில் இந்த தொழிற் சங்கங்கள் செய்தது பன்னாட்டு கம்பனிகளுக்கு செங்கம்பளம் விரித்ததேயாகும். நிப்பொன் கம்பனிக்கு ரெலிகொம்மை விற்றுத்தள்ளும் கொடுக்கல் வாங்கல்களின் ஒரு பாகமாக ஊழியர்களுக்கு நூற்றுக்கு 3.5வீதப் பங்குகள் கிடைக்கும் என சங்க அதிகாரிகள் தூக்கிப்பிடித்துப் பிரச்சாரம் செய்தனர். இந்த பங்குக் குண்டு உண்மையில் ரெலிகொம் ஊழியர்களை நிப்பொன் கம்பனியின் இலாபம் சுரண்டும் செக்குக்குள் போட்டு அரைக்கும் திட்டமாகும்.

அடிப்படைக் கைத்தொழில்கள், நிறுவனங்கள் யாவும் முதலாளித்துவ அரசாங்கத்தின் உடமையாக இருந்து வந்த இலங்கையில்-அந்தச் சகல இடங்களிலும் தொழிற்சங்கங்கள் அந்த கைத்தொழில்களையும் நிறுவனங்களையும் வெளிநாட்டு மூலதனத்துக்கு விற்றுத்தள்ளும் மிலேச்ச நிலைமைகளுக்கு தொழிலாளர்களை பலியாக்கும் ஏஜன்சிகளாக செயல்படுகின்றன. 1993ல் தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் குழு பிரேமதாச அரசாங்கத்துக்கு முன்வைத்த கோரிக்கையில் தோட்ட தனியார்மயத்தை சிறப்பாகச் செய்ய சர்வதேச ரென்டர் கோரப்பட வேண்டும் என்றது. துறைமுகத் 'தேசிய வளங்களை நாசமாக்குவது பற்றி' சீ.எம்.யூ.தலைவர்கள் பேசுவது தொழிலாளர் உரிமைகளைக் காப்பதற்கு அல்ல. அவர்களை ஏமாற்றி தனியார்மய வேலைத்திட்டத்தை செயற்படுத்தும் வாய்ப்பை அரசாங்கத்துக்கு உருவாக்கி கொடுக்கவே.

## பொது அனுபவம்

தொழிற்சங்கங்கள் தமது உரிமைக்கான போராட்டத்தில் ஈடுபடாது இருப்பதை இன்றைய தொழிலாளர் அனுபவத்தில் காண்கின்றனர். தொழிலாளர்கள் தொழிற் சங்கங்களையும் தொழிற்சங்க அதிகாரிகளையும் வெறுக்கின்றனர்.சகல இடங்களிலும் தொழிற்சங்க அதிகாரிகள் முதலாளிகளதும் அங்கத்தவர்களதும் நிதியினால் வயிற்றை நிரப்பிக் கொள்கின்றார்கள். தமது வசதி வாய்ப்புக்களை கட்டி எழுப்புகின்றனர். பல இடங்களில் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களில் இருந்து விலகிக் கொண்டுள்ளனர். 1970பதுகளில் இ.தொ.கா.வில் 300000 அங்கத்தவர்கள் இருந்தனர். இன்று இது 80000க்கும் குறைவாக வீழ்ச்சி கண்டுள்ளது.

இது தொழிற் சங்கங்கள் வரலாற்று ரீதியில் வங்குரோத்துக் கண்டுவிட்டதைக் குறிக்கின்றது.அப்பட்டமான பிற்போக்கு கருமங்களில் அவை இறங்கி உள்ளதை இது காட்டுகின்றது.

## வரலாறு

வரலாற்று ரீதியில் பார்ப்பின் தொழிற் சங்கங்கள் முதலாளிகளின் நலன்களுக்கு தொழிலாளர்களை நெறிப்படுத்தும் அமைப்புக்களாக உதித்தன. தொழிலாளர்களை அணிதிரட்டி அவர்களின் தொழில், சம்பளம், சேவை நிலைமைகளுக்காக பேரம் பேசக் கூடிய ஒரு நிலைமைக்குள் தொழிற்சங்கங்கள் வெறும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக போராடும் அமைப்புக்களாக தோன்றுகின்றன. தொழிலாளர்களின் உழைப்பைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பெறுமதி மூலம் முதலாளி திரட்டிக் கொள்ளும் உபரி பெறுமானத்தில் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமையை உயர்த்துவதற்கு எதையும் பெறுவது இந்தப் பேரம் பேசலின் அடிப்படையாக விளங்கியது. தொழிற்சங்க வேலைத்திட்டம் முதலாளித்துவ அமைப்பினுள் முதலாளியுடன் இந்த விதத்தில் பேரம் பேசுவதாகும். அந்தந்த கைத்தொழில்களுக்கும் தரங்களுக்கும் ஏற்ப தொழிற்சங்கங்கள் தோன்றியது இந்த வேலைத்திட்டத்தில் இணைந்தே. அதற்கு அப்பால் அந்த வேலைத்திட்டம் செல்லாதது மட்டுமன்றி அதை எடுத்துச் செல்லும் சக்தியும் தொழிற் சங்கங்களுக்கு கிடையாது. தொழிற்சங்க அதிகாரத்துவம் பேரம் பேசும் அமைப்பினை நெருக்கடிக்குள் தள்ளும் நெருக்கடியையும் போராட்டங்களையும் தமது வேலைத்திட்டங்களுக்கு உயிராபத்தானவையாக நோக்கி வந்தன.

தேசியப் பொருளாதாரத்தினுள் முதலாளித்துவ அமைப்பு நின்று பிடிக்கும் நிலைமையினுள்- அதனால் ஸ்திரப்பாட்டை பராமரிக்க முடிந்த நிலைமையினுள் - தொழிற்சங்க வேலைத்திட்டத்தினால் மூச்சுவிட முடிந்தது. இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளில் முதலாளிகளுக்கு, ஏகாதிபத்தியவாதிகளுடன் பேரம் பேசி தேசியவாத வேலைத் திட்டத்துடன் பிணைந்து கொள்ள முடிந்தது. கடந்த காலத்தில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் "முற்போக்கு" சாயம் பூசி தொழிலாளர்களை இந்த வேலைத்திட்டத்தினுள் பிணைத்துப் போடவும் முதலாளித்துவ அமைப்பினுள் நெறிப்படுத்தவும் தொழிற்பட்டன.

உலகளாவிய ரீதியில் மூலதனத்தை இடத்துக்கிடம் மாற்றும் ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் அவற்றின் நலன்களை பிரதிநிதித்துவம் செய்யும் முதலாளித்துவ அரசாங்கங்கள் முதலாளிகளுடன் தொழிற்சங்கங்கள் இன்று பேரம் பேசுவது எப்படி? அவை அமைப்பு உருவிலும் வேலைத்திட்ட உருவிலும் வங்குரோத்து அடைந்துள்ளன. அத்தோடு அவை முதலாளித்துவத்தின் புதிய அவசியங்களுக்கு ஏற்ப தொழிலாளர்களை நெறிப்படுத்தும் அமைப்புக்களாக மாறி உள்ளன. தொழிற் சங்கங்களின் வங்குரோத்தும் பிற்போக்கு பரிணாமமும் ஒரு

18 ம் பக்கம் பார்க்க

அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

* அமெரிக்கா:
http://www.socialequality.com

* அவுஸ்திரேலியா:
http:www.workersnews.com.au

* பிரித்தானியா:
http:/www.socialequality.org.uk

படிப்பகம்

www.padippakam.com



# இலவசக் கல்வியைக் காக்க மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்புவோம்!

இலவசக் கல்விக்கு குழிபறிக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினை தோற்கடிப்பதற்காக சோசலிச சமத்துவக் கட்சி அதன் வழிகாட்டலின் கீழ் அமைத்துள்ள ஆசிரியர்-மாணவர்-பெற்றோர் நடவடிக்கைக் குழு முன்வைத்துள்ள வேலைத்திட்டத்தினைச் சூழ அணிதிரளும்படி கல்வி உரிமையைக் காக்கும் அவசியத்தினால் முன்னணிக்கு வந்து கொண்டுள்ள மாணவர்கள்-பெற்றோர்கள்-ஆசிரியர்களை நாம் வேண்டுகின்றோம்.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு இலவசக் கல்வியை ஒழித்துக் கட்டும் தாக்குதல்களின் அலுகோசுகளாக நின்றுகொண்டுள்ளனர். ஆசிரியர் சங்கங்கள் உட்பட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் பொதுமக்களின் இந்த அடிப்படை உரிமையை கொள்ளையடிக்கும் விதத்தில் போராட்டங்களை ஒழுங்கு செய்வதை தவிர்க்கின்றார்கள். இந்த நிலைமையில் இருந்து இலாபம் பெறும் ஜே.வீ.பி. அதன் மாணவர் அமைப்பை கொண்டு, தமது பிற்போக்கு அவசியங்களின் பேரில் மாணவர்களைத் திரட்டிக் கொள்ள முயற்சிக்கின்றது.

பொதுமக்கள் எதிர்ப்பை நசுக்கித் தள்ளி தொழில், கல்வி சீர்திருத்த திட்டத்தை என்ன விதத்திலும் அமுல் செய்வதில் பொதுஜன முன்னணி அரசாங்கம் இறங்கியுள்ளது. ஜூலை கடைப்பகுதியில் இருந்து அரசாங்கம் பாடசாலைகளுக்குள் பொலிஸ் அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டது. மாணவர்களை பிரச்சாரங்களுக்கு தூண்டும் ஆட்களை கைது செய்யும்படி உத்தரவிட்டு அரசாங்கம் இந்த பிரச்சாரங்களுக்கு கால்கட்டு போடும் பொறுப்பை பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மீது போட்டுள்ளது. இரகசியப் பொலிசார் சில பாடசாலைகளுக்குள் சென்று ஆசிரியர்களை எச்சரித்ததாக தொழிலாளர் பாதைக்கு செய்தி கிடைத்துள்ளது.

ஜூலை 30ம் திகதி கொழும்பு பல்கலைக் கழகத்தின் எதிரில் அரசாங்கத்தின் கல்வி வெட்டுக்கு எதிராக சோசலிச சமத்துவக் கட்சியும் ஆசிரியர்-மாணவர்-பெற்றோர் நடவடிக்கை குழுவும் சீர்திருத்தம் எனப்படுவதற்கு எதிராக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இச்சமயத்தில் குண்டாந்தடிகளுடன் பொலிசார் பாய்ந்து விழுந்துள்ளனர்.

பொதுமக்கள் பிரச்சார இயக்கம் பரந்துவிடும் என்ற பயத்தினால் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் பொது மக்களின் கண்களில் மண்போடும் பொருட்டு ஜூலை 31ம் திகதி வெகுஜனத் தொடர்புச் சாதனங்களில் ஒரு கலந்துரையாடலை நடாத்தினார். 21 ஆண்டுகள் கல்விச் சேவையில் தொடர்பு கொண்டவன் என்ற முறையில் மாணவர்களுக்கு கஷ்டங்கள் உருவாக இடம் அளிக்கப் போவதில்லை என்ற கயிற்றை அமைச்சர் இறக்க முயன்றுள்ளார்.

இந்தப் பேச்சுக்களால் யாரும் ஏமாந்து போக முடியுமா? ஆனால் பொதுமக்களின் அனுபவம் என்ன? யூ.என்.பி. அரசாங்கம் வெட்டித் தள்ளிய இலவசக் கல்வியின் மிச்ச சொச்சங்களை வெட்டித் தள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. 1997ம் ஆண்டை கல்வி சீர்திருத்த ஆண்டு எனப் பெயர்சூட்டி அரசாங்கம் வேலையை ஆரம்பித்துள்ளது. உலக வங்கியின் கட்டளைப்படியும் ஆசிரியர் சேவைகள் பற்றிய சிபார்சுகளின் படியும் இலவசக் கல்வியை அழித்தொழிக்கும் புதிய திட்டத்தை தயாரித்துள்ளது.

ஜயதிலக ஆணைக்குழுவின் சிபார்சுகளில் சில வருமாறு :

* "பாடசாலைக்கு முன்னோடி கல்வி தனியார் நிறுவனமாக இருக்க வேண்டும்" -பாடசாலைகளுக்கு குழந்தைகளை தயார் செய்யும் முன்னோடி பாடசாலைகள் தனியார் உரிமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

* "அமைச்சில் இருந்தும் அவ்வாறே சமூகத்தில் இருந்தும் கிடைக்கும் உதவியைப் பயன்படுத்தி பாடசாலை அபிவிருத்தி சபையினது உதவியுடன் பாடசாலைக் கட்டிடங்களை பராமரிக்கும் வேலைத்திட்டம் இடம்பெறும்". குழந்தைகள் பாடசாலைகளில் சேர்ந்த நாளில் இருந்து பொதுமக்களின் தோளில் சுமத்தப்பட்டுள்ள சுமை மேலும் இறுக்கப்படும். அரசாங்கத்தின் செலவு முழுமனே நிறுத்தப்படுவது இதன் இலக்காகும்.

* "அரசாங்கம் இன்று முகம் கொடுத்துள்ள நிதி நெருக்கடியின் கீழ் உயர் கல்விக்கு போதுமான அளவு உதவிகள் அதிகரிக்கப்படும் என எதிர்பார்ப்பது பயனற்றது." ஆதலால் அரசாங்கத்துக்கும் தனியார் துறைக்கும் சேவைகளை வழங்குவதன் மூலம் நிதி வழங்கும்படி பல்கலைக் கழகங்களுக்கு சிபார்சு செய்யும் ஜயதிலக ஆணைக்குழு நிதியை அப்படித் திரட்டிக் கொள்ள "வர்த்தக அலுவலகம்" அமைக்கும்படி சிபார்சு செய்கின்றது. இதன் மூலம் வெளிநாட்டு, உள்நாட்டு கம்பனிக்காரர்களின வேலைத்தலமாக பல்கலைக் கழகங்களை மாற்றுவது ஆரம்பிக்கின்றது.

பல்கலைக் கழகங்களுக்குத் தகுதிபெறும் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கையில் அதை வெட்டித் தள்ளுவதற்கு தகுதி புள்ளிகளின் எண்ணிக்கையைக் கூட்டியுள்ள அரசாங்கம் "தகுதி பரீட்சை" என்ற பேரில் மாணவர்களுக்கு மற்றொரு பிரிவையும் புகுத்தி உள்ளது.

செலவுகளை வெட்டும் பொருட்டு பாடசாலை சீர்திருத்தம் என்ற பேரில் பாடசாலைகளை இழுத்து மூடுவது ஆரம்பமாகி உள்ளது. ஒரு வகுப்பில் 7 மாணவர்களுக்கு குறைவான பிள்ளைகளைக் கொண்ட 539 ஆரம்ப பாடசாலைகளும் விஞ்ஞான வகுப்பில் ஐந்து மாணவர்களுக்கு குறைவான எண்ணிக்கையினரைக் கொண்ட ஆண்டு-12 வகுப்புக்களைக் கொண்ட 78 பாடசாலைகளும் 12ம் 13ம் ஆண்டு வகுப்பு மாணவர்கள் 10க்கு குறைவான பாடசாலைகள் 818ம் மூடப்பட வேண்டும் என்ற சிபார்சினை கல்வி அமைச்சின் செயலாளர் பிறப்பித்துள்ளார். இது கடந்த பெப்பிரவரி மாதம் வெளியிடப்பட்டது. இத்தகைய பாடசாலைகள் வறிய மக்கள் வாழும் கிராம, தோட்டப் பகுதிகளிலேயே உள்ளன. கடந்த மாதத்தில் இத்தகைய பாடசாலைகளை மூடுவதற்கு எதிராகப் பெற்றோரும் மாணவர்களும் பிரச்சாரத்தில் இறங்கினர்.

* 150 மாணவர்களுக்குக் குறைந்த பாடசாலைகளில் அதிபர்களை நியமனம் செய்யாமல் வேறொரு ஆசிரியரை "முகாமை"க்கு நியமனம் செய்ய அரசாங்கம் தீர்மானம் செய்துள்ளது. அத்தகைய பாடசாலைகள் இலங்கையில் 2850 உள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இப்பாடசாலைகளுக்கு நடனம், சித்திரம் போன்றவற்றுக்கான ஆசிரியர்களை நியமனம் செய்வது இல்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளிலும் தோட்டப் பகுதிகளிலும் பாடசாலை அதிபர்களாக உயர் தரத்தைச் சேர்ந்த ஒருவரை நியமனம் செய்வது கஷ்டமாக இருக்கும்" எனவும ஜயதிலக ஆணைக்குழு சிபார்சில் குறிப்பிட்டுள்ளது. இது கிராம, தோட்டப்புற கல்வியை அடியோடு நாசமாக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது

* இலவசக் கல்விக்கும் அதன் ஒரு பாகமாக ஆசிரியர்களுக்கும் எதிராக பிரமாண்டமான தாக்குதலை நடாத்த உலக வங்கி மற்றுமோர் திட்டத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. உலக வங்கியின் சிரேஷ்ட திட்ட அமைப்பாளரான கலாநிதி.அல்பேர்ட் ஜயிம் "இலங்கையின் கல்வி அமைப்பினுள் ஆசிரியர்களை முதன்மையாகக் கொண்ட ஊழியர்கள் 50000 உபரிகள் உள்ளனர்" என்றுள்ளார். இலங்கை பொருளியலாளர்கள் சங்கத்தில் ஜூலை காலப்பகுதியில் அல்பேர்ட் ஆற்றிய உரையில் அங்ஙனம் குறிப்பிட்டுள்ளார். கல்விக்கான செலவுகளில் நூற்றுக்கு 97 வீதம் சம்பளத்துக்கு செல்லும் நிலைமையை மாற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் அர்த்தம் என்ன? ஆசிரியர்களதும் மற்றும் கல்வி ஊழியர்களதும் 50000 தொழில்களுக்கு வேட்டுவைப்பதேயாகும்.

* அரசாங்கம் இனவாத யுத்தத்தைக் கொண்டு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கல்வியை நாசமாக்குவதில் ஈடுபட்டுள்ளது. அப்பகுதிகளில் 5500 தமிழ் மொழி மூலம் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுகின்றது. மாணவர்களில் அரைவாசிப் பங்கினர் பாடசாலை செல்ல முடியாத அகதிகள் நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.



பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கல்வி சீர்திருத்தத்துக்கு எதிராக சோசலிச சமத்துவக் கட்சியின் இளம் சோசலிஸ்டுகள் கொழும்பு பல்கலைக் கழகத்தின் எதிரில் நடாத்திய மறியல் போராட்டம்

## கல்வி சீர்திருத்தத்தின் நிஜ கோலம்

இலவசக் கல்விக்கு குழிபறிப்பது, கல்வியை தனிப்பட்ட முதலாளிகள் இலாபம் சம்பாதிக்கும் வர்த்தகமாக்குவது, ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகள் உழைப்பு குழுக்களை பயிற்றுவிக்கும் இடமாக கல்வியை மாற்றுவது, இலட்சக் கணக்கான மாணவர்கள் கல்வி பெறமுடியாமல் நடுத்தெருவில் தள்ளுவது, கல்வித் துறையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஊழியர்களின் தொழில், வாழ்க்கைத் தரங்களுக்கு வேட்டுவைத்தல் என்பனவே பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சீர்திருத்தத்தின் நிஜ திட்டம். ஏகாதிபத்தியவாதிகளதும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் அபிலாசைகளைக் கொண்டு இலவசக் கல்வியை நாசமாக்கும் விதத்தினை ஜயதிலக ஆணைக்குழுவின் அறிக்கை காட்டிக்கொண்டுள்ளது. அது பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "பல்கலைக் கழகக் கல்வி இனியும் அறிவைப் பெற்றுக்கொள்ளும் வெறும் வேதனையுடன் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றல்ல. எதிர்கால எஜமானர்களுக்கு அவசியமான விதத்தில் இலங்கையிலும் அவ்வாறே அதற்கு வெளியிலும் உள்ள மூலங்களில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொண்டு பாவிக்க கூடிய தொடர்புச் சாதனங்களின் திறமை கொண்ட பட்டதாரிகளாகும்"

கடந்த பல ஆண்டுகளாக யூ.என்.பி.அரசாங்கமும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் கல்விக்காக செலவிடப்பட்டுவந்த செலவுகளை கடுமையாக வெட்டித் தள்ளியது. உலக வங்கியின் சிரேஷ்ட கல்வி திட்டமிடலாளர் குறிப்பிட்டதாவது: "முழு ஆசியாவிலும் கல்வித் துறைக்கு குறைந்த நிதியை ஒதுக்கும் நாடாக இலங்கை இருப்பதாக" தெரிவித்துள்ளார். 1960பதுகளில் மொத்த வருமானத்தில் நூற்றுக்கு 8வீதத்தினை அரசாங்கம் கல்விக்குச் செலவழித்துள்ளது. இன்று அது அதன் மூன்றில் ஒரு பங்காக-நூற்றுக்கு 2.9வீதமாக வீழ்ச்சி கண்டுள்ளது.

தொழிலாளர் ,ஒடுக்கப்படும் மக்கள், மாணவர்கள் இந்த தாக்குதல்களுக்கு எதிராக இலவசக் கல்வி உரிமையை காக்கும் பொருட்டு கடந்த காலப் போராட்டங்களின் படிப்பினைகளைத் திரட்டிக் கொண்டு போராட்டத்தினை அணிதிரட்டுவது அவசியம்.

இலவசக் கல்வி என்பது முதலாளிகள் தந்த பரிசு அல்ல. 1930பதுகளின் கடைப்பகுதியில் இருந்து சிறப்பாக ட்ரொட்ஸ்கிச கட்சியாக விளங்கிய லங்கா சமசமாஜக் கட்சி நகர்ப்புறத் தொழிலாளர்களையும் கிராமப்புற ஏழைகளையும் அணிதிரட்டி தொடுத்த போராட்டத்தின் மூலம் வென்றெடுத்த உரிமையாகும்.

சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளின் துரோகத்தின் பெறுபேறாக 1977ல் ஆட்சிக்கு வந்த யூ.என்.பி.அரசாங்கம் அனைத்துலக மூலதனத்துக்கு பொருளாதாரத்தை திறந்துவிட்டது. இதன் மூலம் இலவசக் கல்வியை துடைத்துக்கட்டும் வேலைத்திட்டத்தினை ஆரம்பித்துவைத்தது.இதற்கு எதிராக தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், ஆசிரியர்கள், மாணவர்களை அரசியல் ரீதியிலும் கோட்பாட்டு ரீதியிலும் அணிதிரட்டப் போராடியது சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. யூ.என்.பி.யினால் கல்வி வெள்ளை அறிக்கையை முழுப்படியே அமுல் செய்ய முடியாது போனாலும் கல்வியின் பல்வேறு துறைகளிலும் வெட்டுக் கொத்துக்களை நடாத்த முடிந்ததற்கு காரணம், நிஜ வேலைத்திட்டத்தினை தொழிலாளர் வர்க்கத்தின் இடையே முன்னெடுப்பதை சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ, ஜே.வீ.பி.அரசியல் கட்சிகள் தடுத்தமையேயாகும்.

## சோ.ச.க. வேலைத்திட்டம்

பொதுஜன முன்னணி அரசாங்கம் இலவசக் கல்வி உரிமையை வெட்டித்தள்ள திரும்பிய அதே வேளையில் சோசலிச சமத்துவக் கட்சி (புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்) அதற்கு எதிராக ஆசிரியர்-மாணவர்-பெற்றோரை அணிதிரட்டும் வேலைத்திட்டத்தினை மிகவும் அவதானமான முறையில் தயார் செய்து முன்வைத்தது. ஆசிரியர்-மாணவர்-பெற்றோர் நடவடிக்கை குழுவை ஆரம்பித்த சோ.ச.க. இலங்கையின் சகல பாடசாலைகளிலும் இந்த நடவடிக்கை குழுக்களை அமைக்கும்படி வேண்டியது. மூடப்படும் பாடசாலைகளில் உள்ளமர்ந்து கொள்ளுதல், கல்விக்கு அவசியமான சகல நிதி, வசதிகளுக்காக மறியல் நடாத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரச்சாரம் மாணவர், ஆசிரியர்களின் ஜனநாயக உரிமைகளை காக்கும் பிரேரணைகளை முன்வைத்தது சோசலிச சமத்துவக் கட்சியே. இந்த பிரச்சார இயக்கத்தினை மேலும் முன்னெடுக்கும் பொருட்டு இந்த நடவடிக்கைக் குழு 'நிவேதிக' என்ற பத்திரிகையையும் வெளியிட்டுள்ளது.சகல அடிப்படை முதலாளித்துவ சொத்துக்களையும் நிர்மூலமாக்கி பொதுமக்களின் உரிமைகளைக் காக்கும் விதத்தில் பொருளாதாரத்தை புனருத்தாரணம் செய்வதற்காக போராட வேண்டும். பொதுஜன முன்னணி அரசாங்கத்தினை வெளியேற்றி, தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்வதே இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைக்கிடுவதற்கான ஒரே வழியாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்காவில் கடந்த 14 ஆண்டுகளுள் மாபெரும் வேலை நிறுத்தம், 180,000 பார்சல் ஊழியர்கள் வெளிநடப்பு

ஆகஸ்ட் 4ம் திகதி அமெரிக்காவைச் சேர்ந்த யுனைற்றட் பார்சல் சேர்விசைச் சேர்ந்த 180000 தொழிலாளர்கள் பார்சல்கள் பட்டுவாடா கம்பனியை இழுத்து மூடச் செய்து வெளிநடப்புச் செய்தனர். 1983ம் ஆண்டின் பின்னர் அமெரிக்காவில் இடம்பெற்ற பெரிய வேலைநிறுத்தம் இதுவாகும்.

அமெரிக்க ஜெனரல் மோட்டர்ஸ், பத்துமாத கால வேலை நிறுத்தம் இடம்பெற்றுவரும் பிற்ஸ்பேர்க் ஸ்ரீல் கம்பனி வரிசையில் இந்த யூனைற்றட் பார்சல் சேர்விஸ் தொழிலாளர் வேலைநிறுத்தமானது வேலை நிலைமைகளிலும் வாழ்க்கைத் தரத்திலும் அமெரிக்காவில் ஏற்பட்டுவரும் ஆழமான வீழ்ச்சியின் பேரில் இலட்சோப லட்சம் தொழிலாளர்களிடையே வளர்ச்சி கண்டுவரும் கொதிப்பைக் காட்டிக் கொண்டுள்ளது. இந்த வேலை நிறுத்தத்தில் முக்கியமான விவகாரம் கம்பனி அதிகரித்த அளவில் பகுதி நேர ஊழியத்தினை நம்பி இருந்ததேயாகும். வேலைநிறுத்தக் காரர்களில் 60வீதத்தினர்-120000க்கும் அதிகமானோர் — பகுதி நேர தொழிலாளர்களாக வகுக்கப்பட்டுள்ளதோடு இவர்கள் முழு நேர தொழிலாளர்களின் சம்பளத்தில் சரி அரைவாசிக்கும் குறைவான சம்பளத்தையே பெற்றுவந்தனர். ஒரு குறிக்கப்பட்ட கிழமையில் அவர்கள் 35, 40 அல்லது 50 மணித்தியாலங்கள் வேலை செய்தாலும் அவர்களுக்கு இதுவே கிடைத்து வந்தது.


இந்த யூ.பீ.எஸ்.கம்பனி ஒரு தனியுடமைக் கம்பனி. அமெரிக்க பார்சல் பட்டுவாடா சேவையில் நூற்றுக்கு 80 வீதங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுள்ளது. இதன் சேவைகளில் பெரும் பங்கானவை ஒரு காலத்தில் தபால் நிலையங்கள் வழங்கி வந்தவையாகும். இந்தக் கம்பனி தொழிலாளர்களை கைத்தொழில் பியோன்கள் அந்தஸ்துக்கு தரம் இறக்குவதன் மூலம் அமெரிக்க கம்பனிகளின் இலாபங்களை மேலும் ஓங்க வைப்பதில் முன்வரிசையில் நின்று கொண்டுள்ளது. இந்த பார்சல் பட்டுவாடா இராட்சதக் கம்பனிகள் தமது பெருக்கத்துக்கு பகுதி நேரத் தொழில்களை பரந்த அளவில் விரிவுபடுத்துவதிலேயே தங்கியுள்ளன. பகுதி நேரத் தொழிலாளர்களை இக்கம்பனி சுரண்டும் விதம் அமெரிக்காவின் பெரும் கம்பனிகளுக்கு எல்லாம் ஒரு மாதிரியாக விளங்குகின்றது.

கடந்த ஆண்டில் இந்தக் கம்பனி தனது தொழிலாளர்களில் பெரும் பங்கினருக்கு ஒரு வறுமை சம்பளத்தை வழங்குவதன் மூலமும், வேலை விரைவுபடுத்தல் வேகத்தை அதிகரித்தும் தனது இலாபத்தை 100கோடி அமெரிக்க டாலர்களாக்கிக் கொண்டது. இந்த வேலை வாங்கல் திட்டத்தினால் கம்பனியில் 60000 தொழிலாளர்கள் காயமடைந்ததோடு, பாதுகாப்பற்ற நிலைமை பற்றி என்றும் இல்லாத அளவிலான முறைப்பாடுகளும் செய்யப்பட்டன.1994ல் கம்பனி ஒரு தொழிலாளி சுமக்க வேண்டிய ஆகக் கூடுதலான பார்சலின் பாரத்தை கூட்டியது. பார்சல் தரம் பிரித்தலில் ஈடுபட்டால் என்ன பார்சல் பட்டுவாடாவில் ஈடுபட்டால் என்ன ஒருவர் 35 கி.கி.ல் இருந்து 70 கி.கி.களை சுமக்க வேண்டியுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளாக இந்த யூ.பி.எஸ்.கம்பனியில் ஒரு மணித்தியாலத்துக்கான சம்பளம் 8 டாலர்களிலேயே உறைந்து போய்க் கிடக்கின்றது. பகுதி நேரத் தொழிலாளர்களின் சராசரி சம்பளம் ஒரு மணித்தியாலத்துக்கு 9டாலர் தொடக்கம் 11டாலர் வரை வேறுபடுகின்றது. இதேவேளையில் ஒரு முழு நேர பட்டுவாடா சாரதியின் மணித்தியாலச் சம்பளம் 20 டாலர்களாகும். இன்றைய வேலை நிறுத்தத்தில் முழு நேர, பகுதி நேரத் தொழிலாளர்கள் இரு சாராரும் பங்கு கொள்கின்றனர்.

வேலைநிறுத்தத்தின் முதல் வாரத்தில் மறியல் நடைபெற்ற இடங்களில் ஒரு தொகை மோதுதல்கள் இடம்பெற்றண. இதனால் சோமர்வில்லி, மசாசூசெட்ஸ் பொஸ்டன், சிக்காகோ, மினர்பொலி மியாமி ஆகிய நகரங்களில் டசின் கணக்கான தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர். சில இடங்களில் தொழிலாளர்களின் மறியல் போராட்டத்தை கட்டுப்படுத்தும் விதத்தில் நீதிமன்றத்தின் தடை உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

வேலை நிறுத்தத்தின் ஆரம்ப நாட்களில் கிளின்டன் நிர்வாகம் சில உபாய நோக்கங்களுக்காக ஒரு பக்கச் சார்பற்ற ந்டிப்பைக் கடைப்பிடித்து, வேலை நிறுத்தத்தை இரத்துச் செய்யும் இடைக்கால உத்தரவை பிறப்பிக்குமாறு யூ.பி.எஸ்.சும் அமெரிக்க வர்த்தக சம்மேளனமும் விடுத்த வேண்டுகோள்களை வெள்ளை மாளிகை நிராகரித்தது. ஆனால் கிளின்டன் நிர்வாகம் திரையின் பின்னணியில் வேலை நிறுத்தத்தை சிரச்சேதம் செய்ய தொழிற்பட்டு வருகின்றது. வெள்ளை மாளிகை வேலை நிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வர ரீம்ஸ்டார் தொழிற் சங்கத் தலைவர் றொன் கரி, ஏ.எப்.எல்.-சீ.ஐ.ஓ.தலைமை, அமெரிக்கத் தொழிற்சங்க சம்மேளனம் ஆகியவற்றில் சார்ந்துள்ளது. கடந்த ஆகஸ்ட் 10ம் திகதி நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் நிர்வாகம் வரவுசெலவுத் திட்டத்தில் அடுத்துவரும் ஆண்டுகளுக்கு 1000 புதிய முழு நேரத் தொழில்களை ஏற்படுத்தவும் பகுதி நேர தொழிலாளர்களுக்கு ஆரம்ப சம்பளத்தில் எதுவித அதிகரிப்பும் செய்ய மறுத்ததால் அது முறிவடைந்தது.




வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள யூ.பீ.எஸ். தொழிலாளர்கள்

## ஒரு திருப்பு முனை

இந்த யூ.பீ.எஸ்.வேலைநிறுத்தம் அமெரிக்க அரசுகளின் அரசியல் நிலைமையில் ஒரு முக்கியமான திருப்பு முனையாக அமைந்துள்ளது. பல்லாயிரக் கணக்கான இளம் தொழிலாளர்களும் - தொழிலாளர்களில் பெரிதும் சுரண்டப்பட்ட பகுதியினருமான தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் அமெரிக்க கம்பனிகளுக்கு எதிரான போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கடந்த 15 வருட காலத்தில் அமெரிக்க வரலாற்றில் என்றுமில்லாத பெருந்தொகையான செல்வம், உழைக்கும் மக்களிடம் இருந்து செல்வந்தர்களின் கைகளுக்குச் சென்றது. செல்வந்தரான ஒரு வீதத்தினர் கொண்டிருந்த தனிப்பட்ட செல்வம் 20 வீதத்தில் இருந்து 40 வீதமாக இரட்டித்தது. கம்பனிகளின் நிர்வாக தரத்திலானவர்களின் சம்பளங்களும் போணசுகளும் மற்றும் நஷ்டஈடுகளும் 822 வீதத்தினால் அதிகரித்துள்ளது. ஆனால் தொழிலாளர்களின் நிஜ வருமானம் வீழ்ச்சி கண்டது. ஆதலால் அமெரிக்காவில் சமூக சமத்துவமின்மை ஏனைய முன்னேறிய கைத்தொழில் நாடுகளைக் காட்டிலும் இன்று பெரிதாக உள்ளது.

யூ.பி.எஸ் . தொழிலாளர் வேலைநிறுத்தம், அமெரிக்காவின் செழிப்பு பற்றிய வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் மோசடி சோடிப்புக்களையும் அமெரிக்க முதலாளித்துவத்தின் அசிங்கமான அந்தரங்கங்களையும புட்டுக் காட்டியுள்ளது: கம்பனி இலாபங்களின் செழிப்பும் வோல்ஸ் வீதி பங்குகளின் பெறுமதியிலான வியக்கத்தக்க அதிகரிப்பும் தொழிலாளர் வர்க்கத்தை முன்னொரு போதும் இல்லாத விதத்தில் சுரண்டுவதிலேயே நேரடியாக தொடர்பு பட்டுள்ளது.

அமெரிக்க ட்றொட்ஸ்கிசக் கட்சியான சோசலிச சமத்துவக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: “யூ.பி.எஸ்.சில் ஏற்பட்டுள்ள போராட்டம் தொழிலாளர்களின் ஒரு பிரிவினருக்கும் தனியொரு வேலை கொள்வோனுக்கும் இடையேயான ஒரு போராட்டத்துக்கு அப்பாற்பட்டது. இது சமரசம் செய்ய முடியாத இரண்டு எதிரெதிர் சமூகக் கொள்கைகளுக்கு இடையேயான மோதுதலாகும். யூ.பி.எஸ்.முதலாளித்துவ சொந்தக்காரர்களையும் முதலீட்டாளர் களையும் பிரதிநிதித்துவம் செய்வதோடு தொழிலாளர்களின் அவசியங்கள் சந்தையின் கண்டிப்பான விதிகளுக்கு கீழ்ப்பணிந்தாக வேண்டும் என வலியுறுத்துகின்றது. வேலைநிறுத்தக்காரர்கள் முழுத் தொழிலாளர் வர்க்கத்தின் பேரிலும் நின்று கொண்டுள்ளார்கள். அவர்களின் அடிப்படை அவசியங்கள்-கண்ணியமான சம்பளம் கொண்ட தொழிலைப் பெறுதல், சுகாதார வசதி, கல்வி, வீடு - செல்வத்தை உற்பத்தி செய்யும் உழைப்பை வழங்குவோரின் நலன்களின் பேரில் சமூகம் மீளமைக்கப்பட்டால் மட்டுமே நிறைவேற்றப்படும்."

சோசலிச சமத்துவக் கட்சியின் அறிக்கை தொழிற்சங்கவாதிகளையும் தொழிற் சங்கங்களுக்கு வெளியேயான பரந்த அளவிலான தொழிலாளர்கள்ளையும் வேலையற்றவர்களையும் அடிப்படைப் பொருளாதார வாழ்க்கையை மீளமைப்புச் செய்யும் கைத்தொழில், அரசியல் போராட்டத்தில் ஐக்கியப்படுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



**தென்கிழக்கு ஆசிய நாணய நெருக்கடி:**

# சர்வதேச நாணய நிதியம் தாய்லாந்து அரசாங்கத்துக்கு கட்டளைகள் பிறப்பித்துள்ளது

ஆகஸ்ட் முதற் பகுதியில் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் நாணய வீழ்ச்சியை தொடர்ந்து சர்வதேச நாணய நிதியம் தாய்லாந்தின் மீது ஒரு கடுமையான நிதி "மீட்பு" தீர்வினை திணித்துள்ளது.

ஜப்பானின் தலைமையிலான இந்த மீட்பு நடவடிக்கையில் ச.நா.நி. 15 பில்லியன் அமெரிக்க டாலர்களை தாய்லாந்து அரசாங்கத்துக்கு கடனாக வழங்கியுள்ளது. 1994ல் மெக்சிக்கோவில் பெசோ நாணயம் வீழ்ச்சி கண்டதன் பின்னர் வழங்கப்பட்ட ஆகக் கூடுதலான தனியொரு பிணைக் கடன் இதுவாகும். இதற்குப் பதிலாக ஜெனரால் யொங்சையுட்டின் தலைமையிலான அரசாங்கம் ஒரு தொகை சிக்கன நடவடிக்கைகளை கடைப்பிடிக்கத் தள்ளப்பட்டுள்ளது. இவை வாழ்க்கைத் தரத்தைப் பெருமளவுக்கு வெட்டிச் சரிப்பதோடு வேலையில்லாத் திண்டாட்டத்தின் மட்டத்தையும் உயர்த்தும்.

ச.நா.நி.1998 தாய்லாந்து வரவு செலவுத் திட்டத்தில் 3.1 பில்லியன் டாலர்களை வெட்டும் படியும் பயன்பாட்டு கட்டணங்களையும் பாவனைப் பண்டங்கள் மீதான (VAT) வரிகளை 7 வீதத்தில் இருந்து 10 வீதங்களாக கூட்டும்படியும் கேட்டுக் கொண்டுள்ளது. அத்தகைய நடவடிக்கைகள் தொழில்களை நாசமாக்கும். நாட்டின் ஏற்கனவே வரையறுக்கப்பட்ட சமூக சேவைகளை ஒழிக்கும். அதிகரிக்கும் விலைவாசிகளை மேலும் உக்கிரமாக்கும்.

இதே வேளையில் நாட்டின் கம்பனி வரிகள் வெட்டப்பட உள்ளன. அரசுடமையான நிறுவனங்களை தனியார்மயமாக்குவது விரைவுபடுத்தப்படும். வீழ்ச்சி கண்டுவரும் நிதித் துறையில் ஒரு துரித கம்பனி மீளமைபபு திட்டம் திணிக்கப்படும். கடந்த ஆகஸ்ட் 5ம் திகதி தாய்லாந்து வங்கி மொத்தமுள்ள 58 நிதிக் கம்பனிகளில் 42 கம்பனிகள் இயங்குவதை தடைசெய்துள்ளது.

இந்தத் தீர்மானம் "பொருளாதார கனவு படைக்கு" வாக்குறுதியளித்து கடந்த நவம்பரில் ஆட்சிக்கு வந்த யொங்சையுட் அரசாங்கத்துக்கு ஒரு அரசியல் நெருக்கடியை உருவாக்கியது. அரசாங்கத்தின் உத்தரவாதங்களில் மேலும் எதுவிதமான நம்பிக்கையும கொள்ளாத திகில் அடைந்த முதலீட்டாளர்கள் எஞ்சியுள்ள நிதிக் கம்பனிகளில் இருந்தும் சிறிய வங்கிகளில் இருந்தும் தமது வைப்புக்களை மீள எடுக்கத் தள்ளப்பட்டனர். தாய்லாந்து மன்னர் இந்த நிதி நெருக்கடியால் உருவான அச்சங்களை போக்க நேரடியாக தலையிடுமாறு தள்ளப்பட்டார்.

இரத்துச் செய்யப்பட்ட 42 நிதிக் கம்பனிகள் மட்டும் தாய்லாந்து வங்கிக்கு ஒரு பிரமாண்டமான தொகையை-21 பில்லியன் டாலர்களை கொடுக்க வேண்டியுள்ளது. இது தாய்லாந்து வங்கிகளும் நிதி நிறுவனங்களும் கொண்டுள்ள அறவிடமுடியாக் கடன் கும்பலில் ஒரு சிறு துளி மட்டுமே. நாட்டின் கம்பனி கடன்களில் பெருவாரியானவை குறுங்காலக் கடன்களாகும். இதில் 38 பில்லியன் டாலர்கள் இந்த ஆண்டில் கிடைக்க வேண்டியவையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## அறவிடமுடியாக் கடன்

கோல்ட்மன் சச்ஸ் வங்கி ஆய்வாளர் றொயி ராமோசின் படி "தாய்லாந்தின் அறவிடமுடியாக் கடன் மட்டம் ஏற்கனவே மெக்சிக்கோவின் உச்சி மட்டங்களைத் தாண்டிவிட்டது." 1994 டிசம்பரில் மெக்சிக்கன் பெசோ நாணயம் இரவோடிரவாக ஊசலாடத் தொடங்கியது. கடன்களைத் திருப்பிச் செலுத்தும் அரசாங்கத்தின் வல்லமை பற்றி ஏற்பட்ட அச்சம் காரணமாக வெளிநாட்டு மூலதனங்கள் திடீரென வாபஸ் பெறப்பட்டது.

தாய்லாந்து அரசாங்கம் தாய்லாந்து நாணயமான பாத்துக்கும் அமெரிக்க டாலருக்கும் இடையேயான நாணய மாற்று வீதத் தொடர்பை முடித்து, பாத்தை உலக நாணய சந்தைகளில் மிதக்க விட்டதன் விளைவாக ஜூலை 2ம் திகதி நாணய நெருக்கடி ஏற்பட்டது. தாய்லாந்து பாத் 23 வீதத்தினால வீழ்ச்சி கண்டது. அத்தோடு அயலில் அத்தகைய பொருளாதாரத்தை கொண்ட நாடுகளிலும் நெருக்கடியைத் தூண்டிவிட்டது.

* ஜூலை 11ம் திகதி பிலிப்பைன்ஸ்- குறைந்த பொருளாதார வளர்ச்சி விகிதத்தையும் சிறிய அளவிலான வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பையும் கொண்ட நாடு- அதன் பெசோ பெறுமானத்தில் 10சத வீழ்ச்சி கண்டது. பங்குச் சந்தை விலைகள் 22 வீதத்தினால் வீழ்ச்சி கண்டது.

* மலேசியன் மத்திய வங்கி தனது வெளிநாட்டு செலாவணி கையிருப்புக்களின் 12 வீதத்தை செலவழித்ததோடு வட்டி வீதத்தினை 50 வீதத்தினால் உயர்த்தியது. மலேசிய நாணயமான றிங்கிட்டை தூக்கிப் பிடிக்கவே இத்தனையும் நடந்தது. ஆனால் ஜூலை 14ம் திகதி அரசாங்கம் அத்தகைய தூக்கிப் பிடிக்கும் நடவடிக்கைகளை இரத்துச் செய்தது. இதனால் நாணயம் 4 வீதத்தினால் வீழ்ச்சி கண்டது.

* இந்தோனேஷியன் ரூபியா ஜூலை 21ம் திகதி - இப்பிராந்தியத்தின் உறுதியான நாணயமாக கருதப்பட்டது- தாக்கப்பட்டது. அமெரிக்க டாலருக்கு எதிராக 5.4 வீதத்தினால் வீழ்ச்சி கண்டது. வரலாற்றில் இது ஆகக் கூடிய வீழ்ச்சி.

* ஆசியாவின் நிதி, வர்த்தக நிலையங்களாக கருதப்பட்ட சிங்கப்பூரும் ஹொங்கொங்கும் இந்த நாணய வீழ்ச்சியில் இருந்து தலைதப்பவில்லை. ஹொங்கொங் நாணய அதிகாரிகள் ஹொங்கொங் டாலரை ஆதரிக்கும் பொருட்டு வட்டி வீதத்தினை அதிகரிக்கத் தள்ளப்பட்டனர்.

ச.நா.நி.தாய்லாந்து நிதி அமைப்பு சிதறுண்டு போவதைத் தடுக்க மட்டும் அல்லாது அப்பிராந்தியம் பூராவும் ஈடாட்ட நிலை ஏற்படுவதைத் தடுக்க தலையிட வேண்டியதாயிற்று.ச.நா.நி. தலையீட்டின் பின்னணியிலான முக்கிய பெரும் உந்து சக்தியாக ஜப்பான் விளங்கியது. பிராந்திய ரீதியில் ஏற்படும் எந்த ஒரு பொருளாதார வீழ்ச்சியினாலும் பெரிதும் பாதிக்கப்படுபவை ஜப்பானியக் கம்பனிகளே.

ஜப்பானிய வங்கிகளே தென்கிழக்கு ஆசியாவுக்கு பெருமளவிலான கடனை-150 பில்லியன் டாலர்களை வழங்கி உள்ளன. ஜப்பானிய உற்பத்தியாளர்களே பிராந்தியத்தில் பெரிய முதலீட்டாளர்களாக உள்ளனர். 1997 நடுப்பகுதியில் ஜப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பின்படி இப்பிராந்தியத்தில் ஜப்பானின் நேரடி முதலீடு 5.8 பில்லியன் டாலர்கள்.

மேலும் ஜப்பானிய நிதி, வங்கி அமைப்பும் கூட ஆட்டம் கண்டு போயுள்ளது. கடந்த ஆண்டில் அவற்றின் அறவிடமுடியாக் கடன் 1 ரில்லின் டாலர்களைக் கடந்து விட்டதாகக் கணிக்கப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் ஜப்பானின் கடன் ,முதலீட்டுக்கான எந்த ஒரு அச்சுறுத்தலும் ஜப்பானுக்குள்ளே இன்னும் பாரதூரமான நிதிக் குழப்பங்களை தூண்டிவிடும்.

ஆசிய அரசியல் தலைவர்கள் தமது நாணயங்களின் வீழ்ச்சிக்கு உடனடியாக வெளிநாட்டு நாணய ஊகக்காரர்களை- சிறப்பாக கோடீஸ்வரர் ஜோர்ஜ் கோரோசையே பழி சொன்னார்கள். மலேசியன் பிரதமர் மஹதீர் முகம்மது கூறுகையில் "அரசியல் ரீதியில் தூண்டிவிடப்பட்ட மேற்கத்தைய "சதி" இல்லாது போனால் தென்கிழக்கு ஆசியா நன்றாக இருக்கும்" என்றார்.

ஆனால் நெருக்கடிக்கு மிகவும் அடிப்படையான பொருளாதார நகர்வுகள் காரணமாக உள்ளன. தென்கிழக்கு ஆசியாவின் "புலி பொருளாதாரம்" என்ற பெயரில் 1980பதுகளில் வெளிநாட்டு மூலதனத்துக்கு மலிவான உற்பத்தி மேடையாக அமைக்கப்பட்ட தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேஷியா உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தைக் கண்டன. அதிகரிதத ஊழியத்தை கொண்ட பாதணிகள், துணிவகைகள், விளையாட்டுச் சாமான்களை அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் அனுப்பியதன் மூலம் இந்த வளர்ச்சியை இவை கண்டன.

இந்த நாடுகள் தமது நாணயங்களுக்கும் அமெரிக்க டாலருக்கும் இடையே ஒரு நிலையான நாணய மாற்று வீதத்தினைக் கொண்டிருந்தன. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உத்தரவாதம் வழங்கவும் ஏற்றுமதி விலைகள் நிலையாக இருக்கவும் இதைச் செய்தனர். ஆனால் சீனாவில் ஏற்பட்ட மலிவு உழைப்பு போட்டியானது இவர்களின் வளர்ச்சி கண்ட போட்டியை கடுமையாகப் பாதித்தது.

தாய்லாந்தின் "பொருளாதார அதிசயங்கள்" நாட்டின் தொழிலாளர் வர்க்கத்துக்கு ஒரு வழியைக் காட்டுவதற்கு மாறாக அவர்களுக்கு அதிகரித்த வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைந்த மெய் ஊதியத்தையும் கூட்டி, வறுமையை உருவாக்கி உள்ளது. அனைத்துலக மூலதனம் என்றும் இல்லாத விதத்தில் மலிவான உழைப்பைத் தேடுவதால் அனைத்து நாடும் தேடிக் கொண்ட பரிசு இதுதான்.




வானைத் தொடும் மாடி கட்டடங்களின் அடியில் உள்ள முடுக்கு சேரி வீடுகள்

படிப்பகம்

www.padippakam.com



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாகம்-6

1975 பெப்ரவரியில் இடம்பெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தலை வென்றதன் பின்னர் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தினால் வெளியிடப்பட்டதும் அமிர்தலிங்கத்தினால் மக்கள் பிரச்சாரத்துக்காக முன்வைக்கப்பட்டதுமான தனிநாடு கோரிக்கை, 1976 மே 14ம் திகதி நடைபெற்ற கட்சியின் வட்டுக்கோட்டை மகாநாட்டில் உத்தியோகபூர்வமான அரசியல் நிலைப்பாடாகியது. அந்த மகாநாட்டில் தமிழர் ஐக்கிய முன்னணியை தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி எனப் பெயர் மாற்றவும் தீர்மானம் செய்யப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அந்தத் தீர்மானத்துக்கான ஒரு பின்னணியும் அனைத்துலக, தேசிய ரீதியில் ஒரு அரசியல் பரிணாம நிலைமையும் இருந்து கொண்டிருந்தது.

1. கூட்டரசாங்கத்தின் குடியரசு அரசியலமைப்பு சட்டத்தின் 3 வது ஆண்டு, நிறைவான 1975 மே 22ம் திகதி யூ.என்.பி.தலைவர் ஜே.ஆர்.ஜயவர்தனா தமது கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதியில் இருந்து இராஜினாமாச் செய்து இடைத் தேர்தலை நடாத்தும்படி கோரிக்கை விடுத்தார். அன்றைய கூட்டரசாங்கத்திற்குப் பதிலாக எதுவிதமான ஈடாட்டமும் இல்லாது ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்யச் சபதம் பூண்ட ஒரு பயங்கரமான வலதுசாரி அரசாங்கத்தினை ஆட்சிப் பீடம் ஏற்றுவதற்கு மத்தியதர வர்க்கத்தினையும் குட்டி முதலாளித்துவத் தட்டினரையும் அணிதிரட்டும் முயற்சியின் ஒரு திருப்புமுனையாக அது விளங்கியது.

யூ.என்.பி. அத்தகைய ஒரு துணிச்சலான ஆரம்பிப்பில் இறங்கியமை அனைத்துலக அரசியல் நிலைமையின் தாக்கத்தினால் ஏற்பட்டது அல்ல என ஒரு பிறப்பிலேயே குருடாகப் பிறந்த ஒரு தேசியவாதியினால் மட்டுமே கூறமுடியும். 1975ம் ஆண்டு ஏப்பிரலின் முதல் இரண்டு கிழமைகளும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் பெற்ற பிரமாண்டமான தோல்விகளால் நிறைந்து போயிருந்தது. கம்போடியா, லாவோஸ், வீயட்னாமைக் கைப்பற்றிக் கொண்டிருந்த அமெரிக்கப் படைகள் பொது மக்களின் போராட்டங்களின் எதிரில் உயிரைப் பிடித்துக் கொள்வதற்காக கிடுநடுக்கம் பிடிக்க ஓட்டம் பிடிக்கும் நிலை உருவானது. தென்ஆசியாவில் இந்த ஆட்சி மையங்கள் சிதறடிக்கப்பட்ட ஒரு நிலைமையில் வெகு விரைவில் வேறு முகாம்களை அமைத்துக் கொள்ளும் அவசியம் ஏகாதிபத்திய வாதிகளுக்கு ஏற்பட்டது. இலங்கையில் யங்கி டிக்கி (ஜே.ஆர்.ஜயவர்தன) இதற்குப் பொருத்தமான கைப்பொம்மையென அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கண்டனர். அதற்கு அவரின் ஆட்சியை உறுதி செய்ய வேண்டிய சகலதையும் செய்ய அவர்கள் முன்வருவர் என எதிர்பார்க்க முடிந்தது. 1975 மே மாதத்தில் யூ.என்.பி.யின் "துணிச்சலான" சவாலின் பின்னணியாக இந்த பிற்போக்கு ஏகாதிபத்திய ஆதரவு விளங்கியது.

இந்த ஏகாதிபத்திய திட்டங்களை சவால் செய்வதை முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டரசாங்கம் நிராகரித்தது. கொழும்பு தெற்கு தொகுதியில் சமசமாஜக் கட்சி தொடர்ந்து வெற்றி பெற்று வந்திருந்த போதிலும் கூட்டரசாங்கம் யங்கி டிக்கியுடன் தேர்தலில் போட்டியிட யாரை நிறுத்தியது தெரியுமா? பிற்போக்கு முகாமில் இருந்து கொண்டு காலத்துக்கு காலம் முகாமை மாற்றிக் கொண்டு, தோல்வி கண்டு வந்த சிங்கள இனவாத கூச்சல்களுக்குப் பேர்போனவரான ஆர். ஆர். சூரியப்பெருமாவையே நிறுத்தியது. யங்கி டிக்கியை வெற்றியீட்ட வைக்கும் அமெரிக்கத் திட்டத்திற்கு இணங்க இது இடம்பெற்றது என்பதில் எதுவித சந்தேகமும் கிடையாது. சிறப்பாக கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதியைச் சேர்ந்த வெள்ளவத்தை, கிருலப்பனை பகுதிகளில் வாழ்ந்த இலட்சோப லட்சம் தமிழ் மக்களை அரசியல் ரீதியில் மேலும் குழப்பியடித்து நிராயுதபாணியாக்கிய இது திட்டமிடப்பட்டு நடைமுறைக்கிடப்பட்டது என்பதில் ஐயம் கிடையாது. தமிழர் ஐக்கிய முன்னணி வெளிப்படையாக இல்லாது போனாலும் யூ.என்.பி.க்கே ஆதரவு வழங்கிய தொண்டமான் தமது யூ.என்.பி. ஆதரவு நிலைப்பாட்டை முன்கூட்டியே பகிரங்கப்படுத்திக் கொண்டிருந்தார்.

ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஏற்ற விதத்தில் ஒரு யூ.என்.பி.ஆட்சியை அமைக்கும் இந்த ஆரம்ப நடவடிக்கைக்கு ஏற்ற விதத்தில் சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளின் துரோகிகளும் பங்கு கொண்ட முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டரசாங்கத்தினதும் தமிழ் முதலாளித்துவப் பகுதியினரதும் வேலைத் திட்டங்களை அந்த கொழும்பு தெற்கு இடைத்தேர்தலினுள் சவால் செய்த ஒரே அரசியல் கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. அனைத்துலக சோசலிச கொள்கையை அடிப்படையாகக் கொண்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு முதலாளித்துவ கூட்டரசாங்கம் ஒரு பெரும் சவாலாக இருக்காதது போலவே ஆட்சியைக் கைப்பற்ற துடித்து வந்த யூ.என்.பி.யும் அதனால் பாதிக்கப்படாத ஒன்றாக இருக்கவில்லை. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அன்று மத்திய குழு உறுப்பினரான ஆனந்த வக்கும்புரவை இடைத்தேர்தல வேட்பாளராக நிறுத்தி, சிங்கள-தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி இட்டுநிரப்ப வேண்டிய அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராட்டத்தில் இறங்கியது. கூட்டரசாங்கத்தின் வலதுசாரி ஈர்ப்புக்கும் யூ.என்.பி.யின் சவாலுக்கு எதிரிலும் சிங்கள-தமிழ் தேசிய இனங்கள் இரண்டையும் சேர்ந்த தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுத்து வந்த பெரும் ஆபத்துக்களை சுட்டிக்காட்டி, அவர்கள் எடுக்க வேண்டிய அரசியல் ஆரம்பிப்புக்களை தெளிவுபடுத்தியது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே. அந்தத் தெளிவுபடுத்தல்களின் பொருத்தத்தையும் செல்லுபடியாயான தன்மையையும் அளவிடுவது பு.க.க. பெற்றுக் கொண்ட வாக்குக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அல்ல; அன்று போலவே பிற்காலத்திலும் பொதுமக்கள் புறநிலை ரீதியில் கண்ட வரலாற்று நிலைமைகளுக்கு இணங்கவே அளவிட்டாக வேண்டும். அன்று பு.க.க. முன்வைத்த அரசியல் ஆய்வுகளுக்கும் மாற்று வேலைத் திட்டத்துக்கும் முழுப் புள்ளி கிடைக்கின்றது.

2. கொழும்பு தெற்கு தொகுதி இடைத்தேர்தலில் ஜே.ஆர்.ஜயவர்தன அதிகப்படியான பெரும்பான்மை(25800) வாக்குக்களால் வெற்றி கண்டதன் பின்னர் கூட்டரசாங்கத்தின் வலதுசாரி பயணம் யூ.என்.பி.யுடன் போட்டிக்கு இடம்பெற்றது. ஜூலை 18ம் திகதி இடம்பெற்ற இடைத்தேர்தலின் சூடு இன்னமும் தணியாத ஒரு நிலையில் முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சித் தலைவர்களை கூட்டரசாங்கத்தில இருந்து வெளியில் தள்ளத் தீர்மானித்தது. இதற்குச் சாட்டாக 1975 ஆகஸ்ட் 18ம் திகதி இடம்பெற்ற ஹர்த்தால் நினைவுதினக் கூட்டத்தில் என்.எம்.பெரேரா நிகழ்த்திய பேச்சுக் கொள்ளப்பட்டது.

என்.எம்.பெரேரா அன்று நிகழ்த்திய உரை, இன்று வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் எதிரில் செய்யும் கோழைத்தனமான கெஞ்சல்களைக் காட்டிலும் அப்படி ஒன்றும் சவாலானதாக இருக்கவில்லை. சமசமாஜ தலைவர் அரசாங்கத்துக்கு நினைவூட்டியது எல்லாம்மக்களை ஏமாற்றவே தாம் அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டுள்ளதாக தம்மால் சோடிக்கப்பட்ட கட்டுக் கதையையேயாகும். அதாவது "சோசலிசத்தை நோக்கிய பயணத்தை விரைவுபடுத்தவே நாம் அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டுள்ளோம்" என்பதேயாகும்.

இந்தப் பொய் கட்டுக்கதைகளை சிருஷ்டித்த வண்ணம் சமசமாஜ தலைவர்கள் கூட்டரசாங்கத்தினுள் நுழைந்து கொண்ட நாளில் இருந்து அதுவரை ஆற்றிய ஏகாதிபத்தியச் சார்பு கடமை பற்றி எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடம் இருக்கவிலலை. எனினும் சிறப்பாக 1968-75க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பரந்து வந்த தொழிலாளர் வர்க்க போராட்டத் தொடர்களினால் உருவான பீதியில் இருந்து தலையெடுக்க துரோகத் தலைவர்களின் ஒத்துழைப்பை பயன்படுத்திக் கொண்ட ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையில் வர்க்க கிளர்ச்சிகளின் நிலைமைகளைச் சிதறடித்துவிட ஊக்கத்துடன் செயற் பட்டனர். இரத்தம் தோய்ந்த துரோகங்களினால் பொதுமக்களின் எதிரில் நாற்றம் கண்டுபோய்க் கிடந்த சமசமாஜத் தலைவர்களை வெளியே தள்ளி வலதுசாரி அகதிகளாக்குவது அதற்கு உதவுவதாக இருக்கும் என அவர்கள் கணக்குப் போட்டனர்.

## பு.க.க. எச்சரிக்கை

எதிர்வந்து கொண்டுள்ள இந்த நிலைமையைப் பற்றி முன்கூட்டியே எச்சரிக்கை செய்தது ட்ரொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் மக்கள் முன்னணி வாதத்தை எதிர்த்துப் போராடி வந்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமேயாகும். அது முன்வைத்த சமசமாஜ-ஸ்டாலினிச தலைவர்களை "முதலாளித்துவ அரசாங்கத்தில இருந்து வெளியேற்று" என நெருக்கும் சுலோகத்தைச் சூழ்ந்து முன்கூட்டியே தனது அரசியல் சுயாதீனத்தினை மீண்டும் ஸ்தாபிதம் செய்யப் போராடாது இருந்திருக்கும் அளவுக்கு தொழிலாளர் வர்க்கம் அரசியல் ரீதியில் நிராயுதபாணியாகி, ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவில் இருந்து தனிமைப்பட்டும் இருந்தது. பிற்போக்காளர்களின் கால் உதையை வாங்கிக் கொண்டு ஈடாட்டம் கண்டவர்களாக பின் கதவினால் வெளியே தூக்கி வீசப்படும் "தொழிலாளர் கட்சிகள்" அத்தகைய ஒரு நிலைமையில் இட்டுநிரப்பக் கூடிய முற்போக்குப் பாத்திரம் எதுவும் கிடையாது. சமசமாஜக் கட்சி தனது நடைமுறை மூலம் அன்றில் இருந்து இன்றுவரை இந்த உண்மையை நிரூபித்துக் கொண்டுள்ளது.

நாம் மேலே காட்டிய ஒரு அரசியல் பின்னணியின் கீழேயே தனிநாடு கோரிக்கையையும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாகப் பெயர் சூட்டியமையையும் கொண்டிருந்த வட்டுக்கோட்டை மகாநாடு, தமிழர் ஐக்கிய முன்னணியால் நடாத்தப்பட்டது.

இத்தகைய ஒரு பின்னணியானது முதலாளித்துவ, முதலாளித்துச் சார்பு அரசியல் கட்சிகளுக்கு இடையேயான கொடுக்கல் வாங்கலாக அரசியல் மேற்கட்டுமானத்தில் இடம்பெற்ற சம்பவங்களை மட்டும் அல்லாது வர்க்கப் போராட்டங்களின் தீவிரமும் இதனுள் அடங்கி இருந்தது.

சிங்களம் பேசும் தொழிலாளர் வர்க்கத்தினை முதலாளித்துவக் கூட்ட ரசாங்கம் தொடுக்கும் தாக்குதல்களில் இருந்து மீட்டு போராட்ட பாதையில் இழுத்து வைத்திருந்ததைப் போலவே வடக்கில் ஒடுக்கப்படும் தமிழ் மக்களும் கூட்டரசாங்கம் இனவாத தாக்குதல்களுக்குள் கட்டிப்போட்டு தமது வாழ்க்கைக்கு தொடுத்த தாக்குதல்களுக்கு எதிராகவும் கிளர்ந்து போராடும் நிலைமைக்கு கிளம்பினர். இத்தகைய ஒரு கூட்டுத் தாக்குதலை நசுக்கி பிடித்துக் கொள்ளக் கூடிய ஒரு சக்தியை முதலாளித்துவ அரசின் ஆயுதப் படைகள் கொண்டிருக்கவில்லை. ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ சேவைக்கு அர்ப்பணம் செய்த ஆயுதப் படைகளின் தலைமைகளைச் சேர்ந்தவர்கள் சிறீலங்கா-யூ.என்.பி. இருசாராரிடமுமே சிறைப்பட்டுக் கிடந்தனர்.

இந் நிலைமையில் இருந்து தலையெடுப்பதற்காக சமசமாஜக் கட்சியை அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றி அகதி நிலைமைக்குள் தள்ளுவது சாத்தியமானது என ஆளும் வர்க்கம் சிந்தித்தது தமிழ் மக்களை பொறுத்த மட்டில் தமிழர் ஐக்கிய முன்னணி தலைவர்களை சிறைக்குள் தள்ளி அதை இட்டுநிரப்பிவிட முடியும் எனவும் அவர்கள் எண்ணினர்.

தமிழர் ஐக்கிய முன்னணியின் வட்டுக்கோட்டை மகாநாடு நடைபெற்று ஒரு கிழமை கழிவதற்குள் அதன் தலைவர்களை கைது செய்ய வேண்டும் என்ற தீர்மானத்துக்கு முதலாளித்துவ சிறீலங்கா கம்யூனிஸ்ட் அரசாங்கம் வந்தது.

## கூட்டணி தலைவர்கள் கைது

கூட்டரசாங்கத்தினால் குடியரசு தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டு இருந்த மே 22ம் திகதி இடம்பெறும் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிக்கும்படி கோரும் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த குற்றத்தின் பேரில் 1976 மே 21ம் திகதி அ. அமிர்தலிங்கம். வீ.என்.நவரத்தினம், கே.பி.இரத்தினம், கே.துரைரத்தினம், எம்.சிவசிதம்பரம் முதலான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மே 22ம் திகதி தம்புள்ளையில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் பேசிய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க பின்வருமாறு குறிப்பிட்டார்: "குடியரசு அரசியலமைப்பையும் நாட்டின் அமைதியையும் காப்பதற்கு தமிழரசுக் கட்சிக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க எனக்கு

www.padippakam.com



நேரிட்டது." என்றார்.

அவர் ஒரே வசனத்தில் பொருத்திச் சொன்ன இரண்டு காரணங்களும் பொய்யானவை. 1. குடியரசு தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுவதைக் கட்டாயமாக்கும் சரத்துக்கள் அரசியலமைப்பில் இருக்கவில்லை.ஆதலால் விழாவைப் பகிஷ்கரிக்கும்படி கோருவது அரசியலமைப்புக்கு முரணானது அல்ல. ஆதலால் அத்தகைய கோரிக்கையை விடுத்தவர்களை கைது செய்வது அரசியலமைப்புச் சட்டத்தினைக் காப்பதாக இருக்கவில்லை.

2.இந்தக் கட்டுரைத் தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு 1972 அரசியலமைப்புச் சட்டம் தொழிலாளர் வர்க்கத்துக்கும் தமிழ் மக்கள் உட்பட்ட ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான உள்நாட்டு யுத்தத்தின் திட்ட வரைவாக விளங்கியது. அதனைக் காப்பது என்பது சமாதானத்தைக் காப்பதன் எதிரிடையாக விளங்கியது.அரசியலமைப்புக்கு எதிர்ப்புக் காட்டியவர்களை கைது செய்வது என்பது நாட்டில் சமாதானத்தைக் காப்பதாகிவிடாது. யுத்தத்தினை நோக்கி மேலும் ஒருபடி முன்செல்வதாகும். அந்தப் பிற்போக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் வரைஞரான கொல்வின் ஆர்..டி.சில்வாவின் முதுகில் விழுந்த கால் உதையில் அதுவே பொறிக்கப்பட்டு இருந்தது.

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தலைவர்களுக்கு எதிராக சோடிக்கப்பட்ட உயர் நீதிமன்ற வழக்கின் தன்மையும் அதையே சுட்டிக்காட்டியது. நீதிமன்ற வழக்கு விசாரணை ஜூரர்கள் அற்ற விதத்தில சிறப்பு அவசரகாலச் சட்டத்தின் கீழ் நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் மூவரைக் கொண்ட ஒரு நீதிமன்றத்துக்கு சந்தேக நபர்களை பற்றிய வழக்கு விசாரணையை நடாத்த நியாய ஆதிக்கம் கிடையாது என்பதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலைப்பாடாக விளங்கியது. அப்பட்டமாகச் சொன்னால் அதன் அர்த்தம்: நிறுவப்பட்ட நீதிமன்றம் சட்டவிரோதமானது.

வழக்கு நீதி விசாரணைக்கு வந்து இரண்டு மாதங்களின் பின்னர் 1976 செப்டம்பர் 19ம் திகதி இந்தச் சட்டப்பிரச்சினை மீது தீர்ப்பு வழங்கப்பட்டது. மாபெரும் சட்ட வல்லுனராக துள்ளி வந்தவரும் பிற்போக்கு வலதுசாரியாகப் புகழ்பெற்றவருமான நீதி அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவின் நிலைப்பாட்டையன்றி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டையே நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. அதாவது அமுலில் இருந்த அவசரகாலச் சட்டம் சட்டவிரோதமானது. நீதிமன்றம் எதிரிகளை விடுதலை செய்தது.

தோல்வியை ஒப்புக் கொள்ள மறுத்த அரசாங்கம் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தது. அதன் இலக்காக இருந்தது த.வி.கூ.தலைவர்களை எதுவிதத்திலும சிறைக்குள் தள்ளி விடுவது அல்ல.1977ல் நடைபெற இருந்த பொதுத் தேர்தல் நெருங்கி வந்து கொண்டிருந்த வேளையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் தேர்தல் இலாபத்துக்கான பிற்போக்கு உடன்படிக்கை செய்து கொள்ளும் நோக்கத்தை அரசாங்கம் கொண்டிருந்தது. எனினும் நீதிமன்றத்தின் முதல் தீர்ப்பை மேன்முறையீடு இல்லாமல் ஒதுக்கி விடுவது முடியாது போயிற்று. ஏனெனில் அந்த தீர்ப்பு பாரதூரமான நிர்வாக நெருக்கடியைத் தோற்றுவித்தது.

நடைமுறையில் இருந்து கொண்டிருந்த அவசரகாலச் சட்டம் சட்டவிரோதமான தாயின் அதன் கீழ் அது வரை காலமும் எடுக்கப்பட்ட சகல நிர்வாக நடவடிக்கைகளும் செல்லுபடியாகாது போகும். அது முதலாளித்துவ ஆட்சியின் வீழ்ச்சியை தோற்றுவித்தது. பாராளுமன்றம் என்ற திரையினால் மூடி பொலிஸ்-இராணுவ ஆட்சிக்கு கதவுகளைத் திறந்து விடும் அவசரகாலச் சட்ட ஆட்சி வீழ்ச்சி காணுமானால் முதலாளி வர்க்கத்தின் புறத்தில் இருந்து கொண்டுள்ள தீர்ப்பு, இராணுவ -பாசிச சர்வாதிகாரத்துக்கு மாறுவதாகும். அன்று அதைச் செய்யக் கூடியதாக இருந்ததா? ஒரு புறத்தில் தெற்கில் தொழிலாளர் வர்க்கம் கொதித்து வர்க்கப் போராட்டப் பாதையில் இறங்கக் கர்ச்சித்துக் கொண்டிருந்த நிலையில் வடக்கில் தமிழ் இளைஞர் பகுதியினர் ஆயுதம் தாங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தனர். இராணுவ சர்வாதிகாரத்துக்கு மாறிச் செல்வது என்பது பெரும் ஆபத்துக்களைக் கொண்ட ஒரு சூதாட்டமாக மாற இடமிருந்தது.



ஸ்டாலினிஸ கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் பீட்டர் கெனமனுடன் கூட்டரசாங்க பிரதமர் சிரிமாவோ பண்டாரநாயக்க



அ. அமிர்தலிங்கம்



ஜே.ஆர். ஜயவர்தன

ஆதலால் சிறீலங்கா கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் செய்து கொள்ளும் சமரசத்தின் மூலம் அதன் தலைவர்களுக்கு எதிரான வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ளவும் அவசரகாலச் சட்ட ஆட்சியைச் சட்டரீதியானதாக்கவும் முயன்றது.

அரசாங்கத்தின் மேன்முறையீட்டினை ஆய்வு செய்த உயர்நீதிமன்ற நீதியரசர் விக்டர் தென்னக்கோன் உட்பட ஐவரைக் கொண்ட நீதிபதிகள் சபை, அவசரகாலச் சட்டம் சட்ட ரீதியானது எனத் தீர்ப்பு வழங்கியது. அப்போது எழுந்து நின்ற சட்ட மா அதிபர் 'தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான வழக்கை தொடர்ந்தும் முன்னெடுப்பது இல்லை' எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.

முதலாளித்துவ அரசின்' இணைந்த பாகமான நீதிமன்றத்தின் பக்கச் சார்பற்ற தன்மை எனப்படுவதைப் போலவே முதலாளித்துவக் கட்சிகளுக்கு இடையே பேரம் பேசுவதிலும் அதன் நாற்றம் கண்ட தன்மைக்கு இது நல்ல ஒரு எடுத்துக் காட்டான சந்தர்ப்பமாகும்.

## யூ.என்.பி.யுடனான கூட்டை நோக்கி

எனினும் சிறீலங்கா கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கத்தின் கணக்குகள் சறுக்கிப் போயின. வழக்கில் இருந்து விடுதலையான த.வி.கூ.தலைவர்கள் உடனடியாக யூ.என்.பி.யுடன் கூட்டு அமைப்பது பற்றிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தனர்.

அது தமிழ் மக்களை இனவாத முதலாளித்துவக் கூட்டரசாங்கத் தாச்சியுடன் கட்டிப் போடுவதற்குப் பதிலாக அடுப்புக்குள் தள்ளிவிடும் ஒரு விதிமுறையாகும் என்பதை அறியாமல் தமிழர் விடுதலைக் கூட்டணி எடுத்த ஒரு தீர்மானம் அல்ல. அது தமிழ் முதலாளி வர்க்கம் நனவான விதத்தில் எடுதத ஒரு தீர்மானம் ஆகும். சிறப்பாக அமெரிக்க ஆட்சியாளர்களை முன்னணியில் கொண்ட ஏகாதிபத்தியவாதிகள் யூ.என்.பி.க்கு வழங்கியிருந்த ஆதரவுக்கு அமைய எடுத்த ஒரு தீர்மானமாகும்.

அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் சிறீலங்கா-கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் தொடர்பான தமது எதிர்ப்பையும் மாற்று ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்பி.தொடர்பான தமது நட்பையும் "கூட்டுச்சேரா மகாநாடு" எனப்படுவதன் பின்னால் மூடி மறைத்துக் கொண்டது. கூட்டுச்சேரா மகாநாடு ஏகாதிபத்திய வாதிகளுக்கும் சோவியத் ஸ்டாலினிச முகாமுக்கும் இடையே சுற்றுமாற்றுக்களுக்கு பின் தங்கிய நாடுகளில் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் திணித்த ஒரு மண்டபம் ஆகியது. மூன்றாம் உலகம் எனப்படுவதன் குரலாகக் காட்டிக் கொண்ட இந்த மண்டபம் உண்மையில் அந்தப் பின்தங்கிய நாடுகளில் வாழ்ந்த நான்காம் உலகைச் சேர்ந்த ஒடுக்கப்படும் மக்களின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளது.

1976ஜூலை-ஆகஸ்ட் காலங்களில் அந்த கும்பல் இலங்கைக்கு வந்தது சரிந்து வீழ்ந்து வந்த முதலாளித்துவக் கூட்டரசாங்கத்துக்கு பிராணவாயு ஏற்றுவதற்கேயாகும். இன்னமும் தமது ஏகாதிபத்தியச் சார்பு தன்மையை முழுமனே அம்பலமாக்கிக் கொள்ளாமல் இருந்து வந்த காஸ்ட்ரோ, கடாபி, அரபாத் போன்றவர்களை அணைத்துக் கொண்ட சிறிமாவோ பண்டாரநாயக்க இக்கட்டத்தில் அரசாங்கத்தில் இருந்து வெளியேற்றப் பட்டிருந்த சமசமாஜக் கட்சித் தலைவர்கள் உட்பட்ட முழு இடதுசாரி வேஷதாரி கும்பல்களதும் ஆசீர்வாதங்களுக்கு மத்தியில் கூட்டுச்சேரா நாடுகளின் , தலைவியாகிக் கொண்டார். ஆனாலும் ஏகாதிபத்திய வாதிகளோ அக்கட்டத்தில் யூ.என்.பி. ஆட்சியாளர்களை இலங்கையில் ஆட்சிக்கு கொணரத் தீர்மானம் செய்திருந்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாளித்துவத் தலைவர்கள் புறத்தில் ஏகாதிபத்திய சூறாவளி வீச்சுக்கு அமைய ஆதரவு யூ.என்.பி. பக்கம் வீசியது.அது தற்செயலானது அல்ல. அது இந்தச் சகாப்தத்தில் ஒடுக்கப்பட்ட மக்கட் குழுக்களின் மீது ஆதிக்கம் கொண்டிருந்த சகல முதலாளித்துவ இயக்கங்களதும் ஏகாதிபத்தியச் சார்பு தன்மையைச் சுட்டிக் காட்டியது. இத்தகைய முதலாளித்துவ தேசியவாத இயக்கங்கள் ஆதரவுத் தேடித் திரும்பியது தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் பக்கம் அல்ல.பொதுமக்களை ஒடுக்கும் முதலாளித்துவ, ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் பக்கமாகும்.

ஒடுக்கப்படும் மக்களைப் பற்றி அனுதாபம் கொண்டுள்ளதாகக் காட்டிக் கூச்சல் போடும் முதலாளித்துவத் தலைவர்கள், தலைவிகளின் களிசான்களிலும், சேலைத் தலைப்புக்களிலும் தொங்கிக் கொண்ட இடதுசாரி தீவிரவாதிகள் என்றும் தமது ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்தின் இந்தப் பிற்போக்குத் தன்மையை மூடி மறைக்க முயன்றுவந்தனர். இந்தத் தலைப்புக்களில் அவர்கள் கட்டித் தொங்கவிடும் குஞ்சம் என்ன தெரியுமா? தொழிலாளர் வர்க்க புரட்சியாளர்கள் தமது சுயாதீன அரசியல் விதிமுறைகளை கைகழுவிவிட்டு முதலாளித்துவ மோசடிக்காரர்களின் சுலோகங்களிலும் வேலைத்திட்டங்களிலும் தொங்கிக் கொள்ள வேண்டும் என்பதேயாகும். இதற்கு உதாரணமாக -இத்தகைய கெடுதிக்கான ஒரு தொனியாக சமீபகாலக் குரலைக் காட்ட முடியும் . சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் தீர்வினை(பொதியினை) சுமந்து கொள்ளச் சபதம் பூண்ட 'தியச' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த அஹிங்சக பெரேரா என்பவர் 1970பதுகளின் நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கும் நற்சான்றிதழ் வருமாறு : அரச நிர்வாகிகள் தமது உரிமைகளை ஒவ்வொன்றாகப் பறித்துக் கொள்ளும் போது சிங்கள சமூகத்துடன் உறவை கட்டியெழுப்பிக் கொண்டு அதற்கு எதிராக அணிதிரள தமிழ் தலைவர்கள் ஈடுபடாததற்குக் காரணம், சிங்களத் தீவிரவாதிகள் சிறுபான்மை தேசிய இனங்களுக்கு தொடுத்த தாக்குதலேயாகும்."(சிங்களவர்களுக்கு இல்லாத தமிழர்களுக்கு உள்ள பிரச்சினைகள் என்ன? பக்கம்-21)

இந்த ஆய்வின்படி "அரச நிர்வாகிகள்" அல்லது "சிங்கள சமூகம்" அல்லது "சிங்கள தீவிரவாதிகள்", அல்லது "தமிழ் தலைவர்கள்" ஆதியவற்றில் ஒன்றுக்குத் தன்னும் வர்க்கத் தரம் கிடையாது. ஆதலால் "சிங்கள சமூகம்" சிறுபான்மை தேசிய இனங்களுக்கு தாக்குதல் தொடுக்கும் "சிங்களத் தீவிரவாதிகள்" கொண்டதாக மாறுகிறது. அது மட்டுமன்றி வர்க்கங்கள் இல்லாத "தமிழ் தலைவர்கள்" இதற்குப் பதில்நடவடிக்கையாக "சிங்கள சமூகத்துடன்" உறவுகளுக்கு ஆத்திரப்படுகின்றார்கள். தீர்வு பாற்கடலில் இருந்து தோன்றும் வெண்ணெய்ப்பப்படத்தைப் போன்ற ஒரு பொதுஜன முன்னணியின் அரசியல் தீர்வு பொதியைப் போன்றது. இதைக் காட்டிலும் திரிக்கப்பட்ட பார்வையும் அங்கவீனமான ஆய்வும் வேறு இருக்க முடியுமா?

அத்தகைய ஒன்று இருக்க முடியாது என நாம் சந்தேகித்து இருந்தால் எம்மை மன்னிக்க வேண்டும்! அத்தகைய கருத்துக்கள் இருக்கவே செய்கின்றன. அஹிங்சக பெரேராவின் மேற்சொன்ன உன்னத வாக்கியங்களை உள்ளடக்கிய கட்டுரைகள் நூலாக வெளிவந்த போது அதற்கு முன்னுரை வரைந்த பேர்வழி அவ்வாறு திரையில் நின்று காட்டுகின்றார். அது வேறு யாரும் அல்ல. அரசியல் அரங்கில் நீண்டகாலமாக விநோத பாத்திரத்தினை வகித்துவந்த பேராசிரியர். கார்ளோ பொன்சேகாவே. அஹிங்சா பெரேராவின் நூலுக்கு வழங்கியுள்ள தமது முன்னுரையின் இறுதி பந்தியில் அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"தேசியவாத செயற்பாட்டு மாதிரி வேறுபாட்டில் மனித இன செயற்பாடு மாதிரியானது. ஆதலால் அவை முக்கியமாக வழிநடாத்தப்படுவது பொருளாதாரக் காரணிகளாலா என்பது சந்தேகத்துக்கு இடமானது. மார்க்சின் சிந்தனையில் முதல் இடம் வகிப்பது பொருளாதாரக் காரணிகளாகும். ஆதலால் தேசியவாத மாதிரிகளில் உள்ள தன்மையை புரிந்து கொள்ள கார்ள் மார்க்சைக் காட்டிலும் உதவுவது உயிரின பண்புகளை சிறந்த முறையில் ஆய்வு செய்த சார்ள்ஸ் டார்வினின் சிந்தனை மரபுகள் என நான் நினைக்கின்றேன்." (முன்னுரை: சிங்களவர்களுக்கு இல்லாத தமிழர்களுக்கு உள்ள பிரச்சினை என்ன?)

இலங்கையின் நாகரீகத்தின் ஆரம்ப காலம் தொட்டே தேசிய இனங்களும் தேசிய அரசும் இருந்து வந்ததாகக் கூறும் சிங்கள இனவாதிகளுக்கும் அப்பால் செல்லும் கார்லோ பொன்சேகா ஆதி மனிதனின் காலத்தில் இருந்தே தேசியவாத பண்புகள் இருந்ததாகவும் கூறுகின்றார். இது இப்படியானால் தேசியவாதத்தில் இருந்து மீட்சி பெறவே முடியாது. தேசியவாத, இனவாத மோதுதல்களை நியாயப்படுத்தும் இரத்தப் பிசாசுகள் இடையே மட்டுமே அத்தகைய கருத்துக்கள் வேரூன்றும். சுயநிர்ணய உரிமையை முன்வைத்து பொதுஜன முன்னணியின் அரசியல் தீர்வு 'பொதியை' தூக்கிப் பிடித்து இனவாத யுத்தத்துக்கு வக்காலத்து வாங்கும் அஹிங்சா பெரேரா, "கார்லோ பொன்சேகாவினால் செய்யப்பட்ட தலையீடு இந்த விடயத்தை மேலும் ஆய்வு செய்பவர்களுக்கு மேலும் சிறப்பு வழியை காட்டும் என நான் நம்புகின்றேன்." என்கிறார்.

தொடரும்.

படிப்பகம்

www.padippakam.com

# வடக்கு-கிழக்கு

## இனவாத யுத்தமா? சமாதானமா?

வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் சந்திரிகா பண்டாரநாயக்கவின் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான யுத்தம் காரணமாகவும் ஒடுக்குமுறைகள் காரணமாகவும் பொதுமக்கள் மரணமடையும் சம்பவங்கள் மிகவும் மலிந்து விட்டன.

கடந்த மே 5ம் திகதி பள்ளிக்குடாவில் இருந்து பொதுமக்களை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மீன்பிடிப் படகு கவிழ்ந்ததன் காரணமாக ஆறு பச்சிளம் குழந்தைகள் உட்பட பதினெட்டுப் பேர் மரணமான சம்பவத்துடன் முதலாளித்துவ ஆட்சியாளர்களினதும் அமைப்புக்களினதும் கையாலாகாத்தனங்கள் மீண்டும் அம்பலத்துக்கு வந்துள்ளன.

யாழ்ப்பாண்ததில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பிராந்தியத்தில் வாழ்ந்த மக்கள் இங்கு வாழ வழியற்று, வன்னியை விட்டு வெளியேறும் நோக்கில் மீன்பிடித் தொழிலுக்கென வடிவமைக்கப்பட்ட கல்நார் இழைப் படகில் 30 பேர் ஏற்றப்பட்டு மூன்று வள்ளங்கள் தொடுவையில் இணைக்கப்பட்டுச் சென்று கொண்டிருக்கும்போது ஒரு வள்ளம் கடலில் கவிழ்ந்துள்ளது. ஏனைய பயணிகளைக் காப்பாற்றும் நோக்கில் கவிழ்ந்த படகின் தொடு கயிற்றை வெட்டிவிட்டு ஏனைய இரு படகுகளும் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணமாகிவிட்டன. இதே விதத்தில் 1996 ல் வன்னியில இருந்து இந்தியா சென்ற படகு மூழ்கியதில் 13 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். 1997 பெப்ரவரியில் வலைப்பாடு இறங்கு துறையில் இருந்து இந்தியா சென்ற 160பயணிகளைக் கொண்ட ட்ரோலர் படகு கவிழ்ந்ததில் 135 தமிழ் மக்கள் கோரமாகக் கொல்லப்பட்டனர்.

கடந்த மே 13ம் திகதி பேரினவாத முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் 'ஜெய சிக்குறுயி' இன அழிப்பு நடவடிக்கையின் ஒரு பாகமாக முள்ளிவாய்க்கால் கடற்கரையில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சிறீலங்கா அரசாங்கத்தின் விமானப்படையின் கிபீர் விமானங்கள் நடாத்திய குண்டுவீச்சில் 7 மீனவர்கள் கொல்லப்பட்டனர். 6பேர் படுகாயமடைந்தனர். ஆறுக்கும் மேற்பட்ட படகுகள் முற்றாகச் சேதமடைந்தன. வலைகள் எரிந்து நாசமாகியுள்ளன. 40க்கும் அதிகமான தென்னை மரங்கள் முறிந்து போயுள்ளன. அந்தக் கடற்கரை கசாப்புக் கடைபோல் இரத்தம் ஓடிக்காய்ந்து போய் இருந்தது. சம்பவம் நடந்த மூன்றாம் நாள் அப்பகுதிக்கு கிபீர் வரும் சத்தம் தூரக் கேட்டதும் அங்கு நின்ற மாட்டுக் கூட்டங்கள் புழுதியைக் கிளறிக் கொண்டு ஓடியதைக் காணக் கூடியதாக இருந்தது.

மன்னார்-நாச்சிக்குடா பகுதியில் இந்தக் கிபீர் விமானங்கள் நடாத்திய தாக்குதலில் 3மீனவர்கள் ஸ்தலத்திலேயே பலியானார்கள். இரு குழந்தைகள் உட்பட 5பேர் படுகாயமடைந்தனர். 35 கல்நார் இழைப் படகுகளும் 9 வள்ளங்களும் முற்றாகச் சேதமடைந்தன.

"சாதாரண சிறிய ஓட்டைகள் ஒட்டுவதற்கே 2000, 3000 ரூபாய்கள் செலவாகின்றன. வெளி இணைப்பு மோட்டார் இணைப்பதற்கான வள்ளத்தில் திருத்த வேலைகளுக்கு ரூபா.12000 செலவாகின்றது" என லாறஸ் என்ற மீனவர் தெரிவித்தார். இந்த நிலையிலேயே 35 படகுகள் சல்லடையாக்கப்பட்டுள்ளன. இதனால் பல மீனவர்கள் தொழில் இல்லாது முடங்கிப் போய்க் கிடக்கின்றார்கள்.

இந்நடவடிக்கையினால் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ரிவிரச, சத்ஜய, எடிபல, ஜெய சிக்குறுயி இராணுவ நடவடிக்கைகள் மூலம் உற்பத்தி அழிப்புடன் இன அழிப்பும் தொடர்கிறது.

ஏப்பிரல் 10ம் திகதி முழங்காவில் பகுதியைச் சேர்ந்த மயானக் காட்டுப் பகுதியில் முழங்காவில் வைத்தியசாலைத் தொழிலாளர்கள் இருவர் சவக்குழிவெட்டிக் கொண்டிருந்தனர். மாட்டு வண்டியில் சுருட்டப்பட்டுக் கிடந்த இரண்டு பாய்கள் விரிக்கப்பட்டன. அதற்குள் ஒரு பெண்ணின் சடலம் இருந்தது. அருகில் நின்ற ஆடவர் அந்தச் சடலத்தை குனிந்து முத்தமிட்டார். பின்னர் அச்சடலம் அடக்கம் செய்யப்பட்டது. இன்றைய யுத்த நிலைமைகளின் கீழ் உழைப்பு, வருமானம் கிடையாத மக்கள் நடாத்தும் "உத்தியோகபூர்வமான" சவ அடக்கத்தின் பாணி இதுவே.

இதே முழங்காவில் பகுதியில் சில நாட்களின் பின்னர் மற்றொரு மரணம் இடம்பெற்றது. இறந்தவர் ஒரு தோட்டப்புற பெண். அவர் நான்கு , ஐந்து நாட்களுக்கு மேல் பட்டினி கிடந்து இறந்துள்ளார். அத்துடன் அவரை மலேரியாவும் வாட்டி எடுத்துள்ளது. இவருக்கு 22 வயதுப் பெண்பிள்ளையும் வேறு இரண்டு குழந்தைகளும் உள்ளனர். இந்தப் பெண்ணின் சடலமும் வறிய அயலவர்களின் உதவியுடனயே அடக்கம் செய்யப்பட்டது. ஒரு தொழிலாளி இது பற்றிக் கூறுகையில்: அடிவயிற்றுக் கஞ்சிக்கே திண்டாடும் நாங்கள் தான் இந்த வெற்றிலையையும் வாங்கிப் போட்டு, இந்தச் சவத்தையும் அடக்கம் செய்கின்றோம் " என்றார்.

இன்று இந்த மண்ணில் இடம்பெறும் மரணங்களுக்கும் அழிவுகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆசீர்வாதங்களுடன் யுத்தத்தை நடாத்தும் முதலாளித்துவ ஆட்சியாளர்களும் அமைப்புக்களுமே முழுப் பொறுப்பு.

எனவே 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற மக்களுக்கு சமாதி கட்டும் இந்தக் காட்டுமிராண்டி இனஅழிப்பு யுத்தத்தை நிறுத்துவதற்கு தமிழ்-சிங்கள தொழிலாளர் வர்க்கம் வர்க்க நனவுடன் ஐக்கியப்பட்டு, பொதுஜன முன்னணி அரசாங்கத்தை வெளியேற்றப் போராட வேண்டும்.

## மன்னார் –கிளிநொச்சி முதலாளிகள் நண்டு வர்த்தகத்தில் இலாபம் மூட்டை தொழிலாளர்கள் வறுமை மூட்டை

மன்னார், கிளிநொச்சி கடற்பரப்பில் நண்டு பிடிக்கும் தொழிலாளர்கள் விடுதலைப் புலிகளின் பொருண்மீய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏகபோக கொள்வனவு ஒழுங்கு விதிமுறைகளால் நண்டுபிடிக்கும் தொழிலாளர்கள் மோசமான சுரண்டலுக்கு உள்ளாகி உள்ளனர்.

நண்டு பிடிப்பவர்கள் சந்தையில் கொண்டு சென்று சந்தைப்படுத்த வீதியினால் கொண்டு செல்லவும் சந்தையில் விற்பனை செய்வதற்கும் உரிமை மறுக்கப்படுகின்றது. இந்த ஒழுங்கு விதிமுறையை மீறினால் மீன் சந்தையில் தரகு வியாபாரிகள் சங்கம் விதிக்கும் தண்டத்தை செலுத்தியாக வேண்டும்.

நண்டு பிடிக்கும் தொழிலாளர்கள் விடுதலைப் புலிகளிடம் கொள்வனவு-விற்பனவு அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட தரகர்களிடமே தாம் பிடிக்கும் கடல் உற்பத்திப் பொருட்களை ஒப்படைக்க வேண்டும்.

பாலாவி என்னும் இடத்தில் நண்டைப் பிடிக்கும் தொழிலாளி நண்டுக்கு அதிக விலை கிடைக்கும் இடத்தைத் தேடி அதை விற்பனை செய்ய முடியாது. விடுதலைப் புலிகளிடம் அனுமதிப் பத்திரம் பெற்றவர் நிர்ணயிக்கும் விலைக்கே நண்டை விற்பனை செய்ய வேண்டும்.

பாலாவியில் 1கிலோ நண்டை தரகரிடம் கொடுத்தால் அதன் விலை தரம் 1. ரூபா.120 தரம் 11 ரூபா.80 தரம் 111 ரூபா.30.

இதே பொருளை நாச்சிக்குடாவில் கொண்டுபோய்க் கொடுத்தால் ஒரு கிலோவுக்கு(தரம்1) மேலதிகமாக ரூபா.60கிடைக்கும்

ஆனால் பாலாவியில் நண்டுபிடிப்பவர் கட்டாயம் பாலாவிக்கு வருகைதரும் தரகரிடமே நண்டை ஒப்படைக்க வேண்டியுள்ளது. இது தான் விடுதலைப் புலிகளின் விதிமுறை .இதை யாரும் மீற முடியாது.

---

பாலாவி, நாச்சிக்குடா , மூன்றாம் பிட்டி ஆகிய இடங்களில் பிடிக்கப்படும் நண்டுகளை விடத்தல் தீவில் கொண்டு போய்க் கொடுக்க முடியாது. தொழிலாளி விடத்தல் தீவில் கொண்டுபோய்க் கொடுப்பதையே விரும்புகின்றான. நாச்சிக்குடாவில் கொள்வனவு செய்யும் விடுதலைப் புலிகளின் பொருண்மீய மேம்பாட்டு நிறுவனம் மிரட்டல், சண்டித்தனத்தின் மூலம் நாச்சிக்குடாவைத் தாண்டி 3ம்பிட்டி விடத்தல்தீவுக்கு கொண்டு செல்ல முடியாது.

பாலாவியில் நண்டுபிடிக்கும் தொழிலாளி தரகனிடம் ஒப்படைக்க வேண்டும். இவர்கள் நாச்சிக்குடாவிற்கு கொண்டுபோய்க் கொடுக்க முடிந்தால் ரூபா.180 வுக்கு விற்கமுடியும். ஆனால் கொண்டு செல்ல விடுதலைப் புலிகளின் அனுமதி கிடையாது. இந்த நண்டை 3ம் பிட்டியில் இருக்கும் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கொடுத்தால் ரூபா.240 அல்லது விடத்தல்தீவு ஏற்றுமதியாளரிடம் கொடுத்தால் ரூபா.290.கிடைக்கும்.

| நண்டுபிடிக்கும் பிரதேசம் | முகவர் | தரம் | விலை (1கி) |
|---|---|---|---|
| பாலாவி | எல்.ரீ.ரீ. | 1 | 120 |
| | | 11 | 80 |
| | | 111 | 30 |
| நாச்சிக்குடா | பொருண்மீய .மே.நி. | 1. | 180 |
| | | 11 | 120 |
| | | 111 | 45 |
| மூன்றாம் பிட்டி | கடற்தொழிலாளர் கூ.ச. | 1 | 240 |
| | | 11 | 160 |
| | | 111 | 60 |
| விடத்தல் தீவு | எல்.ரீ.ரீ.அனுமதி பெற்ற ஏற்றுமதியாளர்- | 1 | 290 |

மிகவும் கஷ்டமான நிலைமைகளின் கீழ் தொழில் செய்து - பழைய உற்பத்திமுறைகளைக் கொண்டு பிடித்த கடல் உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் உரிமையையும் தொழிலாளர்கள் இழந்துள்ளார்கள். மீன்களை சந்தைக்குக் கொண்டு செல்ல வாகன வசதிகள் கிடையாது. பாதை வசதி கிடையாது. இதனால் கடற்கரையில் தரகர்கள் தீர்மானிக்கும் விலைக்கு நண்டை விற்பனை செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாஜங்கள் எனப்படுபவை சுயாதீனமாக இயங்க முடியாத முரட்டுத்தனமான கட்டளை வழங்கும் கடற்புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகின்றன. பொருண்மீய மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டுப்பாட்டை மீறி தங்களின் நண்டுகளை 3ம் பிட்டி, விடத்தல்தீவுக்குக் கொண்டு சென்ற தொழிலாளர்கள் விடுதலைப் புலிகளின் உடல்ரீதியான தாக்குதல்களுக்கும் மிரட்டலுக்கும் ஆளாகின்றனர். தொழிலாளர் சிலரை அடைத்து வைத்தும் விடுதலை செய்துள்ளனர்.

நாங்கள் நனைஞ்ச கோவணம் பிழிந்து கட்ட நேரமில்லாது உழைக்கின்றோம். ஆனால் எங்களுக்கு இன்னும் விடிவு இல்லை என ஒரு

படிப்பகம்

www.padippakam.com



# சோசலிசக் குரல்

சோசலிச சமத்துவக் கட்சியின் வட பிராந்திய குழுவினர் வெளியிட ஆயத்தமாகி வரும் 'சோசலிசக் குரல்' என்ற கையெழுத்து பிரதி பத்திரிகையின் சில அம்சங்களை இங்கு வெளியிடுவதில் தொழிலாளர் பாதை பெருமகிழ்ச்சி அடைகின்றது. சோசலிசக் குரல் இனவாத யுத்தத்தின் கொடுமைகள் பிரிவினைவாத விடுதலைப் புலிகள் திணிக்கும் சுமைகள், அடிப்படை உரிமைகளுக்கும் வசதிகளுக்கும் இருந்துவரும் பஞ்சங்களை சித்தரிக்கின்றது. (ஆ-ர்)

## 'ஜய சிக்குறுயி' இராணுவ நடவடிக்கை யாரின் அவசியத்துக்கு ?

10-6-1997

பொதுஜன முன்னணி அரசாங்கம் உலக வங்கியின் நிபந்தனைகளை நிறைவேற்றி வைப்பதையே இலங்கை அரசியலின் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.உலக வங்கியின் நிபந்தனைகளை கச்சிதமாக நிறைவேற்ற ஏதுவான நிலைமைகளுக்கு தளம் அமைத்துக் கொடுக்கவே பொதுஜன முன்னணி, யூ.என்.பி., விடுதலைப் புலிகள், ஜே.வீ.பி. அமைப்புக்கள் இலங்கையில் செயல்பட்டு வருகின்றனர்.

இந்தச் சகல அமைப்புக்களையும் இதற்கு பங்களிப்புச் செய்ய வைக்க உலக ஏகாதிபத்திய நாடுகள் தம்மால் ஆன உதவிகளைச் செய்து வருகின்றன.

உலகில் இதுவரை காலமும் இருந்து வந்த உற்பத்திச் சக்திகளின் ஆதிக்க தலைமையை உற்பத்தி உறவு முறையில் புதிய ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிதி மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு உட்படுத்த வேண்டியதன் பயணத்தில் ஒரு தெரிவுதான் இலங்கையில் இனவாத யுத்தத்தின் அறிமுகம்.

இந்த நாட்டின் உற்பத்திச் சக்திகளை நிதிமூலதனத்தின் ஆதிக்கத்துக்குக். கீழ்க் கொண்டுவர மக்கள் மயம்(தனியார்மயம்) என்ற பேரில் தனியாரிடம் ஒப்படைக்கும் நடைமுறையை போட்டியிட்டு நிறைவேற்றுவதில் யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இதற்கான ஒரு தளமாகவே இனவாத யுத்தம் அமைந்துள்ளது.சிங்களத் தொழிலாளர்களின் கண்களில் வீசப்பட்ட மணல்தான் இந்த யுத்தம். சிங்களத் தொழிலாளர்களின் போராட்டத்தில் இருந்து தம்மைப் பாதுகாக்கப் போட்டுக் கொண்ட அரண்தான் இனவாத யுத்தம்.



வடக்கில் அகதிகள் முகாமில் தள்ளப்பட்டுள்ள குடும்பங்கள்

வடக்கு, கிழக்கில் உற்பத்திச் சக்திகளை நாசமாக்கும் முதலாளித்துவ தேவை நன்கு நிறைவு செய்யப்பட்டுவிட்டது. முன்நேறிப் பாய்தல், கைகுலுக்கல், வலம்புரி, போட் ஒப்பிறேசன், சூரியக்கதிர், ரிவிரச முதலான இராணுவ நடவடிக்கைகள் மூலம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கைத்தொழில் நிலையங்களும் விவசாய விளை நிலங்களும் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன.

சத்ஜெய இராணுவ நடவடிக்கை மூலம் கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தைக் கொண்டு பயிர் செய்யப்பட்டு வந்த விவசாய நிலத்தில் கடந்த இரண்டு வருடகாலமாக உற்பத்தி கிடையாது. எடிபல இராணுவ நடவடிக்கையால் மன்னார் பகுதி விவசாய நிலங்கள் கைவிடப்பட்டுள்ளன. கட்டுக்கரைக்குள நீர்த்தேக்கம் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளது.

இன்றைய ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை வடக்கில் எஞ்சி இருந்த விவசாய நிலத்தை தரிசு நிலமாக்கும் கைங்கரியத்தை அரங்கேற்றி வருகின்றது. இந்த நடவடிக்கையுடன் வடக்கு மாகாணத்தில் இடம் பெயராத மக்கள் ஒருவரைத் தன்னும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு நிலைமை வந்துள்ளது. இராணுவ நடவடிக்கையின் தாக்கத்தில் இருந்து தப்பாத விளைநிலமே கிடையாது எனக் கூறிவிட்லாம்.

இதனால் விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், சிறு பட்டடைத் தொழிலாளர்கள் உற்பத்தி உறவில் இருந்து உதிர்த்தி வீசப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கும் பின்னர் மாங்குளத்திலும் வசித்து வந்த இடம் பெயர்ந்தவர்கள் நான்காவது தடவையாக இடம்பெயர்ந்து எங்கே செல்வது என்று தீர்மானம் செய்ய முடியாத நிலையில் மரங்களுக்கு அடியில் வாழ நேரிட்டுள்ளது.

புளியங்குளத்தில் விவசாயம் செய்து வந்த வளர்மதி என்ற பெண் இந்த நிலைமையைப் பற்றிக் கூறுகையில் : "நான் வீட்டில் தனியாள். காலபோக நெற் செய்கையால் எனது வீட்டில் 20 மூடை நெல் , நீர் இறைக்கும் இயந்திரம், சிறுதானியங்கள், காய் கறிச் செடிகளை எல்லாம் கைவிட்டுவிட்டு வந்து விட்டோம். முழக்கம் , மழை போல எங்களின் காணிக்குப் பக்கங்களில் ஷெல்கள் விழுந்து வெடித்துக் கொண்டுள்ளன. ஆமிக்காரன் என்னுடைய காணிக்கு வரவில்லை. பயத்தால் எல்லாப் பொருட்களையும் விட்டுவிட்டு வெறும் கையுடன் வந்துவிட்டேன். என்னுடைய நெல் மூட்டைகளை எடுத்து வருவதாக இருந்தால் பெரும் தொகையான பணம் தேவை. இப்போது என்னிடம் வசதி இல்லை. கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விட்டது." என்றார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு வந்த நர்ட்களில் இருந்து பாடசாலைகள் சரிவர இயங்க முடியாது உள்ளது. யுத்தம் காரணமாக மாணவர் பாடசாலைக்கு செல்வது இல்லை. 60000 மாணவர்களில் 30000 மாணவர் பாடசாலை செல்வது இல்லை எனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இந்த 30000 மாணவர்களுக்கு நேரிட்டது என்ன என்பதை அறிய முடியாதா?அரைகுறையாகப் பெயரளவில் பாடசாலை சென்று வந்தவர்கள் கடந்த இரண்டு மாதங்களாக பாடசாலை இயக்கத்தில ஏற்பட்ட தடங்கலினால் கல்வி கற்பது முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

சூரியக் கதிர் 11 இராணுவ நடவடிக்கையினால் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை. சத்ஜெய நடவடிக்கையினால் கிளிநொச்சியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கும் உணவு முத்திரை நிறுத்தப்பட்டுள்ளது. மொத்தத்தில் இடம்பெயர்ந்தவர்கள் அனைவருக்கும் உணவு வழங்குவது நிறுத்தப்பட்டு 40 நாட்கள் ஆகிவிட்டது.

அப்படியாயின் இந்த மக்கள் எப்படி உயிர்வாழ்கின்றனர்? மரணத்தின் கதவுகள் திறக்கப்பட்டுள்ளது. வன்னிப் பகுதியில் வேண்டிய அளவு உழைப்பை கொள்வனவு செய்ய முடியும். முதலாளிகள் நினைத்த கூலியைக் கொடுத்து இந்த உழைப்பை வாங்கிக் கொள்ள முடியும்.சமீபத்தில் அமைச்சர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் பயங்கரவாதிகள் என்றால் உலக நாடுகள் அவர்களைத் தடைசெய்து இருப்பார்கள். அவர்கள் இன்றுவரை அங்கீகரித்துத்தான் செயல்படுகின்றார்கள்" என்றார் . அந்த அமைச்சர் மேலும் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: " விடுதலைப் புலிகள் மீன்கள், நீர் என்னும் மக்களில் மறைந்து கொண்டு இருக்கின்றார்கள்" என்றார்.

இந்தக் கூற்றுக்கு ஏற்றால் போல் நீரை இல்லாது செய்ய வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாகவே தமிழ் மக்களை உற்பத்தியில் இருந்து கலைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் ஏகாதிபத்தியத்தின் தேவையான பழைய உற்பத்திச் சக்திகளை உடைத்துத் தள்ளும் வேலைத் திட்டம் உரிய முறையில் நிறைவேறுகின்றது.

இதன்படி ஜெயசிக்குறுயி இராணுவ நடவடிக்கை யாரின் அவசியத்தை நிறைவு செய்ய மேற்கொள்ளப்படுகின்றது? இலங்கையை ஏகாதிபத்தியத்தின் சந்தையாகவும் நிதி மூலதனத்தின் ஆளுமைக்கு உட்படுத்தவும் அதற்கு உரிய ஆட்சியாளர்களைப் பயிற்றுவிக்கவுமே ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை தொடர்கின்றது.

எனவே இந்த இனவாத யுத்தம் ஒழிக்கப்பட வேண்டும்

தமிழ் சிங்களத் தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்தின் ஊடாக மட்டுமே யுத்தத்தைத் தோற்கடிக்க முடியும். அதற்குரிய வேலைத்திட்டத்தினை வழங்கும் சோசலிச சமத்துவ கட்சியில் இணைந்து

---

தொழிலாளி குறிப்பிட்டார்.

"தரகர்கள் தாராளமாகச் சுரண்டிக் கொள்ள விடுதலைப் புலிகள் அனுமதி அளித்துள்ள விந்தையை அறிந்தால் வரும் கோபத்துக்கு எல்லை கிடையாது. நாங்கள் பாலாவியில் 30கி,.கி.நண்டை ரூபா.120வீதம் மொத்தமாக ரூபா.3600க்கே விற்பனைசெய்ய முடியும். இதை நாம் ஏற்றுமதியாளர்களிடம் கொடுத்தால் ரூபா.290 வீதம் ரூபா.8700 பெற்றுக்கொள்ள முடியும். இதனால் நாம் ரூபா.5100 வை மேலதிகமாகப் பெற்றுக் கொள்ள முடியும் இந்த ரூபா.5100ஐயும் தரகனும் விடுதலைப் புலிகளும் பொருண்மீய மேம்பாட்டு நிறுவனமும் சுருட்டிக் கொள்கின்றன." இந்த நிலையில் இருந்து விடுபடுவது எப்படி? என்று மீனவர்கள் துக்கப்பட்டுக் கொண்டனர்.

மீனவர்களின் விற்பனை உரிமையை முழுமனே பறித்து, விடுதலைப் புலிகளிடமும் தரகர்ளிடமும் கொடுத்துள்ளதால் மீனவர்கள் எதுவிதமான உரிமையும் இல்லாது உள்ளனர்.தமது உரிமைகளை வெற்றிகொள்ள இன்று ஏழை மீனவர்கள் போராட்டத்துக்கு கிளர்ந்து எழ வேண்டும்.

* மீனவர்களின் விற்பனை உரிமையில் கை வைக்காதே!
* தரகர் முறையைக் ஒழித்துக் கட்டு!
* தமிழ்-சிங்கள தொழிலாளர் ஐக்கியத்துக்கு போராடு !

www.padippakam.com


# பொலிஸ்-இராணுவ கைதியா
# இராஜ்குமார் உரைநிகழ்த்தும்

ஒரு ஆண்டுக்கு மேலாக பொதுஜன முன்னணி அரடாங்கத்தின் பொலிஸ்-இராணுவ கைதியாக இருந்து விடுதலை செய்விக்கப்பட்ட செல்லையா இராஜ்குமார் உரை நிகழ்த்தும் கூட்டத் தொடரின் முதலாவது கூட்டம் கொழும்பு கோட்டை அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் ஆகஸ்ட் 15ம் திகதி நடைபெற்றது. சோ.ச.க. மத்திய குழு உறுப்பினர் டபிள்யூ.ஏ. சுனில் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இராஜ்குமாரும் சோ.ச.க. பொதுச் செயலாளர் விஜே டயசும் ஆற்றிய உரைகள் இங்கு வெளியாகின்றன.

## மக்களின் உரிமைகளைக் காக்கும் போராட்டம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது

**– செல்லையா இராஜ்குமார்**

தோழர்களே, தோழியர்களே,

இன்று எனக்கு இங்கு பேசுவதற்கான வாய்ப்பு சோசலிச சமத்துவக் கட்சியினரான நீங்கள் என்னை விடுதலை செய்வதற்காக நடாத்திய போராட்டத்தின் பெறுபேறாகவே கிடைத்துள்ளது. எனக்கு இங்கு பேச வாய்ப்பு வழங்கியமைக்காக நான் உங்களுக்கு நன்றி கூறவிரும்புகின்றேன். இப்போது சோசலிச சமத்துவக் கட்சியாக வளர்ச்சி கண்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் நடாத்திய அனைத்துலகப் பிரச்சார இயக்கத்தின் பெறுபேறாகவே எனக்கு விடுதலை கிடைத்தது. அந்த பிரச்சாரத்தின் உக்கிரத்தினாலேயே எனக்கு ஊக்கமும் பலமும் கிடைத்தது.

எனது விடுதலையின் பின்னர் சோசலிச சமத்துவக் கட்சியின் தோழர்களுடன் நடாத்திய முதலாவது சந்திப்பில் நான் குறிப்பிட்டதை இங்கு மீண்டும் குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும்: "உங்களது போராட்டம் இல்லாது போயிருந்தால் என்னைக் கொன்று புதைத்த இடத்தில் புல்லும் முளைத்திருக்கும்". இதை எவரினதும் உள்ளங்களை குளிரவைப்பதற்காக நான் கூறவில்லை.

கடந்த 14 வருடங்களாக வடக்கு-கிழக்கில் இடம்பெற்றுவரும் யுத்தம் காரணமாக எனது குடும்பம் அகதியானது. அது எனது குடும்பத்துக்கு மட்டும் ஏற்பட்ட ஒரு தலைவிதி அல்ல. இலட்சக்கணக்கான குடும்பங்கள் இன்று முகம் கொடுத்துக் கொண்டுள்ள ஒரு நிலைமை அதுதான். பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகளும் கணவனைப் பிரிந்த மனைவியர்களும் மனைவியர்களை பிரிந்த கணவர்களும் என்று முழுக் குடும்ப வாழ்க்கை முறையுமே சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது. இவை அனைத்துக்கும் முக்கிய காரணம் இந்த இனவாத யுத்தமே.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் "ரிவிரச" இராணுவ நடவடிக்கை ஆரம்பமான பொழுது எனது குடும்பம் கிளிநொச்சியில் இருந்தது. நான் 1996 ஜூன் 12ல் உடப்புவில் இருந்து அவர்களைப் பார்க்கச் சென்றேன். அப்போது இடைவளியில் வைத்து நான் கைது செய்யப்பட்டேன். நான் அனுராதபுர பஸ்ஸில் ஏறுவதற்குப் பதிலாக தவறுதலாக அருணபுர பஸ்ஸில் மாறி ஏறிவிட்டேன். அருணபுரத்தில் நான் பஸ்சினால் இறங்கியதும் என்னைக் கைது செய்து , பயங்கரவாதியாகப் பெயர் சூட்டி பொலிஸ் கூட்டில் போட்டனர்.

### சித்திரவதை

என்னை சிறையில் தள்ளிய இந்த அரலகங்வில பொலிசார் சித்திரவதை நடவடிக்கைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் என என்னால் கூறமுடியும். எனது கண், முகம் முதலான இடங்களில் மிளகாய்த் தூளை தூவினார்கள். பெற்றோல் நிரப்பிய ஷொப்பிங் பாக்கினுள் எனது முகத்தினை புதைத்தார்கள். எனது அந்தரங்க உறுப்பைச் சுற்றியுள்ள உரோமங்களை ஒற்றி இழுத்தார்கள். அத்துடன் நின்றுவிடாமல் இரவுபகலாக என்னிடம் என்ன வேலையை எல்லாம் கறக்க முடியுமோ அவை அனைத்தையும் என்னைக் கொண்டு செய்வித்தார்கள்.

பொலிசார் இரவு வேட்டைக்குச் சென்று காட்டு மிருகங்களை வேட்டையாடிக் கொண்டு



ஆகஸ்ட் 15ம் திகதி கொழும்பு கோட்டை அ.லி.சே.ச. மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் செல்லையா இராஜ்குமார் (இடம்) உரை நிகழ்த்துகின்றார்.

வருவார்கள். அவற்றையெல்லாம் தூங்காது விழித்திருந்து உரித்து தள்ள வேண்டும். விடிந்ததும் காட்டு விறகு கொத்தித் தள்ள வேண்டும். நான் அரலகங்விலவில் இருந்த அந்த ஆறு மாத காலங்களுள் ஐந்து லொறி விறகுகளை கொத்தித் தள்ளியிருப்பேன்.

இந்தச் சித்திரவதைகளைப் பற்றி நான் சோசலிச சமத்துவக் கட்சியின் பத்திரிகைகளான தொழிலாளர் பாதைக்கும் கம்கறு மாவத்தவுக்கும் எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டேன். எனினும் நான் சோசலிச சமத்துவக் கட்சிக்கு எழுதிய இக்கடிதங்கள் பொலிசாரின் கைகளில் அகப்பட்டு எனக்கு இடம் பெற்றுவரும் அட்டூழியங்கள் இன்னும் பன்மடங்கு அதிகரிக்குமோ என்ற நியாயமான பீதியும் ஏற்பட்டது.

என்னை சித்திரவதை செய்த இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் நான் கொடுத்த வாக்குமூலங்களையிட்டு அக்கறை காட்டியதாக எனக்குத் தென்படவில்லை.அவர்கள் அவற்றுக்கு செவி கொடுக்கவேயில்லை. அவர்கள் என்னைப் பின்வருமாறு பயமுறுத்தினர்: "கெரித் தெமலா.இது எங்கள் நாடு.சிங்கள நாடு.சிங்களவர்கள் மட்டுமே இந்நாட்டில் வாழமுடியும்.நீ எங்கே இங்கு வந்தாய்" என்று கேட்டார்கள். அவர்கள் என்னிடம் வேறு எதையும் கேட்டு விசாரிக்கவில்லை.

அரலகங்வில பொலிசில் இடம்பெற்ற சித்திரவதைகள் காரணமாக எனக்குப் பல உடல் , உளத் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. என்னால் சொற்ப நேரத்துக்கு மேலாக நிமிர்ந்து நிற்க முடியாது. ஐந்து நிமிடங்களுக்கு மேலாக இருந்து கொண்டிருப்பதும் சங்கடமான காரியம். சிறிய பாரத்தைத் தன்னும் தூக்கி உயர்த்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. பாடுபட்டு உழைத்து வந்த ஒரு மீனவ இளைஞனான நான் இந்த சித்திரவதைகளின் பெறுபேறாகவே இத்தகைய ஒரு நிலைக்குக் கொணரப்பட்டுள்ளேன். இவை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சித்திரவதைகளின் பெறுபேறாக ஏற்பட்டவை.

சுமார் 3000 இளைஞர்கள் இந்த விதத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இங்கு தமது பெண் பிள்ளைகளின் கல்யாணத்தைப் பற்றி சிந்திக்கும் தந்தையர்கள், தமது முழுக் குடும்பத்துக்குமே பொறுப்பான இளைஞர்கள் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இந்த விதத்தில் இருந்து கொண்டுள்ளனர். 11 வயதான சிறுவர்களும் கூட கைது செய்யப்பட்டு உள்ளனர். இத்தகைய ஒரு தாக்குதலையே இந்த அரசாங்கம் மனித உரிமைகள் மீது தொடுத்துள்ளது. கைதுசெய்யப்பட்டுள்ளவர்களைக் காப்பதாகக் கூறிக் கொள்ளும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கமிட்டி(ஐ.சீ.ஆர்.சி.) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு போன்ற அமைப்புக்கள் செய்வது மோசடியாகும். அவை அரசாங்கத்தின் ஒடுக்குமுறையின் கைத்தேங்காயாக செயற்படுகின்றன.

இனவாத யுத்தத்தின் ஆரம்பத்தில் இருந்தே இனவாத யுத்தத்துக்கு எதிராக சிங்கள-தமிழ் தொழிலாளர்களின் ஐக்கியத்துக்கு போராடிய ஒரே அமைப்பு இன்று சோசலிச சமத்துவக் கட்சியாக பரிணாமம் கண்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே.

இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் என்னை ஒரு பயங்கரவாதியாக ஒப்புக்கொண்டு அறிக்கை தரும்படி நெருக்கினார்கள். என்னை சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவராகக் குறிப்பிட்டு சோ.ச.க.பொதுச் செயலாளர் தோழர். விஜே டயஸ் அனுப்பிய சத்தியக் கடதாசியை கூட பொலிசார் ஏற்றுக் கொள்ள மறுத்தனர். காலம் செல்ல செல்ல எனக்கு எதிராகத் தொடுக்கப்பட்டு வந்த வன்முறைகள் குறைந்தது. அது சோசலிச சம்தத்துவக் கட்சியும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் நடாத்திய அனைத்துலக பிரச்சாரத்தின் தாக்கம் காரணமாகவே ஏற்பட்டது. அதையிட்டு எந்த விதமான சந்தேகமும் இருக்க முடியாது.

நான் கைது செய்யப்படும் போது நான் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவன். அப்போது நான் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்து ஒரு ஆண்டு கழிந்திருந்தது. அக்கால கட்டத்தினுள் நான் முதலாளித்துவ அமைப்பு, முதலாளிதத்துவ அரசு, அதன் ஒடுக்குமுறை, முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் செயற்பாடு, தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர பாத்திரம் ,புதிய புரட்சித் தலைமையின் அவசியம், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கு, வேலைத்திட்டம் பற்ற புரிந்து கொண்டேன். அந்த வேலைத்திட்டமும் முன்நோக்கும் சரியானவை என்பதை நான் நடைமுறையில் கண்டேன்.

நான் பண்டாரவளை புனருத்தாரண முகாமில் இருந்து விடுதலையான பின்ன சோ.ச.க. தலைமை அலுவலகத்துக்கு சென்றேன். மறுநாள் நான் எனது ஊரான உடப்புவிற்கு சென்றேன். அங்கு என்னை வரவேற்க சோ.ச.க.ஏற்பாடு செய்திருந் கூட்டத்திற்கு 200க்கு மேற்பட்ட மக்கள் வந்திருந்தனர். அதை சோசலிச சமத்துவ கட்சியின் அரசியல் தொழிற்பாட்டினால் உருவாக்கப்பட்ட ஒரு அபிவிருத்தியென நான் நம்புகின்றேன். நான் அப்படிக் கூறுவதற்கு காரணம் இதுதான்: நான் அரலகங்வில பொலிசில் கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த வேளையில் உடப்பு கிராமத்தில் இருந்து என்னைப் பார்வையிட எவரும் வருகை தரவில்லை. அங்கு வந்தால் ஏதும் சங்கடத்துக்குள் மாட்டிக் கொள்ளநேரிடும் என அவர்கள் அஞ்சினார்கள்.சோசலிச சமத்துவக் கட்சியின் தொழிற்பாடு காரணமாக அவர்கள் நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதை இன்று காண்கிறார்கள் என நான் நினைக்கின்றேன்.

அரலகங்கவில பொலிசில் இருந்து என்னைக் கொண்டு சென்ற பண்டாரவளை புனர்வாழ்வு முகாம் ஒரு மூளைச் சலவை நிலையம் என தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகள் குறிப்பிட்டு இருந்தன நான் இந்தக் கூற்று சரியானது என நம்புகின்றேன். இங்குள்ள அதிகாரிகள் இராணுவத்தினதும் பொலிசாரினதும் ஒடுக்குமுறைகள் நியாயமானவை என போதிக்கின்றார்கள். சுருங்கச் சொன்னால் இவர்கள் இன்றைய முதலாளித்துவ அமைப்பை இளைஞர்கள் அங்கீகரிக்க போதிக்கின்றார்கள். முகாமில் உள்ள இளைஞர்கள் அதிகாரிகளுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அத்தோடு அங்ஙன கீழ்ப்படிவுடன் நடக்கும்படி நெருக்குகின்றார்கள். இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கும் தமக்கும் தொடர்பு கிடையாதெனவும் தாம் அரசாங்கத்தில் இருந்து தனியாக இந்த முகாமில் உள்ள இளைஞர்களைப் பராமரித்து வருவதாகவும் கோலம் காட்ட இங்குள்ள அதிகாரிகள் முயற்சிக்கின்றனர்.

அரலகங்வில பொலிசில் இந் வதைகளினால் ஏற்பட்ட தாக்கங்கள் உரிய சிகிச்சை அற்ற நிலையில் தொடர்ந்து வந் போதிலும் புனர்வாழ்வு முகாமில் இவற்றுக்கு சிகிச்சை பெற எனது மனது இடமளிக்கவில்லை.இதற்கு ஒரு காரண நான் சோசலிச சமத்துவக் கட்சிக்கு இங்கிருந்து எழுதிய கடிதத்தை நானாவித காரணங்களை காட்டி தபாலில் சேர்க்க முகாம் அதிகாரிக மறுத்துவிட்டனர். இந்த இலட்சணத்தில் இந்தப் பின்னணியில் இங்கிருந்து எமக்கு என்ன சிகிச்சை என்ற முடிவுக்கு நான் வந்தேன். இதனால் ஆறு மாதங்களுக்கு மேலாக இங்கு கிடைத்த புனர்வாழ்வின் இலட்சணம் உங்களுக்கு புரியும் என நான் நினைக்கின்றேன்.

17ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# க இருந்து விடுவிக்கப்பட்ட கூட்டத் தொடர் ஆரம்பம்!

## மாற்று புரட்சிக் கட்சியை கட்டியெழுப்புவது தீர்க்கமான அவசியம்

### சோ.ச.க.பொதுச்செயலாளர் விஜே டயஸ்

தலைவர் தோழர். சுனில், தோழர். சல்லையா இராஜ்குமார், அவரின் துணைவி ஜிதா, தோழர்களே, தோழியர்களே

இது சோசலிச சமத்துவக் கட்சி என்ற றையில் எமக்குப் பெருமைக்கும் மகிழ்ச்சிக்கும் ரிய நாளாகும். முதலாளித்துவ அரசின் கடுபிடிகளுக்கு உள்ளான கட்சி அங்கத்தவர் ருவர் கட்சியின் முயற்சியினாலும் எமது னைத்துலக இயக்கத்தின் பிரச்சாரத்தினாலும் டுதலை செய்யப்பட்டது நிச்சயம் பருமைக்குரியது. அவ்வாறே அங்ஙனம் டுதலை செய்விக்கப்பட்ட தோழர். ராஜ்குமார் பகிரங்க கூட்டங்களில் பேசி-தன் முதல் கூட்டமான இங்கு பேசி தமது ர்க்கமான அனுபவங்களையும் அவ்வாறே தில் இருந்து விடுபட்டதற்கான டிப்பினைகளையும் எம்முடன் பகிர்ந்து காள்ள முன்வந்தமை மகிழ்ச்சிக்குரிய ாரணமாகும்.

பொலிசாரினால் கைது செய்யப்பட்ட றையை தோழர்.செல்லையா இராஜ்குமார் ிளக்கியது போல் தமிழ் மக்கள் பகுதியினரைச் சர்ந்தவர் என்ற முறையில் இளைஞர் முகம் காடுக்கும் பயங்கர நிலைமையாகும்.சிங்கள னவாத குண்டர்கள் நாளாந்தம் கேட்கும் கள்விக்கான பதில் அங்கு பொதிந்து பாயுள்ளது.தமிழர் என்ற காரணத்துக்காக ந்நாட்டில் ஒருவருக்கு இழைக்கப்படும் றப்பு அநீதி என்ன?

இந்நாட்டில் சிங்கள இளைஞர்களும் வதிகளும் சுமார் ஒரு இலட்சம் பேர் 1989- காலப் பகுதியில் யூ.என்.பி.அரசாங்கத்தினால் டுகொலை செய்யப்பட்டதை நாம் அறிவோம். தற்கு சற்று முன்னதாக எமது கட்சியின் ன்று இளம் அங்கத்தவர்கள் ஜே.வீ.பி.யினால் டுகொலை செய்யப்பட்டது பிரசித்தியானது. த்தோடு 1970பதுகளில் சிறீலங்கா-சமசமாஜ-ம்யூனிஸ்ட் கூட்டரசாங்கத்தின் மூலமும் ன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்தினைப் போல் இளைஞர்களுக்கு திராக படுகொலைகள், ஒடுக்குமுறைகள், றைவைப்புக்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டது ப்படி ஒன்றும் இரகசியம் அல்ல.

எனினும் தமது உறவினரை சந்திப்பதற்கு வுனியா சென்று கொண்டிருக்கையில் னுராதபுர பஸ்சுக்கு பதிலாக அருணபுர ஸ்சில் ஏறிப் பயணம் செய்தமைக்காக ராஜ்குமார் முகம் கொடுத்த வகையிலான டைகெட்ட சிறைக்கும் ஒடுக்குமுறைக்கும் ிங்கள இளைஞர் ஒருவர் அகப்பட்டு ருப்பார் என மிகவும் அருமையாக தான் ண்ண முடியும். இனவாதத்தின் தாக்கம் ாரணமாக பல சமயங்களில் பஸ் வண்டிகளில் பயர்ப் பலகைகள் சிங்களத்தில் மட்டும் ழுதப்பட்டு இருக்கும் நிலைமைகளில் ிங்களவர் அத்தகைய பஸ்சை தவறாகப் ரிந்து கொள்ளுவதும் கூட தற்செயலானது ல்லவா?

,தமிழ் மொழியை மட்டும் அறிந்து இருந்ததன் ாரணமாக சரியான பஸ் வண்டியைக் ண்டுபிடிக்க முடியாது போன தவறுக்காக ரலகங்வில பொலிசாரினால் கைது சய்யப்பட்ட செல்லையா இராஜ்குமார் னுபவிக்க நேரிட்ட அரச பயங்கரத்தின் யரூபத்தை அவரே விளக்கியதால் நான் தை மீண்டும் இங்கு திருப்பிக் கூறுவது வசியம் இல்லை.ஆனால் சோசலிச மத்துவக் கட்சியும் அனைத்துலகக் குழுவும் னது அரசியல் பிரச்சாரத்தின் மூலம் அவரை டுதலை செய்வித்துக் கொண்டிருப்பது தலையின் வாயில் இருந்து அல்லது தூக்குக் யிற்றில் இருந்தாகும். இதை அவர் ம்பலப்படுத்திய விடயங்கள் நன்கு ட்டிக்காட்டுகின்றன என்பதை கூறியாக வண்டும்.



விஜே டயஸ்

அவ்வாறே இந்தக் கைதின் உள்ளும் இராஜ்குமாரை விடுதலை செய்யும் போராட்டத்தின் உள்ளும் புரட்சிக் கட்சி பெற்றுக் கொண்ட அனுபவங்களையும் படிப்பினைகளையும் பொதுமக்கள் இயக்கத்தினுள் ஸ்தாபிதம் செய்வது மிகவும் முக்கியமானது. எனவே தான் இத்தகைய ஒரு தொகை கூட்டங்களை நாடு பூராவும் நடாத்த சோசலிச சமத்துவக் கட்சி தீர்மானம் செய்துள்ளது.

## பொலிசாரின் தன்மை

நாம் ஒவ்வொன்றாக விடயங்களை ஆய்வு செய்வோம். அரலகங்வில பொலிசார் நடந்து கொண்டது எப்படி? முதலாளித்துவ அரசின் பொலிஸ் படையைப் பற்றி பாடசாலைகள், பிரிவேனாக்கள், பல்கலைக் கழகங்களில் அது சமாதானப் படை எனப் போதிக்கப்படுகின்றது. சமாதானத்தைக் காத்து பொதுமக்களுக்கு உதவிபுரியும் பொருட்டு அமைக்கப்பட்ட ஒரு அமைப்பாக அது சித்தரித்துக் காட்டப்படுகின்றது. இதை ஊர்ஜிதம் செய்யும் விடயங்களும் பேச்சுக்களும் வெகுஜனத் தொடர்புச் சாதனக்காரர்களைக் கொண்டு தினமும் பரப்பப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். சிறிய பாடசாலை சிறார்களின் தலையில் அன்புடன் கைபோட்டு அவர்களை வீதியைக் கடக்கும் விதத்தினை சொல்லித் தரவும் சமூக விரோதிகளைக் கைது செய்து பொதுமக்களின் பாதுகாப்பை ஊர்ஜிதம் செய்யவும் போயா நாட்களில் இரத்த தானம் செய்யவும் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் படை பற்றி தினமும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. இதில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டால் பொதுமக்கள் எத்தகைய ஆதாளபாதாளத்தில் வீழ்ந்து போக நேரிடும் என்பதை அரலகங்கவில பொலிசாரின் நடவடிக்கைகளைக் கொண்டே புரிந்து கொள்ள முடியும். தாக்குதல்களுக்கு மேலாக கைது செய்யப்பட்டு உள்ளவர்களை தமது பிடியில் உள்ள அடிமைகளாகக் கருதி தனிப்பட்ட இலாபத்துக்காக வேலை வாங்குவதையும் பொலிசார் கையாண்டதையும் இராஜ்குமார் விளக்கினார். இது பொலிசாரின் பிரச்சார முகமூடியின் பின்னால் உள்ள நிஜ காட்டுமிராண்டி கோலமாகும். சகல சீர்திருத்தவாதிகளும் கெட்ட அதிகாரிகளை விலக்கிவிட்டு இந்தப் பொலிசாருக்கு மனிதாபிமான தோற்றம் வழங்குவதைப் பற்றிப் பேசிக் கொள்கின்றார்கள். இது ஒரு சில கெட்ட அதிகாரிகள் பற்றிய பிரச்சினை அல்ல. இது முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் வன்முறையின் ஒரு கருவியின் தன்மையாகும். முதலாளித்துவ பொலிசாரையும் இராணுவத்தையும் கலைத்துவிடப் புரட்சியாளர்கள் நடாத்திவரும் பிரச்சாரத்தின் நிஜ அர்த்தம் இங்கிருந்துதான் ஊற்று எடுக்கின்றது.

பொலிசாரின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்வதெற்கெனக் கூறி பொதுஜன முன்னணி அரசாங்கம் மனித உரிமைகள் காக்கும் படையை அமைத்துள்ளது. இராஜ்குமார் தொடர்பான பிரச்சாரத்தில் சோசலிச சமத்துவக் கட்சி இந்த மனித உரிமைகள் காக்கும் படை எனப்படுவதன் நிஜ கோலத்தைக் கண்டு கொள்ள முடிந்தது. காலவரையறையின்றி சிறைவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு அரலகங்கவில பொலிசில் வைக்கப்பட்டு இருந்த இராஜ்குமாரின் பேரில் இந்தப் படையைச் செயற்பட வைக்க எமது கட்சி பல தடவைகள் முயன்றது. அனுராதபுரத்துக்கு பல தடவைகள் விஜயம் செய்து இந்தப் படையின் அலுவலகத்திடம் விஜயங்களை விளக்கிய போதிலும் அவர்கள் சொன்னது என்ன? அரலகங்வில செல்வதற்கு தம்மிடம் வாகனம் இல்லாததால் கடிதம் எழுதுவதை தவிர வேறு எதுவும் செய்ய முடியாது. இத்தகைய அமைப்புக்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் காடைத்தனங்களுக்கு சுண்ணம் பூசும் பிரஸ்களாகப் பாவிக்கப்பட்டு வருவது தெளிவு. இந்தப் பிரசுகளை சூப்புவது சமசமாஜ-கம்யூனிஸ்ட்-இ.தொ.கா-நவ சமசமாஜ் போன்ற கட்சிகள் மட்டுமே. சோசலிச சமத்துவக் கட்சியின் பொறுப்பு இத்தகைய செப்படி வித்தைகளுக்கு எதிராக முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் வன்முறையின் சகல வடிவங்களைப் பற்றியும் பொது மக்களின் கண்களைத் திறக்க வைப்பதேயாகும். இவற்றில் இருந்து விடுபடுவதற்கான வேலைத்திட்டங்களுக்கு அவர்களைத் திரும்ப வைப்பதேயாகும்.

எமது கட்சியும் அனைத்துலகக் குழுவும் அதன் பகுதிகள் உள்ள சகல நாடுகளிலும் புரட்சியாளர்கள் அந்தந்த நாடுகளின் தொழிலாளர்களை இந்நாட்டில் பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்தி வரும் ஒடுக்குமுறை பற்றி விழிப்படையச் செய்து, நடாத்திய தலையீட்டின் கீழ் கட்டவிழ்க்கப்பட்ட நெருக்குவாரம் காரணமாக இராஜ்குமாரை அரலகங்வில பொலிசில் தொடர்ந்தும் அடைத்துவைக்க முடியாது போனதும் அவர் பண்டாரவளை பிந்துனுவவை புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்பட்டார். இதனால் புனர்வாழ்வின் தன்மை பற்றியும் அதனால் பலன் அனுபவிக்கும் வயிற்றுமாரிகள் பற்றியும் விளங்கிக் கொள்ள எமக்கு இதனால் வாய்ப்புக் கிடைத்தது.

## புனர்வாழ்வு யாருக்கு ?

முதலாவதாக நாம் எழுப்ப வேண்டிய கேள்வி, இராஜ்குமாருக்கு புனர்வாழ்வு எதற்காக? அவர் இழைத்த "பார தூரமான குற்றம்" பஸ்சின் பெயர்ப் பலகையை சரியாக வாசித்துக் கொள்ள முடியாமல் தவறான பஸ்சில் மாறி ஏறியதேயாகும். ஆதலால் அவர் சம்பந்தமாக செய்யும் புனர்வாழ்வு சரியாக பஸ் வண்டி பெயர்ப் பலகையை வாசிக்கப் பழக்குவதா?

இல்லை. அவர் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டது சோசலிச சமத்துவக் கட்சிக்கு எதிராக அவரின் மூளையைச் சலவை செய்வதற்கேயாகும். தாம் சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர் என இராஜ்குமார் ஆரம்பம் தொட்டே சுட்டிக்காட்டி வந்துள்ளார். அது மட்டுமன்றி அவரின் கூற்றினை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில் சோ.ச.க.வும் அனைத்துலகக் குழுவும் பொலிசாருக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் கடிதங்கள் அனுப்பி வைத்தது. அவருக்கு எமது கட்சி சம்பந்தமாக இருந்த வந்த் அரசியல் நம்பிக்கையையும் அர்ப்பணத்தையும் தகர்த்து அவரைக் கட்சிக்கு எதிரான பேர்வழியாக மாற்ற முடியுமா எனப் பரீட்சிப்பதே மூளைச் சலவை புனர்வாழ்வு முகாமின் இலக்காகியது. அதனால் அரலகங்கவில பொலிசிலும் இருந்திராத தடைகள் பல புனர்வாழ்வு முகாமில் கட்சியின் மீது திணிக்கப்பட்டது. கட்சி அங்கத்தவர்கள் இராஜ்குமாரை சந்திப்பதும் கூட முகாம் அதிகாரிகளால் தடைசெய்யப்பட்டது.

ஆனால் முகாம் அதிகாரிகளின் கணிப்பில் ஒரு சிறிய குறைபாடு இருந்தது எனக் கூற வேண்டும். அது சோசலிச சமத்துவக் கட்சிக்கு பதுளை மாவட்டத்திலும் -சிறப்பாக பண்டாரவளைப் பிராந்தியத்திலும் கட்சிக்கு இருந்துவந்த அரசியல் ஆளுமையாகும். அது நாம் கஷ்டத்துடன் நீண்டகாலமாகக் கட்டியெழுப்பிய ஒரு நிலைமையாகும். ஆதலால் என்ன தடை விதிக்கப்பட்டாலும் இராஜ்குமாரின் சுகதுக்கங்களை ஆயவும் சோ.ச.க., அனைத்துலகக் குழு உலகம் பூராவும் அவர் சார்பில் நடாத்தி வந்த அரசியல் பிரச்சாரத்தை பற்றி இராஜ்குமாரைத் தினமும் நனவுபெறும் பொருட்டு உபாயத்தை கையாள்வது எமக்கு சிரமமான காரியமாக இருக்கவில்லை. அதற்கு எமக்கு உதவியவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு நாம் அதை இங்கு நினைவுகூர்கின்றோம்.

புனர்வாழ்வு முகாமில் நாம் மற்றொரு முக்கிய அரசியல் விடயத்தைக் கற்றுக் கொள்ள முடிந்தது. அது முகாம் நிர்வாகியான கப்டன். அபேரத்ன தொடர்பானது. இராஜ்குமாரின் உரிமைகளைக் காக்கும் பொருட்டு நான் அந்த முகாமுக்கு எடுத்த டசின் கணக்கான தொலைபேசி அழைப்புக்களில் என்னுடன் பேசிய புடுகேவலமான பேர்வழி அவனே. இப்பேச்சைக் கேட்டுக் கொண்டுள்ளவர்களில் அரசியலுக்கு புதியவர்கள் ஆச்சரியப்படக்கூடும். ஆனால் அந்தக் கப்டன் ஒரு பழைய ஜே.வீ.பி.காரன். அவன் 1970-77 கூட்டரசாங்கம் தொடுத்த ஒடுக்குமுறையின் கீழ் புனர்வாழ்வு பெற்று, முதலாளித்துவ அரசின் சேவைக்கு சேர்ந்து கொண்டவன். இப்போது ஏனைய இளைஞர்களையும் பொது மக்களையும் அரச வன்முறையின் மூலம் நசுக்கித் தள்ள உதவுகின்றான். இது தற்செயலானதா? நன்றாக சிந்தித்துப் பாருங்கள். யூ.என்.பி. அரசாங்கத்தின் கைக்கூலிகளுடன் சேர்ந்து ருக்மன் சேனநாயக்கவின் குசினிகளில் ஒழிந்து கொண்டு "தேசபிரேமி ஜனதா வியாபாரய" ( தேசபக்த மக்கள் இயக்கம்) மூலம் தாய்நாட்டுக்கு விடுதலை பெற்றுத்தர செயற்பட்ட ஜே.வீ.பி.போன்ற இயக்கங்களில் இத்தகைய மக்கள் விரோத கயவர்கள் தலைகாட்டுவது தற்செயலானதாக இருக்க முடியுமா? இல்லை. அது அத்தகைய கட்சிகள் திரட்டிக் கொண்டு, பயிற்சியளிக்கும் ஆட்களுக்கு வழங்கும் அரசியல் பயிற்சியின் மைய இலட்சணமாகும். இராஜ்குமார் பற்றிய பிரச்சாரத்தில் நாம் பெற்றுக்கொண்ட புதிய அனுபவத்தில் கருக் கொண்டுள்ள ஆபத்தினை புரிந்து கொள்வது மக்கள் இயக்கத்தின் பாதுகாப்பை உறுதி செய்ய அத்தியாவசியமானது.


## முதலாளித்துவ நீதிமன்றம்

தோழர்.இராஜ்குமாரை விடுதலை செய்விப்பதற்காக எமது கட்சி எமது அனைத்துலக இயக்கத்தின் சக சிந்தனையாளர்களின் ஆதரவுடன் அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுவந்த அதே வேளையில் நாம் அதற்காக முதலாளித்துவ நீதிமன்றத்தை பாவித்து சட்ட நடவடிக்கைகள் எடுக்கவும்

15ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# மார்க்சிசமும் உற்பத்தியின் பூகோளமயமாக்கலும்

**அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சி தேசிய செயலாளர் நிக் பீம்ஸ் மெல்போர்ண் லாட்ரொப் பல்கலைக் கழகங்களில் 1997 ஏப்பிரல்-மே மாதங்களில் நிகழ்த்திய விரிவுரை**

அடுத்துவரும் ஒரு சில ஆண்டுகளுள் இருபதாம் நூற்றாண்டின் முடிபும் புத்தாயிரம் ஆண்டுகளின் உதயமும் நெருங்க நாம் இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றில் ஒரு தொகை மீளாய்வுகள் இடம்பெறுவதைக் காணலாம். அனைத்து பொருளாதார, சமூக போக்குகளின் பூகோளமயமாக்கத்தின் பெறுபேறாக- பரந்த அளவிலான தொழில் நுட்ப முன்னேற்றங்களினால் பொருளாதார, சமூக வாழ்க்கையில் ஏற்படுத்தப்பட்ட பரிணாமங்கள் ஒரு மிகவும் பிரபல்யமான பண்புகளாகக் கவனத்துக்கு உள்ளாகும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

பொதுவாக எடுத்தால் வரலாற்றுப் போக்குக்களின் பரிணாமத்தையும் தூரத்தையும் கணக்கில் எடுக்கையில் ஒருவரின் வாழ்க்கை எதுவிதத்திலும் ஒரு பிரயோசனமான அளவுகோல் அல்ல. அது (ஒருவரின் வாழ்க்கை) அபிவிருத்திகளின் சார்பு வேகத்தைக் பற்றிய ஒரு கருத்தைப் பெற்றுக் கொள்ள உதவுகின்றது.

எனது தலைமுறையைச் சேர்ந்த ஏனையவர்களைப் போலவே எனக்கும் நினைவுக்கு வருவது அதிக காலங்கள் கடந்து செல்வதற்கு முந்திய காலப்பகுதியில் ஒரு அனைத்துலகத் தொலைபேசி அழைப்பு பெறுவது என்பது எவ்வளவு கஷ்டமாக இருந்தது என்பதாகும். முதலில் ஒருவர் ஒரு அனைத்துலக தொலைபேசி ஒபரேட்டரைத் தேடிப்பிடித்து அழைப்புக்குப் பதிவு செய்ய வேண்டும். பின்னர் உரிய நேரத்தில் அழைக்கப்படும் வரை அவர் காத்திருக்க வேண்டும்.

தொடர்பு கிடைத்ததும் கலந்துரையாடலின் முதற்பாகம் கா, கூ சத்தங்களைக் கொண்டிருக்கும். நீங்கள் இருக்கின்றீர்களா? நான் பேசுவது கேட்கிறதா? அங்கு நேரம் என்ன? ஆகியவற்றைக் கொண்டிருந்தது. சரியாகச் சொன்னால் இவ்வளவு தூரத்துக்கு அப்பால் பேச முடியும் என நம்ப முடியாத அளவுக்கு நிலைமை இருந்தது.

இன்று ஒருவர் அத்தகைய அழைப்புக்களை சாதாரணமாக செய்து கொள்கிறார். மேலும் அனைத்துலக தொலைபேசி முறையானது ஒரு தொகை தகவல்களை அனுப்பிவைக்கின்றது. அது அனைத்துலக வர்த்தக, நிதிச் சந்தைகளை ஓட்டுகின்றது. மிகவும் பரந்து விரிந்த பிராந்தியங்களில் உற்பத்தியை ஒழுங்கமைக்க உதவுகின்றது. தூரத்தில் உள்ள கண்டங்களுக்கு இடையேயான நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கின்றது.

அத்தோடு மின்நுண்ணணுவியலின் (Micro electronics) அபிவிருத்தியால் ஏற்பட்ட இந்த தொழில்நுட்பப் புரட்சி தீவிரமடைந்து வருகின்றது. ஒரு காலத்தில் அற்புதங்கள் எனக் கொள்ளப்பட்ட புதிய போக்குக்களும் விதிமுறைகளும் பற்றிய தகவல்கள் தினமும் வந்து கொண்டுள்ளன. உதாரணமாக அதிக காலம் செல்வதற்கு முன்னர் நிஜ யதார்த்த தொழில்நுட்பம் (virtual reality) எனப்படும் விஞ்ஞானத்துறை, ஒரு சத்திரசிகிச்சை டாக்டர் ஒரு நோயாளி மீது மிகவும் சிக்கலான சத்திர சிகிச்சையை உலகின் மறுபுறத்தில் இருந்து கொண்டு செய்யக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறெனினும் மனித இனத்தின் சமூக நிலைமையை ஆராய்வோமாயின் நாம் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஒப்பீட்டு அளவில் ஒரு எதிர்மாறான நிலைமையைக் காண்கின்றோம்.

ஒவ்வொரு சமூகப் புள்ளி விபரங்களும் பரந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதையும் சமூக சமத்துவமின்மையை ஆழமாக்கி உள்ளதையும் அம்பலமாக்குகின்றது. வேலையின்மை தொடர்ந்தும் வர்த்தக சைக்கிள் ஓட்டத்திற்கு ஏற்ப கூடிக் குறைவதாக இல்லை. ஆனால் இது சகல முக்கிய முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார அமைப்புடன் ஆழமான முறையில் பதிந்து போயுள்ளது. சமூக, பொருளாதார பாதுகாப்பின்மை வாழ்க்கையின் ஒரு நிரந்தரமான நிலைமையாக உள்ளது.



நிக் பீம்ஸ் மெல்போர்ண் பல்கலைக் கழகத்தில் விரிவுரை நிகழ்த்தும் போது எடுக்கப்பட்ட படம்

தினமும் பேரழிவுகள் பற்றிய செய்திகள் வந்துகொண்டுள்ளன- சயிரேயில் ஆயிரக்கணக்கான அகதிகள் காணாமல் போதல் அல்லது அல்பேனியாவில் இருந்து பயணமான படகுநிறைந்த வெளிநாட்டவர்கள் கடலில் மூழ்கினர். ஒரு ஆண்டுக்கு முன்னர் நாம் போட்ஆதரில் பயங்கரமான படுகொலைகளைக் கண்டோம். வரலாற்றில் இடம்பெற்ற ஒரு பெரிய பரந்த படுகொலை. அதைத் தொடர்ந்து ஒரு ஆண்டின் பின்னர் சன்டியாகோவில் 39 மக்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

தொழில்நுட்பத்திலும் உற்பத்தி இயலளபிலுமான பரந்த முன்னேற்றங்கள் மனித வரலாறு கண்டிராத சமூக, பொருளாதார சமத்துவமின்மையின் ஆழமான வளர்ச்சியுடன் இணைந்து கொண்டுள்ளது.

ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்டத்தினால் (UNDP) கடந்த ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை உலகின் 358 கோடீஸ்வரர்கள் 76000 கோடி டாலர் தேறிய செல்வத்தை அனுபவிப்பதாக குறிப்பிட்டது. இது உலகின் சனத்தொகையில் 45 வீதத்தினரான ஏழைகளின் 230 கோடி மக்களின்- மொத்த வருமானத்துக்கு சமமானது.

கடந்த 15 ஆண்டுகளுள் உலகம் பொருளாதார ரீதியில் மேலும் மேலும் துருவப்படுத்தப்பட்டு உள்ளது எனவும் நாடுகளுக்குள் நிலவும் சமத்துவமின்மையைப். போலவே நாடுகளுக்கு இடையேயான சமத்துவமின்மையும் உக்கிரம் கண்டுள்ளதாயும்" இந்தப் போக்குக்கள் அடுத்த நூற்றாண்டு வரை மேலும் முன்நோக்கிச் செல்லுமானால் "பிரமாண்டமான உபரிகளைக் கொண்டதும் மனித பொருளாதார சமத்துவமின்மையில் நகைப்புக்கு இடமானதுமான ஒரு உலகினை சிருஷ்டிக்கும் "எனக் குறிப்பிட்டது.

அந்தப் போக்குக்கள் தொடர்ந்து வருவதோடு மட்டுமல்லாது உக்கிரம் கண்டும் வருகின்றது. ஜெமினி கொன்சல்டிங் பினான்சியல் நிறுவனத்தின் மெரில் லின்சினால் ஏப்பிரல் 22ம் திகதி பிரசுரிக்கப்பட்ட ஒரு அறிக்கை உலகின் செல்வந்தர்களின் 6மில்லியன் மில்லியனர்கள் சொத்தின் அளவு கடந்த ஆண்டில் 16 ரில்லியன் டாலர்களாக (இலட்சம் கோடி )உயர்ந்தது எனவும் இந்நூற்றாண்டின் இறுதியில் 24 ரில்லியன்(அமெரிக்க)டாலர்களை எட்டும் எனவும் தெரிவித்தது. அது 230 கோடி மக்களின் மொத்த வருமானத்தைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமானது.

அனைத்து முக்கிய முதலாளித்துவ நாடுகளினதும் வருமான, செல்வ பங்கீட்டுப் புள்ளிவிபரங்கள் இதே கதையையே சொல்கின்றது. அமெரிக்காவில் 25-30 வயதுக்கு இடைப்பட்ட சகல மக்களிலும் 32 வீதத்தினர் நால்வர் கொண்ட ஒரு குடும்பத்தைப் பராமரிப்பதற்கு அவசியமான வறுமைக் கோட்டுக்கு மேலான தொகையை விடக் குறைவாகவே உழைக்கின்றனர். இந்தப் போக்கு தொடருமானால் இந்நூற்றாண்டின் இறுதியில் மேற்பார்வை மட்டத்துக்கு கீழான ஊழியர்களின் சம்பளம் 1950ல் இருந்த சம்பள மட்டத்துக்கு மீண்டும் வீழ்ச்சி அடையும். அமெரிக்காவில் தலா உற்பத்தியில் பிரமாண்டமான அதிகரிப்புக்கு இடையேயும் அரை நூற்றாண்டுக்கு சாதாரண தொழிலாளர்களின் மெய்ச் சம்பளத்தில் அதிகரிப்பு இடம்பெறவில்லை.

1950பதுகளிலும் 1960பதுகளிலும் அவுஸ்திரேலியாவின் தொழிலாளர்களின் மெய் வருமானம் வருடாந்தம் 4வீதத்தினால் அதிகரித்தது. இன்று நடுத்தர வருமானம் பெறுவோர் என வருணிக்கப்படும் 30000 டாலருக்கும் 50000 டாலருக்கும் இடையே உழைப்போர் அதே வீதத்தினால் மறைந்து வருவதாகக் கணிக்கப்பட்டுள்ளது. மூன்று தொழில்களில் ஒன்று இன்று பகுதி நேரம் அல்லது அமையத் தொழிலாக உள்ளது. இப்புள்ளி 1970பதுகளில் இருபதுக்கு ஒன்றாக இருந்தது.

பிரித்தானிய புள்ளிவிபரங்களும் அதே கதையையே சொல்கின்றது. முன்னொருபோதும் இல்லாத அளவில் செல்வத்தின் மறுபங்கீடு வறியவர்களிடம் இருந்து செல்வந்தர்களிடம் செல்கின்றது. 13-14 மில்லியன் மக்கள் வறுமையில் வாழச் சனத்தொகையின் 10 வீதத்தினரான செல்வந்தர்கள் தமது செல்வத்தை 1979ல் இருந்து 61 வீதத்தினால் உயர்த்திக் கொண்டுள்ளனர். சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினரான செல்வந்தர்களின் வருமானம் வறியவர்களில் ஐந்தில் ஒரு பங்கினரின் வருமானத்தைக் காட்டிலும் 10 மடங்கு அதிகம். இந்த நூற்றாண்டில் முதற் தடவையாக இளம் ஆடவர்களின் ஆயுள் காலம் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்தப் பொருளாதாரப் போக்குக்களில் இருந்து தோன்றும் அரசியல் காட்சிகள் சில காலத்துக்கு முன்னர் தொழிலாளர் வர்க்கத்தின் பேரில் பேசிவந்த இந்த அமைப்புக்கள்- சமூக ஜனநாயக, தொழிற்கட்சி, தொழிற்சங்கங்கள்- தொழில், சம்பளம், கல்வி, சமூக நலன்புரி நிலைமைகள் ஆகிய சகலதையும் ஒழித்துக் கட்ட வேண்டும் என்ற ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களில் பொருளாதார, நிதி சக்திகளினால் கோரப்படும்

www.padippakam.com

ஈவிரக்கமற்ற தாக்குதல்களை தொடுப்பவர்களாக மாறியுள்ளனர்.

உலகம் பூராவும் பரந்த அளவிலான மக்கள் தமது காலின் கீழ் கொண்டிருந்த பழைய உத்தரவாதமளிக்கப்பட்ட நிலைமைகள் வெட்டப்பட்டுச் செல்வதைக் காண்கின்றனர். பொருளாதாரப் போக்குக்கள் அவர்களின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாகவும் பழைய விதத்தில் வேலை செய்வது இனியும் சாத்தியம் இல்லையெனவும் அவர்களை உணர வைக்கின்றது:

சமூகச் சீர்திருத்தம் பற்றிய பழைய வேலைத்திட்டம் வீழ்ச்சி கண்டமையும் இருந்து கொண்டுள்ள பொருளாதார, சமூக அமைப்பினை சவால் செய்யும் தொழிலாளர் வர்க்கத்தின் பரந்த அரசியல் இயக்கம் இல்லாது இருப்பதும் ஏனைய சக்திகள் நிரப்ப முயற்சி செய்யும் ஒரு அரசியல் வெற்றிடம் தோன்ற இட்டுச் சென்றுள்ளது.

இனவாதத்தையும் புலம்பெயர்ந்து வந்தவர்களுக்கு எதிரான பிரச்சாரத்தையும் ஊக்குவிக்கும் பாசிச பாணியிலான இயக்கங்களதும் தீவிர வலதுசாரி அமைப்புக்களதும் தோற்றத்தின் பின்னணியாக இவையே இருந்து கொண்டுள்ளன.

இந்த அனைத்துலகத் தோற்றப்பாட்டின் அவுஸ்திரேலிய பிரதிபலிப்பின் மீது கருத்துத் தெரிவிக்கையில் ஏப்பிரல் 26ம் திகதிய "அவுஸ்திரேலியன்" பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் குறிப்பிட்டதாவது: திருமதி போலின் ஹன்சனும் தனி தேசிய இனம் (One Nation) என்ற அவளின் அரசியல் கட்சியும் மறைந்து போய்விடாத ஒரு அரசியல் தோற்றப்பாடாகும். ஏனெனில் அவை தேசிய வாழ்வின் அம்சங்கள் பற்றிய பல மனிதர்களின் உணர்வுகளுள் வேரூன்றிக் கொண்டுள்ளது."

எனினும் அங்ஙனம் குறிப்பிட்ட போதிலும் கீழ்க் கண்ட கேள்வி தோன்றும் என்பதை அந்த ஆசிரியத் தலையங்கம் எழுதிய பேர்வழி நினைத்தும் கூடப் பார்க்கவில்லை: இத்தகைய அமைப்புக்கள் வளர்ந்து செழிப்பதற்கான ஒரு சூழலை உருவாக்கிய பொருளாதார, சமூக வாழ்வின் காரணிகள் என்ன?

இந்தக் கேள்வியை கணக்கில் எடுக்கத் தன்னும் தவறியமை புத்திஜீவி வங்குரோத்து மட்டும் அல்ல. மிகவும் அடிப்படையான ரீதியில் அது ஒரு வர்க்க நிலைப்பாட்டை அம்பலப்படுத்துகின்றது.

இன்று இருந்து கொண்டுள்ள அமைப்பின் தலைமைக் குருமாரான பல்கலைக் கழகங்களதும் வர்த்தக நிறுவனங்களதும் தொழில்சார் பொருளியலாளர்களுக்கும் வங்கிகளதும் நிதிக் கூட்டுத்தாபனங்களதும் பேச்சாளர் களுக்கும் பூகோள ரீதியான சந்தையானது அதன் ஆணைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய பொருளாதார, சமூக அமைப்பின் உயர்ந்த கட்டளைகளாகும்.

அவர்கள் வீழ்ச்சி கண்டு செல்லும் வாழ்க்கைத் தரங்கள் சமூக நிலைமைகள் பற்றி கவனத்தைச் செலுத்தினால்- அங்ஙனம் செய்வது அதற்கான பதில் உற்பத்தி விளைதிறனை அதிகரிக்கவும் அதை பூகோள ரீதியிலான போராட்டத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் என்பதையும் ஊர்ஜிதம் செய்வதற்குமே.

இங்கு தெளிவான கேள்விகளுக்கு பதில் இறுக்கப்படாததோடு அவை ஒரு போதும் எழுப்பப்பட்டதும் கூடக் கிடையாது.

தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வரும் வாழ்க்கைத் தரத்துக்குப் பதில் உழைப்புத் திறனையும் விளைதிறனையும் அதிகரிப்பதும் சகல இடங்களிலும் பரந்து பட்டுள்ள சந்தையை தடையின்றி செயற்பட வைப்பதுமேயானால் மனித இனத்தின் வரலாற்றில் காணக்கிடைத்த பிரமாண்டமான உற்பத்தி விளைதிறன் அபிவிருத்தியினுள் பரந்த மக்களின் சமூக நிலைமைகள் வரலாற்று ரீதியில் முன்னொருபோதும் இல்லாத விதத்தில் வீழ்ச்சி கண்டு இருப்பது ஏன்?

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் தொழிலாளர்களை நூற்றுக்கணக்கிலும், ஆயிரக் கணக்கிலும் சில இடங்களில் பல்லாயிரக் கணக்கிலும் ஈடுபடுத்திய கைத்தொழில் போக்குக்கள் இப்போது சிலரை மட்டும் கொண்டு நடாத்தப்படுகின்றன.மேலும் 1960பதுகளின் கடைப்பகுதியில் வாழ்க்கைத் தரம் உயர்ந்ததாக இருந்ததோடு 1970பதுகளின் தொடக்கத்தில் சமூக சீர்திருத்தங்கள் விஸ்தரிக்கவும்பட்டன. இன்று பரந்த அளவில் அதிகரித்த உற்பத்தி விளைதிறன் நிலைமையின் கீழ் வாழ்க்கைத் தரமும் சமூக சீர்திருத்தங்களும் வெட்டப்பட்டு வருகின்றன.

வங்கிகளதும் நிதிக் கூட்டுத்தாபனங் களதும் பேச்சாளர்கள் சந்தையின் கட்டளைக்கு முழுமனே கீழ்ப்படியுமாறு வேண்டுகையில் குட்டி முதலாளித்துவ அரசியல் வாதிகளின் வேலைத்திட்டம் பொருளாதாரத்தினை தேசிய மட்டத்தில் நிர்வகிக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.


பிரான்சின் லாபென் அல்லது அவுஸ்திரேலியாவின் போலின் ஹன்சன் போன்ற சக்திகளில் இருந்து தொடங்கி, இன்டர்நஷனல் சோசலிஸ்ட், டெமோகிரட்டிக் சோசலிஸ்ட் கட்சி, ஸ்பார்ட்டசிஸ்ட் லீக் போன்ற தீவிரவரத எதிர்ப்பு அரசியல் அமைப்புக்கள் வரை அவர்களின் அரசியலை சுருக்கித் தொகுத்துச் சொன்னால் : "கடந்த காலத்தை நோக்கி முன்செல்வோம்"

சுங்கவரி பாதுகாப்பு, புலம்பெயர்ந்து வருபவர்கள் மீது கட்டுப்பாடு என்ற கோரிக்கைகளின் வடிவில் ஹன்சன் இனவாத குரோதத்தை கக்க முயற்சிக்கின்றார். அவளது வேலைத் திட்டத்தில் புதியவை ஒன்றும் கிடையாது. அது பல தசாப்தங்களாக தொழிற் கட்சியினதும் தேசிய அரசியலினதும் வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

"ஆசியன் கும்பல்"களதும் "ஆசியமயமாக்கத்தினதும்" ஆபத்தை அவள் வெளிக் கொணர்ந்தமையை முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் கண்டிக்கும் போது ஒருவர் இதே முதலாளித்துவ வெகுஜன தொடர்புச் சாதனங்கள் ஒரு சில தசாப்தங்களுக்கு முன்னர் வியட்னாம் யுத்தத்தினால் உருவானதாகச் சொல்லப்பட்ட "ஆசியமயமாக்க அச்சுறுத்தல" அவுஸ்திரேலியாவில் தேசிய --- இயக்கத்தின் மையப் பிரச்சினையாக்கப்பட்ட விதத்தினை நினைவில் கொள்ள வேண்டும்.

தீவிரவாதிகள் ஹன்சனையும் அவளைப் போன்றவர்களையும் சீறிச் சினக்கும் கண்டன அறிக்கைகளை வெளியிடுகின்றார்கள். ஆனால் சாராம்சத்தில் அவர்களின் அரசியல் அவளின் அதே நிலைப்பாட்டிலேயே நின்று கொண்டுள்ளது. இவர்கள் அனைவரும் தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட பழைய தொழிற் கட்சி , தொழிற்சங்கங்கள் போன்ற அமைப்புக்களுக்கு உயிரூட்ட ஏதேனும் வழி கண்டுபிடிக்கப்பட்ட வேண்டும் எனவும் தேசிய அரசிற்கு நெருக்குவாரம் கொணர்வதன் மூலம் சலுகைகளை வெற்றி கொள்ள முடியும் எனவும் வலியுறுத்துகின்றார்கள்.

அவர்களின் வெளியீடுகளை நீங்கள் படிப்பின் உலக முதலாளித்தவத்தின் கட்டுமானத்தின் வரலாற்று ரீதியான மாற்றங்களுக்கு இடையே மிகவும் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததான- பூகோளமயமாக்கம் வெறும் கட்டுக்கதை என்ற கருத்தை அவர்கள் பேணுவதை நீங்கள் கண்டு கொள்ள முடியும். அது என்னவெனில் தொழிலாளர் வர்க்கத்தினை தமது ஆணைக்கு கீழ்ப்படுத்தி வைத்திருக்க நெருக்குவதற்கு ஆளும் வர்க்கம் தொடுக்கும் பிரச்சார இயக்கமாகும். சீர்திருத்தத்துக்கும் சலுகைகளுக்கும் மூலதனத்துக்கு நெருக்குவாரம் கொணர தேசிய அரசினைப் பாவிப்பதற்கு மனம் உண்டானால் இன்னமும் இடம் உண்டு



கார்ல் மார்க்ஸ்

என அவர்கள் வாதிடுகின்றனர்.

மார்க்சிச முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்ட சோசலிச சமத்துவக் கட்சியின் வேலைத்திட்டம் இந்தச் சகல போக்குக்களுக்கும் எதிராக அபிவிருத்தி செய்யப்பட்டதாகும்.

நாம் பூகோளமயமான உற்பத்தியை கண்டிக்க இல்லை. அதன் சிறப்பு முக்கியத்துவத்தை மறுக்கவில்லை. அல்லது இது முதலாளித்துவ தேசிய அரசினால் கட்டுப்படுத்தப்பட்டு நெறிப்படுத்தப்பட வேண்டும் எனக் கோரவும் இல்லை.

இதற்கு மாறாக எமது நோக்கம் உலக முதலாளித்துவத்தில் இந்த வரலாற்று பரிணாமம் எங்கே இட்டுச் செல்கின்றது என்பதை விளக்கி அதனால் உருவாக்கப்பட்டுள்ள பிரமாண்டமான சமூகக் கொந்தளிப்புக்கு முகம் கொடுக்க தயாராகுவதேயாகும். எல்லாவற்றுக்கும் மேலாக அந்தக் கொந்தளிப்புக்களால் வரலாற்று நிகழ்ச்சி நிரலில் உள்ளடங்கும் அரசியல் பணிகளை நிறைவேற்றுவதற்காக புதிய தலைமையைக் கட்டி எழுப்புவதேயாகும்.

## உற்பத்திப் போக்கில் ஒரு பண்பு மாற்றம்

பூகோளமயமாக்கம் என்றால் என்ன? என்பதை விளக்குவதுடன் நான் ஆரம்பிக்கின்றேன். இந்தக் கேள்வி சம்பந்தமாக பல்வேறு தீவிரவாத அமைப்புக்களும் சிருஷ்டித்துள்ள குழப்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. முதலாளித்துவம் எப்போதும் ஒரு பூகோள ரீதியான பொருளாதார அமைப்பாக இருந்து வந்துள்ளதாகக் காட்டி- முதலாளித்துவம் 16ம் நூற்றாண்டின் கண்டுபிடிப்புக்களின் பின்னர் உலக சந்தை வளர்ச்சி கண்டதுடன் தோன்றியதாக கூறுவதன் மூலம் அவர்கள் கடந்த 20 ஆண்டுகளுள் உண்மையில் அடிப்படையான எதுவும் இடம் பெற்றுவிடவில்லை என வாதிடுகின்றனர்.

இதன்படி ஜனநாயக சோசலிஸ்ட் கட்சி "பூகோளமயமாக்கத்தின் கட்டுக்கதை" பற்றிப் பேசிக் கொள்வதை நாம் காண முடிகின்றது. இன்டர்நஷனல் சோசலிஸ்ட் குழுவினர் இன்றைய அமைப்பு அனைத்துலக ரீதியானது என ஒப்புக் கொள்ளும் அதே வேளையில் அது எப்போதும் அப்படியே இருந்து வந்துள்ளது எனக் கூறுகின்றார்கள். இதே வேளையில் சொல்ல வேண்டிய அனைத்தும் 1916ல் லெனினால் எழுதப்பட்ட ஏகாதிபத்தியம் என்ற நூலில் எழுதப்பட்டுவிட்டதால் எந்த ஒரு புதிய ஆய்வுகளும் ஒரு "காட்டிக்கொடுப்பாகும்" என ஸ்பார்ட்டசிஸ்ட்டுகள் பிரகடனம் செய்கின்றார்கள்.

முதலாளித்துவம் எப்போதும் ஒரு பூகோள ரீதியான பொருளாதார அமைப்பாக இருந்து வந்துள்ளது உண்மை. ஆனால் பூகோளமயமாக்கப் போக்கானது இருந்து வரும் முதலாளித்துவ நிறுவனங்கள், வங்கிகள், நிதிச் சந்தைகளில் ஏற்கனவே இருந்து கொண்டுள்ள அனைத்துலக நடவடிக்கைகளிலான ஏதோ ஒரு தொகைரீதியான வெறும் அதிகரிப்பு அல்ல.

இது குறிப்பது முதலாளித்துவ உற்பத்தி அமைப்பில் ஏதோ ஒரு பண்பு ரீதியான மாற்றத்தை பற்றியதாகும். உற்பத்தியில் ஒரு அடிப்படையான மீளமைப்பாகும்.

கடந்த காலத்தில் உற்பத்திப் போக்கானது பெருமளவுக்கு ஒரு தரப்பட்ட தேசியப் பொருளாதாரத்தின் வரையறைக்குள்ளேயே இடம்பெற்றன. அனைத்துலக வர்த்தகமானது உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து மூலப்பொருட்களையும் உணவுப் பொருட்களையும் இறக்குமதி செய்வதையும் முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதையும் உள்ளடக்கி இருந்தது. ஆனால் இந்த அனைத்துல பரிமாற்ற அமைப்பினுள் உற்பத்திப் போக்கானது தரப்பட்ட ஒரு தொகை தேசிய எல்லைகளுக்குள் இடம்பெற்றது.

உதாரணமாக ஜெனரால் மோட்டோர்ஸ் ஹோல்டன் கம்பனி அனைத்துலக அல்லது பன்னாட்டு கூட்டுத்தாபனத்தின் அவுஸ்திரேலியன் கிளையாகும். ஆனால் இது ஒரு தேசிய உற்பத்தியாளனாக செயற்பட்டது. விளம்பர பாதையில் "அவுஸ்திரேலியன் சொந்தக் கார்" என அழைக்கப்பட்டதை அது உற்பத்தி செய்தது. அவ்வாறே ஜேர்மனியில் அது ஓபல் வாகனத்தை உற்பத்தி செய்தது. உற்பத்திப் பொருட்கள் பெருமளவுக்கு தனியொரு தேசியப் பொருளாதாரத்தின் உள்ளேயே உற்பத்தி செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டன. அவற்றின் உற்பத்திக்கான உழைப்பு அந்த நாட்டினுள் இருந்தே பெறப்பட்டது.

இன்று தொடர்ந்தும் அத்தகைய ஒரு நிலைமை இருந்து கொண்டில்லை. உற்பத்திப் போக்கினைக் கலைத்து விடுவதும் அவற்றை உலகின் வேறுபட்ட பகுதிகளுக்கு எடுத்துச் சென்று நிறுவுவதன் மூலமும் பண்பாக்கம் செய்யப்பட்ட ஒரு புதிய அனைத்துலக உழைப்புப் பகுப்பு தோன்றியுள்ளது.

இந்தப் போக்கின் முக்கிய ஏஜன்சியாக ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் இருந்து கொண்டுள்ளதோடு அதன் தொழிற்பாட்டின் பரிமாணத்தை நாம் ஒரு சில புள்ளிவிபரங்களை ஆய்வு செய்தாலும் மதிப்பிட்டுக் கொள்ள முடியும். உலக வர்த்தகத்தில் வரவர அதிகரித்த பங்கு கம்பனிகளுக்கு இடையேயான வர்த்தகமாக இடம்பெற்று வருகின்றது. அமெரிக்காவிலும் யப்பானிலும் முழு வர்த்தகத்தில் நூற்றுக்கு 50க்கு அதிகமான அளவு ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு இடையேயான வர்த்தகத்தைக் கொண்டுள்ளது.பிரித்தானிய உற்பத்திப் பொருள் ஏற்றுமதியாளர்களில் ஐந்தில் நான்கு பங்கு பிரித்தானிய உடமையாளர்களைக் கொண்ட வெளிநாட்டுக் கிளைகளைக் கொண்ட கம்பனிகளுக்கு இடையில் அல்லது பிரித்தானியாவினுள் தொழிற்படும் வெளிநாட்டு உடமையைக் கொண்ட கம்பனிகளுக்கு இடையில் இடம்பெறும் வர்த்தகமாக நடைபெறுகின்றது.

பூகோளமயமாக்கல் போக்கின் விஸ்தீரணத்தினை வெளிநாட்டு நேரடி முதலீட்டு வேகத்தில் கண்டு கொள்ள முடியும். 1970பதுகளில் வெளிநாட்டு நேரடி முதலீடும் உள்நாட்டு வெளியீடும் உள்நாட்டு நாட்டு முதலீடும் மொத்தத்தில் ஒரே வேகத்திலேயே வளர்ச்சி கண்டன. 1980பதுகளில் இருந்து வெளிநாட்டு நேரடி முதலீடு ஏனைய இரண்டையும் தாண்டி வளர்ச்சி காணத் தொடங்கியதோடு 1985-90 காலப்பகுதிக்கு இடைப்பட்ட காலத்தில் நேரடி வெளிநாட்டு முதலீடு உள்நாட்டு உற்பத்தியை விட நான்கு மடங்காலும் உள்நாட்டு முதலீட்டை விட இரண்டு மடங்கு வேகமாகவும் வளர்ச்சி கண்டது.

இந்தப் புள்ளி விபரங்களின் முக்கியத்துவத்தினை தொகை ரீதியில் மதிப்பிட்டுவிட முடியாது. அவை உற்பத்தி அமைப்பில் ஏற்பட்ட ஒரு பண்புரீதியான மாற்றத்தின் வெளிப்பாடுகள் ஆகும் - முதலாளித்துவத்தின் முழு வரலாற்று அபிவிருத்தி பூராவும் தொழிற்பட்டுள்ள போக்கின் உச்சக் கட்டமாகும்.

மிகுதி அடுத்த இதழில்

படிப்பகம்

www.padippakam.com

# தொண்டமானின் புதிய மோசடி

தோட்டத் தொழிலாளர்களிடையே வெறுப்புக்கு உள்ளாகியுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் எஸ் .தொண்டமான் தொழிலாளர் சார்பில் மூன்று கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாக கடந்த சில தினங்களாக முதலாளித்துவ பத்திரிகைகளில் பெரும் பிரச்சாரம் செய்து வருகின்றார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி பெற்றுக் கொடுத்தல், இன்னமும் தனியார்மயமாக்கப்படாது உள்ள 43 தோட்டங்களின் தொழிலாளர்களுக்கு அரச நிவாரணம் வழங்குதல் , ஏற்றுமதியாகும் ஒவ்வொரு கிலோ தேயிலைக்கும் 50சதம் அறவிட்டு தொழிலாளர்களுக்கு நலன்புரி சேவை வசதி செய்து கொடுத்தல் என்பவையே இ.தொ.கா. தலைவர் சமர்ப்பித்துள்ள கோரிக்கைகள் எனச் சொல்லப்படுகின்றது. "அரசாங்கம் தொழிலாளர்கள் பற்றிக் கடைப்பிடிக்கும் போக்கையிட்டு நான் மிகவும் மனமுடைந்து போயுள்ளேன்" எனத் தொண்டமான் முதலைக் கண்ணீர் வடித்துள்ளார்.

இ.தொ.கா.தலைவர் மோசடி வார்த்தைகளை அளக்கத் தொடங்கி இருப்பது தொழிலாளர்களையிட்டு அவருக்குள்ள அன்பினாலோ அல்லது அக்கறையினாலோ அல்ல.

கடந்த 20 ஆண்டுகளாக தொண்டமான் யூ.என்.பி. அரசாங்கம், பொதுஜன முன்னணி அரசாங்கங்களில் அமைச்சராக விளங்கி தனக்கும் தனது குடும்பத்தவருக்கும் ஏராளமாக வாரிக் கட்டிக் கொண்டது தோட்டத் தொழிலாளர்களை மிகவும் கேவலமாகக் காட்டிக் கொடுத்தும் சுரண்டலுக்கு உள்ளாக்கியுமேயாகும். இ.தொ.கா.வின் முன்னணியில் உள்ள ஏனைய அதிகாரிகளும் அமைச்சர்களும் அரசாங்கங்களில் அதிகாரத்தில் இருந்து கொண்டு வயிற்றை நிரப்பிக் கொண்டனர். இன்று தோட்டத் தொழிலாளர்களின் சார்பில் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இப்போது கதையளப்பது தமக்கு மேண்மேலும் எச்சில் எலும்புத் துண்டுகள் பொறுக்கிக் கொள்வதற்கேயாகும். மறுபுறத்தில் தொழிலாளருக்காகச் செயற்படுவதாகக் காட்டிக் கொண்டு அவர்கள் தமது நிஜ கோரிக்கைகளுக்கான போராட்டத்தில் ஈடுபடாதிருக்க தடுக்கவும் தனது தொழிற் சங்கத்தினுள்ளேயே கால்கட்டு போட்டு வைக்கவும் தொண்டமான் என்ற தொழிற்சங்க மோசடியாளன் செயற்படுவதைக் காணலாம்.

### வேலைப் பகிர்வு

தோட்டத் தொழிலாளர்களது நிஜமான கோரிக்கைகளை தலையெடுக்கவிடாது தடுக்க இ.தொ.கா.அதிகாரத்துவமும் மலையக மக்கள் முன்னணி உட்பட்ட ஏனைய சகல தொழிற்சங்க தலமைகளும் வேலையைப் பகிர்ந்து கொண்டு செயற்பட்டு வருகின்றன.தொண்டமானும் கூட்டுச் சேர்ந்தே தொழிலாளர்களின் சம்பள வெட்டு இடம்பெற்றது. விலைவாசி உயர்வைச் சுமக்க முடியாது தொழிலாளர்கள் அரைப்பட்டினி கிடக்கின்றனர். தொழிற்சங்கத் தலைவர்களின் உதவியோடு தனியார்மயமாக்கப்பட்ட தோட்டங்களில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்யும் தயாரிப்புக்கள் இடம்பெறுகின்றன. தொழிலாளர் வேலைத் துரிதப்படுத்தலுக்கு கீழ்ப்படுத்தப் பட்டுள்ளனர். தோட்ட இளைஞர்களுக்கு எங்கும் வேலை கிடையாது என்ற நிலைமை உருவாகி உள்ளது. கல்வி, வீட்டு வசதி, சுகாதார வசதிகள் தோட்டங்களில் கிடையாது. 160,000 தொழிலாளர்களுக்கு குடியுரிமை கிடையாது. தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக என்றும் இல்லாத விதத்தில் இனவாத ஆத்திரமூட்டல்கள் இடம்பெற்று வருகின்றன. தோட்டத் தொழிலாளர்கள் இராணுவ , பொலிஸ் வேட்டையை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் இந்த எந்த ஒரு பிரச்சினைக்கும் முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்திடம் இருந்தோ அல்லது முதலாளித்துவக் கம்பனிகளிடம் இருந்தோ எதுவிதமான தீர்வும் கிட்டாது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க போராடுவதே தோட்டப்புறத்தில் துன்பமுறும் மக்களின் இன்றைய தேவையாக உள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணத் தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்குவதை தடைசெய்யவே தொண்டமான் இந்த மோசடி "கோரிக்கைகள்" பட்டியலை சமர்ப்பித்துள்ளார்.

### கபட நாடகம்

தொழிலாளர்கள் இந்த மோசடி முதலாளித்துவ தொழிற்சங்கத் தலைவர்களின் கபட நாடகங்களுக்கு கிஞ்சித்தும் இடம் கொடுக்கக் கூடாது. தொழிலாளர்களை பேரழிவுக்குள் தள்ளவும் முதலாளித்துவ அமைப்புக்களுக்கு தொண்டு செய்யும் அடிமைகளாக கட்டிப் போடவுமே இந்த தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தலைகீழாக நிற்கின்றன.

தொழிலாளர்கள் நாகரீகமான வாழ்க்கை நடாத்த ரூபா.5000 குறைந்த பட்சச் சம்பளம், வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணின் அதிகரிப்புக்கு ஏற்ப சம்பள உயர்வு, தோட்டங்களில் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலை, ஆஸ்பத்திரி, சகல குடும்பத்துக்கும் வசதியான வீடு, அனைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கும் குடியுரிமை, வேலைத் துரிதப்படுத்தலுக்கு முற்றுப்புள்ளி, அனைத்து இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு என்பனவே தோட்டத் தொழிலாளர்களது அடிப்படை கோரிக்கைகளாக இன்று விளங்க வேண்டும்.இந்த உரிமைகளுக்கான போராட்டத்தை தொழிலாளர் ஆரம்பிக்க வேண்டும்.

தொழிலாளர்களது உரிமைகளை நசுக்கிக் கொண்டு பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஆசிகளோடு தோட்டக் கம்பனிகள் பாரிய இலாபத்தை சுருட்டிக் கொண்டுள்ளன. உதாரணமாக பொகவந்தலாவை தோட்டக் கம்பனி 1997/1998 ஆண்டுக்கான முதற் காலாண்டில் பெற்ற இலாபம் 46.5 வீதம் அல்லது 4கோடியே 49 இலட்சமாகும். அகலவத்தை தோட்டக் கம்பனி 1997ன் இரண்டாம் காலாண்டில் தனது இலாபத்தை 16.9 வீதமாக உயர்த்திக் கொண்டுள்ளது. இங்ஙனம் இலாபத்தை சுருட்டிக் கொள்ளும் முதலாளிகள், தொழிலாளர்களது எந்த உரிமைகளையும் வழங்காதவர்களாக மட்டுமன்றி சுரண்டலை மேன்மேலும் கூட்டிக் கொள்பவர்களாயும் உள்ளனர். ஏனைய இடங்களில் போன்று தோட்டத் துறையிலும் இலாபத்தை பெரும் அளவில் சுரண்டிக் கொள்ள தொழிலாளர்களது உரிமைகள் நசுக்கப்படுகின்றது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஏகாதிபத்திய கம்பனிகளின் சுரண்டலுக்கு வாய்ப்பான ஒரு சூழ்நிலையை உருவாக்கச சபதம் பூண்டுள்ள ஒரு அரசாங்கம் ஆகும். தொண்டமானை முன்னணியில் கொண்ட தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் யூ.என்.பி.அரசாங்கத்திலும் பொதுஜன முன்னணி அராசங்கத்திலும் நுழைந்து கொண்டு இந்தத் தாக்குதல்களை அமுல் செய்ய சபதம் பூண்டுள்ளனர்.

தோட்டத் துறையினையும் ஏனைய சகல முக்கிய கைத்தொழில்கள் , நிறுவனங்களையும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்கி பொருளாதாரத்தை மறுசீரமைப்பதன் மூலம் மட்டுமே தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்க முடியும். அவ்வாறே தொண்டமான், சந்திரசேகரன், நடேசன் போன்ற தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் தோளில் வைத்துக் கொண்டு பாதுகாக்கும் முதலாளித்துவ அரசாங்கங்களின் கீழ் அல்லாது ஒரு தொழிலாளர்கள்-விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்கு கொணர்வதன் மூலமே உரிமைகளைக் காக்க முடியும். அதற்கு இந்த வேலைத் திட்டத்தினை அமுலுக்கிட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களை மேலும் காட்டிக்கொடுக்கும் தொழிற் சங்கங்களுக்குப் பதிலாக தமது உரிமைகளுக்காகப் போராட வல்ல தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்களை அமைத்துக் கொண்டு இந்தப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும். இந்த நடவடிக்கைக் குழுக்கள், தொழிலாளர்கள் நேரடியாகத் தலையிட்டு அமைத்துக் கொள்ளும் பிரதிநிதிகளைக் கொண்டிருக்க வேண்டும். தோட்டங்களுக்கு அயலில் உள்ள ஏனைய தொழிலாளர் பிரதிநிதிகளையும் கிராமப்புற ஏழைகளின் பிரதிநிதிகளையும் இந்த நடவடிக்கைக் குழுக்கள் உள்ளடக்குவது அவசியம். தொழிலாளர் உரிமைக்கான போராட்டத்தை ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடனேயே முன்னெடுக்க முடியும்.

தொண்டமான் , சந்திரசேகரன், நடேசன் போன்ற துரோக தொழிற்சங்கத் தலைவர்களின் கடைகெட்ட காட்டிக் கொடுப்புக்களுக்கு எதிராக தொழிலாளர்களின் இந்தப் போராட்டத்தினை ஒழுங்கு செய்ய சோசலிச சமத்துவக் கட்சியும் அதனால் அமைக்கப்பட்டுள்ள பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் போராடுகின்றன.

***சலங்கந்த தோட்டம்***

# சோ.ச.க.அங்கத்தவருக்கு எதிராக ஆத்திரமூட்டல் நடவடிக்கை

சோசலிச சமத்துவக் கட்சியின் அட்டன் பிராந்திய அங்கத்தவரான தேவ்பதி சவரிமுத்து கடந்த ஆகஸ்ட் 5ம் திகதி அட்டன் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். சோசலிச சமத்துவக் கட்சி இந்தக் கைதுக்கு எதிராக தலையிட்டதைத் தொடர்ந்து அவர் அட்டன் துணை மஜிஸ்திரேட்டினால் ரூபா. 500 பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

சலங்கந்த தோட்ட அதிகாரி அட்டன் பொலிசாருக்கு செய்து கொண்ட முறைப்பாட்டின் பேரிலேயே சவரிமுத்து கைது செய்யப்பட்டார். அது அவருக்கு எதிரான ஒரு ஆத்திரமூட்டும் முறைப்பாடாகும். இந்தத் தோட்டத்திற்கு அருகேயுள்ள தேவாலயத்துக்கு செல்வதற்கு தொழிலாளர்கள் போட்டிருந்த நடைபாதை திடீரென மூடப்பட்டதோடு தொழிலாளர்களின் வசதிக்காக சவரிமுத்து இந்தத் தடையை அகற்றியுள்ளார். இதைச் சாட்டாகக் கொண்டு தோட்ட அதிகாரி அட்டன் பொலிசாருக்கு முறைப்பாடு செய்துள்ளார். ஆகஸ்ட் 2ம் திகதி சவரிமுத்துவை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்த பொலிசார் அவரை தோட்ட அதிகாரியைச் சந்திக்கும்படி கேட்டுள்ளனர்.

சவரிமுத்து தோட்ட அதிகாரியைச் சந்தித்த வேளையில் அவரை விடுதலைப் புலி எனக் கூறி ஆத்திரமூட்டும் விதத்தில் சீறிப் பாய்ந்து எச்சரித்துள்ளார்.

வீதியைத் தடைசெய்யும் தடையை மீண்டும் போடுவதற்கு சவரிமுத்துவுக்கு நேரிட்டபோதிலும் அதிகாரியின் நெருக்குவாரத்தின் பேரில் அவர் ஆகஸ்ட் 5ம் திகதி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். நீதிமன்ற விடுமுறை தினமாகையால் தோட்ட அதிகாரியும் பொலிசாரும் சவரிமுத்துவை சிறைக்குள் தள்ள திட்டமிட்டிருந்தனர். ஆனால் சோசலிச சமத்துவக் கட்சியின் தலைமை அலுவலகத்தினதும் பிராந்திய அங்கத்தவர்களதும் உடனடி தலையீடு காரணமாக அவரை மறுதினம் மஜிஸ்திரேட் முன்னிலையில் நிறுத்த நேரிட்டதோடு ரூபா. 500 பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

சவரிமுத்து பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பொலிசாரினால் 1994ல் கைது செய்யப்பட்டு இரண்டு வருடகாலம் புலி சந்தேக நபராக சிறைக்குள் தள்ளப்பட்டு இருந்தவர். சோசலிச சமத்துவக் கட்சியின் பிரச்சாரம் காரணமாக அவர் விடுதலை செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. தோட்ட நிர்வாகி தொடர்ந்தும் மேற்கொண்டுவரும் விடுதலைப் புலி ஆத்திரமூட்டும் பிரச்சாரத்தை சோ.ச.க.வன்மையாகக் கண்டனம் செய்கின்றது.

***காட்மோர் தோட்டம்:***

# வேலை நீக்கம் செய்து 5 ஆண்டுகள்

மஸ்கேலிய காட்மோர் தோட்டத்தின் தம்பதனை டிவிசனை சேர்ந்த எஸ் . மாரிமுத்து, சமயன், லோகம்மாள், சுந்தரி ஆகியோர் 1992 அக்டோபர் 7ம் திகதியில் இருந்து தோட்ட நிர்வாகத்தினால் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஐந்து வருடங்களை எட்டிக் கொண்டுள்ள போதிலும் வேலை வழங்க நிர்வாகம் தொடர்ந்து மறுத்து வருகின்றது.

மேலதிகமாக ஒரு வீட்டை இவர்கள் வைத்திருந்தார்கள் எனபதே இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டாகும்.தொழிலாளர்கள் இந்தக் குற்றச்சாட்டு பொய்யானது எனக் கூறுகையில் மாரிமுத்து குறிப்பிட்டதாவது: "உண்மையில நான்கு குடும்பத்துக்கு நான்கு வீடுகளே இருந்தன. அப்படி இருந்தும் ஒரு வீட்டை 2.10.1992ல் தோட்ட நிர்வாகத்திடம் பாரம் கொடுத்தோம். இருந்தும் அவர்கள் நால்வருக்கும் இன்னமும் வேலை வழங்கவில்லை.

"நாங்கள் இ.தொகா. அங்கத்தவர்களாக இருந்தோம். இச்சங்கத்தின் மஸ்கேலிய பிரதிநிதியான சிவலிங்கம் தோட்ட நிர்வாகத்துடன் சேர்ந்து கொண்டு எங்களைக் காட்டிக் கொடுத்துள்ளார். எங்களின் வேலை நீக்கத்திற்கு எதிராக தொழிற் கோட்டில் வழக்குத் தாக்கல் செய்வதை திட்டமிட்டு சிவலிங்கம் தாமதப்படுத்தினார். 6 மாதங்களின் பின்னர் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட ஒரு நிலையில் இந்த வழக்கு செல்லுபடியாகாது எனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமை காக்கும் போராட்டத்தினை பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் சோசலிச சமத்துவக் கட்சியும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என மாரிமுத்து வேண்டிக் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com

# மாற்று புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்புவது...

11ம் பக்கத் தொடர்ச்சி

செய்தோம். 1978 அரசியலமைப்பின் மூலம் உத்தரவாதம் செய்ததாகக் கூறப்படும் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கு எதிராக உயர்நீதிமன்றம் செயற்படமுடியும் என்ற நப்பாசை பரப்பப்பட்டுள்ளது. அத்தோடு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்வளைப் பார்வையிடுவதை அதிகாரிகள் தடுக்கும் நிலைமையில் முதலாளித்துவ சட்டக் கோவையில் குறிப்பிடப்படும் ஆட்கொணர்வு சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்பதும் மற்றொரு நப்பாசையாகும். இந்த இரண்டு நடவடிக்கைகளையும் சோசலிச சமத்துவக் கட்சி தனது சட்டத்தரணிகள் மூலம் உயர்நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொணர்ந்தது. ஆனால் கிடைத்த பலன் என்ன? எதுவும் கிடையாது என நாம் குறிப்பிடும் போது அதன் அர்த்தம் இராஜ்குமாரினதும் சோசலிச சமத்துவக் கட்சியினதும் ஜனநாயக உரிமைகள் தொடர்பாக உயர்நீதிமன்றம் எதுவும் செய்யவில்லை என்பதேயாகும். எனினும் உயர்நீதிமன்றம் செய்த ஒன்று இருந்தது. அதுதான் சட்டவிரோதமாக இராஜ்குமாரை கைது செய்து தடுத்து வைப்பதையும் சோசலிச சமத்துவக் கட்சிக்கு அவரைச் சந்திக்க இடமளியாதிருக்கவும் நீண்டுவந்த சட்ட காப்பீடுகளை அதிகாரிகளுக்கு வழங்கியதேயாகும். கைது செய்யப்பட்ட முதலாளிகள் தொடர்பாக சுடச்சுட தீர்ப்பு வழங்கி சலுகை வழங்கும் நீதிமன்றம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை வேறுபட்ட தராசினால் நிறுத்தே கணிக்கின்றது. அங்ஙனம் இல்லாத நீதிமன்றம் முதலாளித்துவ நீதிமன்றமாக விளங்குவது எப்படி?

## மக்கள் முன்னணி

இந்தச் சகல முதலாளித்துவ அரச அமைப்புக்கள் பற்றியும் தெளிவற்ற குழப்பமான விளக்கம் பரந்திருந்த போதிலும் அதன் நச்சுத்தனமான தன்மையை பொதுமக்கள் மீது சுமத்துவதற்கு உதவியாக உள்ள அரசியல் சூழ்ச்சி மக்கள் முன்னணி. முதலாளித்துவ நிர்வாகம் மக்களுக்கிடையே கசப்புக்கு உள்ளாகி ஆட்சி அதிகாரத்தில் இருந்து தள்ளப்பட்டுப் போகும் ஆபத்து தோன்றும் நிலைமையில் 1964ல் திணிக்கப்பட்ட கூட்டரசாங்கத்தில் சேர்ந்துகொண்ட சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகள் தொழிலலாளர் வர்க்க கட்சிகளாக கொண்டு, முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வேறுபட்டு அன்று பேசிக்கொள்ள முடிந்தாலும் இன்று அந்த வேறுபாடு மறைந்து போய் பல காலமாகிவிட்டது. இடதுசாரி எனக் கூறிக்கொண்ட எந்த ஒரு கட்சி தன்னிலும் இன்று தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்க முன்வருவதே கிடையாது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர்வதற்காக இந்தச் சகல கட்சிகளும், ஜே.வீ.பி. தொடக்கம் விடுதலைப் புலிகள் வரையிலான சகல கட்சிகளும் சகல தொழிற்சங்கங்களும் நடந்து கொண்ட விதம் இந்த விடயத்தை நிரூபித்துள்ளது. இனவாத யுத்தத்தினை நிறுத்தி தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக் உரிமைகளை காக்கவும், அவசரகாலச் சட்டத்தை நீக்கவும், விவசாயிகளுக்கு சலுகைகள் வழங்கவும், திறந்த பொருள்ாதாரத்துக்கு மனித உருவம் வழங்கவும் இளைஞர்களுக்கு மாதாந்தம் ரூபா. 1500 வறுமை நிவாரணம் வழங்கவும் ஒரு தொகை வாக்குறுதிகளை மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பொதுஜன முன்னணியுடன் சேர்ந்து கொண்டு பரப்பியோர் இந்த துரோகத் தலைவர்கள் கும்பலேயாகும். பொது ஜன முன்னணி அரசாங்கமும் அத்துடன் இணைந்து கொண்டுள்ள-பங்களிப்பு செய்கின்ற சகலரினதும் ஜனநாயகத்தின் தரம் இராஜ்குமார் சம்பவம் மூலம் நன்கு அம்பலமாகியுள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொணர்வதன் மூலம் ஜனநாயக உரிமைகளையும் மற்றும் வாழ்க்கை



அ.லி.சே.த. மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு வருகை தந்தவர்களில் ஒரு பகுதியினர்

உரிமைகளையும் காத்துக் கொள்ள முடியும் என்ற நப்பாசையை போலவே இடதுசாரி அமைப்புக்கள் எனக் கூறிக் கொள்பவற்றுக்கு நெருக்கு வாரம் கொடுப்பதன் மூலம் அவற்றை அந்த உரிமைகளின் பேரில் நின்றுவரத் தூண்ட முடியும் என்ற நப்பாசையும் பயங்கரமானது என்பதை சோசலிச சமத்துவக் கட்சி இராஜ்குமார் பேரில் மேற்கொண்ட பிரச்சாரத்தின் மூலம் தெளிவாகியது.

இதற்கு நல்ல உதாரணமாக நவசமசமாஜக் கட்சியின் செயற்பாடு அமைந்தது. இராஜ்குமார் புனர்வாழ்வு முகாமில் வைக்கப்பட்டிருந்த சமயத்தில் நவசமசமாஜக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான சரணபால பலிஹேனவும் மேலும் ஒரு தொழிற்சங்க உறுப்பினரும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர். இதுவும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினாலும் முதலாளித்துவ அரசினாலும் ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக தொடுக்கப்பட்ட ஒரு தாக்குதல் என சோசலிச சமத்துவக் கட்சி கருதியது. அதனால் ஒரு கடிதத்தின் மூலம் நவசமசமாஜக் கட்சி செயலாளருக்கு அக்கட்சியின் அங்கத்தவர்களையும் எமது கட்சியின் இராஜ்குமாரையும் விடுதலை செய்ய ஒரு கூட்டு பிரச்சாரத்துக்கு எமது தயார்நிலையை அறிவித்தோம். அதற்கு ந.ச.த.க.வின் பதில் என்ன தெரியுமா? சந்திரிகா குமாரதுங்க நிறுவிய சிறீலங்கா மக்கள் கட்சியை முதலாளித்துவக் கட்சி என்றும் ஜே.வீ.பி.யை பாசிசக் கட்சியெனவும் சோசலிச சமத்துவக் கட்சி கூறுவதால் அத்தகைய கூட்டு பிரச்சாரத்தில் சேர்ந்து கொள்ள தம்மால் முடியாது என்பதேயாகும். இங்கு அம்பலத்துக்கு வந்தது ந.ச.ச.க.வின் முதலாளித்துவ கைக்கூலி தன்மையும் பாசிஸ்டுகளுக்கு வக்காலத்து வாங்குவதும் மட்டும் அல்ல. தமது அமைப்பின் அங்கத்தவர்களின் ஜனநாயக உரிமையின் பேரில் எந்த ஒரு சலோகத்தையும் அவர்கள் எழுப்புவது கிடையாது. இது எமது அங்கத்தவரின் பேரில் எமது கட்சியும் எமது அனைத்துலக இயக்கமும் கடைப்பிடித்து வந்த விதிமுறைகளில் இருந்து எவ்வளவு தூரம் வேறுபட்டது. அது ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடையேயான ஆதாளபாதாளம்.

இந்தச் சகல படிப்பினைகளின் மூலமும் சரியான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பொதுமக்களின் உரிமைகளின் பேரில் ஈடாட்டமின்றியும் அஞ்சாதும் போராடும் மாற்று புரட்சிக் கட்சியை கட்டியெழுப்பும் தீர்க்கமான அவசியம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

இந்த படிப்பினைகளை பொதுமக்களின் எதிரில் வைக்கும் போது நாம் 1917 அக்டோபர் புரட்சியில் லெனினுடன் இணைத் தலைவராக விளங்கிய லியொன் ட்ரொட்ஸ்கியுடன் ஒன்றாக நின்றுகொண்டுள்ளோம். ஒரு புரட்சிக் கட்சி எந்த ஒரு அரசியல் பிரச்சாரத்தையும் தொடுக்கும் போது அதற்கு எந்த அடிப்படையில் நின்றுகொள்ள வேண்டும் என்பதை ட்ரொட்ஸ்கி பின்வருமாறு விளக்குகின்றார்: நான் இதை அவர் எழுதிய "மார்க்சிசத்தைக் காப்பதற்காக" என்ற நூலில் இருந்து மேற்கோளாகக் காட்டுகின்றேன்: "சகல அரசியல் பிரச்சாரங்களிலும் எமது முக்கிய கவனம் திரும்புவது, அதன் மூலம் தொழிலாளர் முகம் கொடுக்கும் திட்டவட்டமான பிரச்சினையில் இருந்து பொது நிலைமையை நோக்கி அவர்களை இட்டுச் செல்லவும் நவீன சமுதாயத்தின் தன்மையையும் அதன் அடிப்படை சக்திகளின் தன்மையைப் பற்றியும் அவர்களுக்கு கல்வியூட்டுவது சம்பந்தமாகவுமே"

இந்த அளவுகோலால் அளவிடும் போது தொழிலாளர் வர்க்கமும் ஏழை மக்களும் இளைஞர்களும் மிகவும் பரந்த பயனுள்ள சமூக கல்வியைப் பெறுவதற்கு அவசியமான படிப்பினைகளை இராஜ்குமார் பிரச்சாரத்தின் மூலம் புரிந்து கொள்வதில் எமது கட்சி வெற்றியீட்டியுள்ளது.

இலாபப் பொதியை கட்டிக் கொள்வதற்காக தொழிலாளர்களைச் சுரண்டி பொதுமக்களை பேரழிவுக்குள் தள்ளி தொழிற்பட்டுவரும் முதலாளித்துவ முறையின் கீழ் ஒடுக்குமுறையும் வன்முறையும் அரசின் ஏகபோகமாகும். முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி உக்கிரம் அடையும் போது தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் கிளர்ச்சியில் இறங்கும் போது இந்த வன்முறை, காட்டுமிராண்டித் தன்மை அம்பலமாகின்றது. இனவாத யுத்தமாக-இளைஞர் படுகொலைகளாக இந்நாட்டினுள் ஏற்கனவே வெளிப்பாடாகி உள்ளது இந்தக் கொடிய நிலைமையே.

இந்த நிலைமையின் கீழ் பொதுமக்களின் பாதுகாப்பை இந்த வன்முறை அரச இயந்திரத்திடம் ஒப்படைத்துவிட்டு இருக்க முடியுமா? அதற்கு முரணாக பொதுமக்கள் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ள-முதலாளித்துவ அரச இயந்திரத்தில் இருந்து சுயாதீனமான முறையில் ஒழுங்கு செய்வது அவசியம் அல்லவா?

சமீபத்தில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பொலிசாரினால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட பியகமையிலும் இரணவிலவிலும் அம்பாறையிலும் நுரைச்சோலையிலும் துப்பாக்கி சூடு விழுந்த ஆட்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் உதவி வழங்க பொதுமக்கள் முன்வந்ததன் மூலம் தமது பாதுகாப்பை தமது கைகளாலேயே ஏற்படுத்திக் கொள்ள அவர்களுக்கு இருந்து வரும் இயற்கையான அவசியத்தையும் தயாரிநிலையையும் காட்டியது. மத்திய வங்கி குண்டு வெடிப்புச் சமயத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்வந்து அந்தக் கடைகெட்ட பேரழிவுகளுக்கு உள்ளானவர்களுக்கு உதவிய விதத்தை நாம் புதினப் பத்திரிகைகள் மூலம் திரட்டியதோடு எமது பத்திரிகைகளில் பிரசுரிதத தகவலிகள் மூலம் அம்பலப்படுத்தினோம். அன்று பொலிசாரும் இராணுவமும் சீருடை அணிந்தோரும் அவலங்களுக்கு உள்ளாகியவர்களின் உடமைகளைக் கொள்ளையடிக்கையில் பொதுமக்கள் இந்த விதத்தில் செயற்பட்டனர்.

இது புரட்சிக் கட்சி முன்நின்று தொழிலாளர், ஏழைகள, இளைஞர்களை நனவுபெறச் செய்து, அணிதிரட்டுவதற்கான புதிய வாய்ப்புக்களுக்கு கதவுகள் திறந்துள்ளதை காட்டிக் கொண்டுள்ளது. சோசலிச சமத்துவக் கட்சி வேலைத் தலங்களிலும் பிராந்திய ரீதியிலும் நடவடிக்கை குழுக்களை அமைக்கவும் அவற்றின் கீழ் பாதுகாப்பு படை அணிகளை நிறுவவும் எடுத்துள்ள நடவடிக்கை இந்த விடயத்தில மிகவும் தீர்க்கமானது. இளந் தலைமுறையினரையும் ஏழை மக்களையும் இனவாத யுத்தத்தின் கொலைகார படையாட்கள் ஆக்கவும் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான பாசிச குண்டர் படைகளாக அணிதிரட்டவும் பிற்போக்காளர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளை முதலாளித்துவக் கட்சிகளுக்கு எதிராக இந்த ஒடுக்கப்படும் மக்களை தொழிலாளர் வர்க்கத்தைச் சூழ சுயாதீனமான முறையில் அணிதிரட்டப் போராடுவதன் மூலமே தோற்கடிக்க முடியும். இராஜ்குமாரை விடுதலை செய்யும் பிரச்சார இயக்கத்தில் நாம் பெற்ற சகல அரசியல் படிப்பினைகள்ளயும் இந்தப் போராட்டத்தில் நனவான முறையில் கையாள வேண்டும். அதன் மூலம் விழிப்படையும் மக்கள் பகுதியினர் தமது ஜனநாயக, வாழ்க்கை உரிமைகளைக் காக்கும் பொருட்டு முதலாளித்துவ அமைப்புக்கு எதிராக நடாத்தும் போராட்டத்தில் பலம் வாய்ந்த படையணிகளாக விளங்குவது நிச்சயம்.

இந்த விடயம் சம்பந்தமாக, தோழர்.இராஜ்குமார் தமது பேச்சில் குறிப்பிட்ட மற்றுமோர் விடயத்துக்கு உங்களின் கவனத்தை திருப்ப விரும்புகின்றேன். அரலகங்வில பொலிசார் தம்மை சிறையில் போட்டு வைத்திருந்த மாதங்களில் தமது கிராமமான உடப்புவில் இருந்து தம்மைப் பார்க்க எவரும் வருகை தராத போதிலும் விடுதலையாகி வந்த நாளில் தம்மை வரவேற்க 200க்கும் அதிகமான மக்கள் ஒன்றுதிரண்டு இருந்ததன் அரசியல் முக்கியத்துவத்தை இராஜ்குமார் நினைவுபடுத்தினார். ஆரம்பத்தில் தம்மைப் பார்வையிட வருவது அரசியல் ஒடுக்குமுறை நிலைமையின் கீழ் ஆபத்தானது என கிராம வாசிகள் நினைத்தாலும் சோசலிச சமத்துவக் கட்சியினால் சிருஷ்டிக்கப்பட்ட மாற்றத்தை அவர்களிடையே தாம் அன்று கண்டதாக அவர் குறிப்பிட்டார். இது மிகவும் தீர்க்கமான ஒரு அரசியல் முன்னோக்கு சம்பந்தப்பட்ட விடயமாகும். ஆளும் வர்க்க ஆளுமைக்கு கட்டுப்பட்டு வாழப் பழக்கப்பட்டுள்ள மக்கள் தமது கீழ்ப்படிவின் விலங்குகளை உடைத்துக்கொண்டு அரசியல் அரங்கில் காலடி வைக்க முன்வருவது புரட்சிக் கட்சியின் தலைமையிலும் வழிநடாத்தலின் கீழுமாகும். இது உடப்புவில் மட்டும் அல்ல முழு நாட்டுக்கும் முழு உலகுக்கும் பொதுவான உண்மையாகும் என்பதை புரட்சிக் கட்சியின் காரியாளர் புரிந்து கொள்ள வேண்டும்.

தோழர். இராஜ்குமார் இந்தக் கூட்டத்தில் வெளியிட்ட கருத்துக்கள் முக்கியமானவை மட்டும் அல்ல. அவரை சோசலிச சமத்துவக் கட்சியின் இந்தக் கூட்டத் தொடர்களில் பேச்சாளராக நிறுத்துவதன் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது. அவர் கூறினார்: எமது கட்சியினதும் அனைத்துலகக் குழுவினதும் பிரச்சாரம் காரணமாக நான் விடுதலையானது உண்மையே. ஆனால் பொதுமக்களின் உரிமைகளைக் காக்கும் போராட்டம் இன்னும் நீண்ட தூரம் போக வேண்டிய ஒரு பயணமாக உள்ளது." அவர் அங்ஙனம் குறிப்பிட்டது கட்சியுடன் அந்தப் பயணத்தில் இணைந்து கொள்ளும் தமது தயார் நிலையைக் காட்டிக் கொண்டே என்பது உண்மையில் மகிழ்ச்சிக்குரியதாகும்.

முதலாளித்துவ அரசாங்கத்தின் எதிர்ப்பாளர்களாக கைது செய்யப்படும் இளைஞர்கள்-சிறப்பாக இன்று தமிழ் இளைஞர்கள் உயிர்பிழைத்து விடுதலையாவது மிகவும் அருமையாகும். விசாரணைகளுக்கென பொலிஸ்

16ம் பக்கத் தொடர்ச்சி

படிப்பகம்

www.padippakam.com

# ந.ச.ச.க. பிற்போக்கு நாடகத்தின் புதிய கட்டம்

நவசமசமாஜக் கட்சியினர் சிங்கள-தமிழ் முதலாளிகளுடன் கரங்கோர்த்து ஆடும் பிற்போக்கு நாடகத்தின் புதியதோர் கட்டம் பற்றி சமீபத்தில் அறியக் கிடைத்துள்ளது.இவர்கள் அத்திபூத்தாற் போல் வெளியிட்டுவரும் "புதிய சமதர்மம்" என்ற பத்திரிகை அலுவலகத் திறப்பு விழாவிற்கு அழைக்கப்பட்டவர்களுள் முதலாளித்துவ அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தலைவர் வழக்கறிஞர் குமார் பொன்னம்பலமும் ஒருவர். இவர் "நவசமசமாஜக் கட்சி தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றது "என்ற பதக்கத்தை அதற்குச் சூடியுள்ளார்.

கலாநிதி.விக்கிரமபாகு கருணாரத்னவை பொதுச் செயலாளராகக் கொண்ட ந.ச.ச.க.வானது பிற்போக்கு அரசியல் நடவடிக்கைகளை நன்கு எடை போடும் அமைப்பாகும். இக்கட்சி ஒடுக்கப்படும் தமிழ் மக்களது உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ், விடுதலைப் புலிகள், ஈ.பீ.ஆர்.எல்.எப், புளொட் போன்ற தமிழ் முதலாளித்துவ கட்சிகளுக்கு இடதுபுறம் தோள் கொடுக்கின்றது. சிங்கள ஒடுக்கப்படும் மக்களை காக்கப் போராடுவதாகக் கூறிக்கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி, யூ.என்.பி, எம்.ஈ.பி. ஜே.வீ.பி. போன்ற சிங்கள முதலாளித்துவ கட்சிகளுக்கு வலது புறம் தோள் கொடுக்கின்றது. கடந்த ஜூலை நடுப்பகுதியில் இவர்கள் 1980 வேலைநிறுத்தக்காரர்களின் உரிமை காப்பதாகப் பிரச்சாரம் செய்து வேலைநிறுத்தக்காரரைத் துவம்சம் செய்த யூ.என்.பி.பிரேமதாச கன்னை, வேலைநிறுத்தத்தில் வெளிவெளியாக கருங்காலி பாத்திரத்தில் ஈடுபட்ட ஜே.வீ.பி., இனவாத எம்.ஈ.பி. கட்சிகளுடன் கோட்டை புகையிரத நிலைய முன்றலில் ஆயிரக்கணக்கானோர் தரிசிக்கும் வகையில் வெட்கமின்றி ஆடையுடுத்தி "மறியல்" போராட்டம் செய்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இந்தச் சகல ஏகாதிபத்தியச் சார்பு, முதலாளித்துவக் கட்சிகளும் தமிழ் , சிங்கள தேசிய இனங்களின் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக அவர்களை நசுக்கித் தள்ளும் இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள கட்சிகளாகும். இதை நாம் புதிதாக கூற வேண்டியதில்லை. இந்த ந.ச.ச.க.வும் தீவிரவாதக் கோஷங்களை எழுப்பிய படி முதலாளித்துவக் கட்சிகளில் ஒன்றைப் போல அவற்றுடன் கூட்டு அமைத்துக் கொண்டுள்ளது. நவசமசமாஜக் கட்சி புதிதாகப் பொறுப்பு ஏற்றுள்ள கொந்தராத்து என்ன? தமிழ்-சிங்கள மக்களிடையே நாற்றம் கண்ட பொதுமக்களின் எதிர்ப்புக்கு உள்ளான கட்சியை பெரிதாகக் காட்டித் தூக்கிப் பிடிப்பதேயாகும்.

நவசமசமாஜக் கட்சியின் பிற்போக்கு குத்துக்கரணம் சந்தியில் நிறுத்தப்படும் மற்றொரு கட்டமும் இருந்து கொண்டுள்ளது. அது எது தெரியுமா? ஒரு புறத்தில் பிரிவினைவாத விடுதலைப் புலிகள் அமைப்பின் அதிதீவிரவாதிகளை பூதாகாரப்படுத்திக் காட்டுகின்றனர். மறுபுறத்தில் சிங்கள இனவாத பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள ஜே.வீ.பி., எம்.ஈ.பி.கட்சிகளுடன் கூட்டு நடாத்துகின்றனர். இந்நாட்களில் ந.ச.ச.க.தலைவர் விக்கிரமபாகு கருணாரத்னவின் நடவடிக்கை பாசிச அமைப்பாக நாற்றம் கண்டுள்ள ஜே.வீ.பி.யுடன் எந்த ஒரு தீர்வும் கிடைக்காத கூட்டுக்களுக்குள் நுழைவதாக விளங்குகின்றது.

தமது கட்சியின் தலைவர்கள் ஆயுதங்களை மறைத்து வைத்திருந்ததாக அரசாங்கத்தினாலும் முதலாளித்துவ அரசினாலும் வேட்டைக்கு உள்ளாகி இருந்த சமயத்தில் அதைப் பற்றி வாயும் திறக்காதிருந்த ஒரு கட்சி எந்த ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் கட்டிக்காக்கப் போகிறது ? இருந்தும் அப்படிக் கூறி கலாநிதி.கருணாரத்னவின் முதுகைத் தட்டிக்கொடுக்க வழக்கறிஞர் குமார் பொன்னம்பலம் போன்றோரால் மட்டுமே முடியும்.

# நவசமசமாஜ கட்சியினர் யூ.என்.பி.,ஜே.வீ.பி.யுடன் சேர்ந்து மறியல்

1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் கருங்காலி வேலையில் ஈடுபட்ட பாசிச ஜே.வீ.பி.யுடனும் வேலைநிறுத்தத்தை நசுக்கிய யூ.என்.பி. பிரேமதாச கன்னையைச் சேர்ந்த சிரம சக்தி அமைப்புடனும் இனவாத எம்.ஈ.பி.யுடனும் சேர்ந்து மறியலும் கூட்டமும் நடாத்துவதில் நவசமசமாஜக் கட்சியினர் ஈடுபட்டனர். இந்த மறியலும் கூட்டமும் கடந்த ஜூலை 17ம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் எதிரிலும் டீமெல் பார்க்கிலும் நடைபெற்றன.

இது 1980 ஜூலை வேலை நிறுத்தத்துக்கு மட்டும் அல்ல முழுத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் எதிராக தொழிற் சங்கத் தலைவர்களும் நவசமசமாஜக் கட்சியினரும் ஈடுபட்டுள்ளதைக் காட்டுகின்றது.

ஜூலை 17ம் திகதி மாலை 2மணிக்கு ஆரம்பமான மறியல் பிரச்சாரத்தில் நவசமசமாஜக் கட்சியினர் தமது தொழிற்சங்கக் கொடியின் கீழ் ஈடுபட்டனர். அத்தோடு முன்னர் ந.ச.ச.க.வில் இருந்து பிரிந்த மார்க்சிஸ்ட் தொழிலாளர் போக்கு என்ற சிரிதுங்க ஜயசூரியவின் தலைமையிலான அரசியல் குழு இதில் கலந்து கொண்ட போதிலும் அது தன்னை வெளிப்படையாக இனங்காட்டிக் கொள்ளவில்லை. அவர்களுடன் நிரையில் நின்று கொண்ட இத்துரோகிகள் சிரம சக்தி அமைப்புடன் அரசாங்கத்திடம் குறையிரங்க ஆரம்பித்தனர்.

மறியல் பிரச்சாரம் ஆரம்பமாகி அரை மணித்தியாலயத்தின் பின்னர் புகையிரத சேவை பொது ஊழியர் சங்கம் என்ற பதாகையுடன் வந்த கோஷ்டிகள் ஜே.வீ.பி.யுடன் பிரச்சாரத்தில் இணைந்து நின்று கொண்டிருந்தனர். இதற்கிடையே யூ.என்.பி.கும்பலுடன் ஒன்றாக மறியல் செய்ய முடியாது என்ற நடிப்பில் ஜே.வீ.பி.காரர்கள் மறியலில் இருந்து விலகிக் கொண்டு விட்டனர். இதற்கு காரணம் 'சிரம சக்தி' குழு மறியலில் கலந்து கொண்டதே. எனினும் இதற்கு முன்னர் இடம்பெற்ற இரண்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஜே.வீ.பி. அவர்களுடன் கலந்துகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

மறியல் முடிந்து கூட்டம் இடம்பெறும் டீமெல் பாக்கிற்கு ஊர்வலத்தில் செல்ல ஆயத்தமாகி வந்த வேளையில் பொதுஜன முன்னணி அரசாங்கம் 100 பொலிசாரைக் கொண்டு அதைத் தடை செய்தது. இதன் மூலம் அரசாங்கம் பிரச்சாரங்களை ஒடுக்கித தள்ள மட்டுமல்ல மற்றும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை ஒடுக்கித் தள்ளும் ஆட்சியாளர்களின் தயாரிப்பையும் ஒப்புக் கொண்டனர்.

# மாற்று புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்புவது...

15ம் பக்கத் தொடர்ச்சி

நிலையங்களிலும் இராணுவ முகாம்களிலும் சிறைவைக்கப்பட்ட எத்தனை பேரின் சடலங்கள் ஆறுகளிலும் ஓடைகளிலும் கண்டெடுக்கப்பட்டன? சில தருணங்களில் விடுதலை பெற்ற பலர் அந்த அதிர்ஷ்டத்தை பெருந்தொகையான இலஞ்சம் அல்லது "கப்பம்" செலுத்தியே பெறுகின்றனர். இத்தகைய கப்பம் பணம் வாங்கிக் கொண்டு திடீர் பணக்காரர் ஆன பொலிஸ், இராணுவ அதிகாரிகள் பற்றி பலர் கேள்விப்பட்டுள்ளனர். முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் உயர் பீடங்களில் இருந்து கிடைக்கும் விசேட கவனம் காரணமாக விடுதலை பெறும் சிலரும் இல்லாமல் இல்லை.ஆனால் இங்ஙனம் விடுதலை பெறுவோர் திரும்பி வருவது முதுகெலும்பு ஒடிந்தவர்களாகவேயாகும். தாம் முகம் கொடுக்க நேரிட்ட தலைவிதியின் அநீதியையும் அட்டூழியங்களையும் பற்றி வாய்திறந்து பேசுவதை அவர்கள் தம்மாலேயே போடப்பட்ட தணிக்கைக்கு அல்லது அதிகாரிகள் விதித்த நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிந்து கைகழுவி விட்டுவிடுகின்றனர்.

தோழர்.இராஜ்குமார் அதற்கு மாறுபட்ட ஒரு நிலைமையைக் காட்டிக் கொண்டுள்ளார். ஒருவரின் திடமான சிறப்பு ஒழுக்கங்கள் இத்தகைய நிலைமையில் செல்வாக்கு செலுத்தியிருந்தாலும் அதற்கான முக்கிய காரணம் முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு எதிரான சமரசமற்ற அரசியல் போராட்டத்தின் மூலம் இராஜ்குமார் விடுதலை செய்விக்கப்பட்டமையேயாகும். இது ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்கும் புரட்சிக் கட்சிக்கும் ஏனைய சகல அமைப்புக்கள், தனிநபர்களுக்கும் இடையே உள்ள முக்கியமான வேறுபாட்டின் பெறுபேறாகும். இராஜ்குமாரை விடுதலை செய்வதற்கான போராட்டத்தில் சோசலிச சமத்துவக் கட்சி இறங்கிய நனவான கொள்கைப் பிடிப்பான நிலைப்பாடு காரணமாக இராஜ்குமாரும் அவ்வாறே கட்சியும் புதிய பலம் பெற்றுள்ளது.

இதைப் பற்றியும் ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டவற்றை மார்க்சிசம் காக்க என்ற நூலில் இருந்து மீண்டும் மேற்கோளாகக் காட்ட நான் விரும்புகின்றேன். ட்ரொட்ஸ்கி உறுதியாகக் குறிப்பிட்டதாவது : "தொழிலாளர் வர்க்ககத்தின் பணி, சமூகப் புரட்சியை தயார் செய்வதும் புதிய சட , ஒழுக்கவியல் அடிப்படையில் மனித இனத்திற்கு புனர்வாழ்வு வழங்குவதுமேயாகும். முதலாளித்துவ பொதுஜன அபிப்பிராயத்தினதும் பொலிஸ் அடக்குமுறையினதும் நெருக்குவாரத்தின் எதிரில் அடிபணியாதிருக்க வேண்டுமானால் தொழிலாளர் புரட்சியாளர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக அதன் தலைவர்களுக்கு தெளிவான தூரதிருஷ்டி-முழுமையாக ஆராய்ந்து பாரார்த்து தயாரிக்கப்பட்ட உலக நோக்கும் அவசியம். திட்டவட்டமான பிரச்சினையை மார்க்சிச விதிமுறையின் அடிப்படையில் மட்டுமே சரியான விதத்தில் அணுக முடியும்." சோசலிச சமத்துவக் கட்சி தனது நடவடிக்கைகளை இந்த ஆலோசனைகளின் அடிப்படையில் நின்றே தொழிற்படுகின்றது.

## அனைத்துலக நோக்கு

புரட்சிக் கட்சியின் இந்த நோக்கினை விளக்குவதற்கு முக்கியமான இரண்டு விடயங்களை இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றது. இன்றைய உலகப் பொருளாதார, சமூக, அரசியல் நிலைமைகளின் கீழ் நாம் முதலில் தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத பார்வையின் முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டும். தேசியவாதம் மட்டுமன்றி இனவாதம், மதவாதங்களும் சிறப்பாக இந்தியத் துணைக் கண்டப் பிராந்தியத்தில் இப்போது தலைதூக்கியுள்ள சாதிவாதமும் தொழிலாளர் வர்க்கத்தினைப் பிளவுபடுத்தி ஒடுக்கித் தள்ளப் பயன்படுத்தப்படும் ஒரு நிலைமையில இதை எவ்வளவுதான் வலியுறுத்தினாலும் தகும்.

முதலாளித்துவ உற்பத்தி பூகோள ரீதியான ஒரு முறையாக மாற்றம் கண்டதோடு பல்வேறு நாடுகளிலும் வாழும் பல்வேறு மொழிகளைப் பேசும் , பல்வேறு கலாச்சாரங்களைக் கொண்ட தொழிலாளர் வர்க்கப் பகுதியினரிடையே புறநிலை ரீதியில் முன்னொரு போதும் இல்லாத அளவிலான பொதுப் பிணைப்பு ஏற்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியிலான முதலாளித்துவ பொருளாதாரம் வீழ்ச்சி காணும் ஒரு நிலைமையில் அவரவர் முகம் கொடுக்கும் வாழ்க்கை, அரசியல் நிலைமைகளைப் போலவே தமது உரிமைகளைக் காக்க ஈடுபடும் போராட்டங்களிலும் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைப் பொறுத்த மட்டிலும் இது பொதுவானதாக விளங்குகின்றது என முன்னரைக் காட்டிலும் நன்கு ஊர்ஜிதம் ஆகியுள்ளது. பிற்போக்காளர்களின் முயற்சிகளுக்கு எதிராக உறுதியான கோட்பாட்டு. அரசியல் போராட்டங்களின் மூலம் இந்தப் புறநிலை உலக ஐக்கியத்தை நனவான அனைத்துலக நடைமுறையாக தொழிலாளர் வர்க்கத்தினுள் நிலைநாட்டல் வேண்டும்.

இந்தப் பாத்திரத்தினை பற்றிய ஒரு விளக்கத்துக்கு வருவதோடு -அதை நிறைவேற்றுவதற்காக கடைப்பிடிக்க வேண்டிய அமைப்பு ரீதியான நடவடிக்கை என்ன என்ற பிரச்சினை தோன்றுகின்றது. இதற்கான பதில் : தொழிலாளர் வர்க்கத்தின் உலகக் கட்சியை கட்டியெழுப்புவதேயாகும். முதலாளித்துவ பரிந்துரையாளர்களின் என்னதான் சாபங்கள் இருந்தாலும் தொழிலாளர் வர்க்கம் சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் இது எதுவிதத்திலும் அன்னியமானதும் காலவதியானதுமான விடயம் அல்ல; தொழிலாளர்களின் அன்றன்றாடைய போராட்டங்களுடன் இணைந்ததும் சம்பந்தப் பட்டதுமான அவசியமாகும்.

சோசலிச சமத்துவக் கட்சி அதனது வேலைகளை முதலும் முக்கியமுமாக அடிப்படையாகக் கொள்வது இந்த அனைத்துலக அவசியத்தின் மீதேயாகும். தேசிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள சோசலிச சமத்துவக் கட்சி ஒரு உலகக் கட்சியின் பகுதியாகும். உலகப் பொருளாதாரமும் உலக அரசியல் ஐக்கியமும் உலக ரீதியான வர்க்கப் போராட்டமும் வெடித்துக்கிளம்பும் ஒரு நிலைமையின் மத்தியில் தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் அவசியமான உலக முன்னோக்கையும் சோசலிச வேலைத்திட்டத்தையும் உலகக் கட்சியின் அங்கத்தவர்கள் என்ற முறையில் அந்தப் பணியில் ஈடுபட்டிருப்பதன் மூலமே வரைந்து கொள்ள முடியும். இந்தியத் துணைக்கண்ட சோசலிசக் குடியரசின் ஒரு பாகமாக சிறீலங்கா- ஈழம் சோசலிச குடியரசுக்காகப் போராடும் சோசலிச சமத்துவக் கட்சியின் வேலைத்திட்டம் அந்த உலக முன்நோக்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

தோழர்.இராஜ்குமாரை விடுதலை செய்வித்தது போலவே முழுத் தமிழ் மக்களதும் ஜனநாயக உரிமகளையும் காக்க

படிப்பகம்

www.padippakam.com

# அவுஸ்திரேலிய சோ.ச.க.அங்கத்தவருக்கு மாணவர், தொழிலாளர் ஆதரவு



அவுஸ்திரேலிய சோ.ச.க. அங்கத்தவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தின் அருகில் மறியல் செய்யும் தொழிலாளர், மாணவர்கள்

1996ல் மெல்போர்ண் நகரில் இடம்பெற்ற மாணவர் ஆர்ப்பாட்டத்தின் போது பொலிசாரால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்ட ஒரு மாணவிக்கு உதவச் சென்றமைக்காக அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவரான அண்ட்ரூ சினமாவை கைது செய்து அவர் மீது கைது செய்தமை, தடுத்தமை, எதிர்த்தாக்குதல், பொலிசாரைத் தாக்கியமை என்ற குற்றத்தின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அண்ட்ரூ சினமா மீதான இந்த வழக்கு ஆகஸ்ட் 6ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மெல்பேர்ண் மஜிஸ்திரேட் அத்திகதியில் இந்த வழக்கை விசாரணை செய்யாமல் டிசம்பர் 2ம் திகதிக்கு ஒத்திவைக்கும் பொலிசாரின் விண்ணப்பத்துக்கு அனுமதி வழங்கினார். ஒரு பொலிஸ் சாட்சி வெளிநாடு சென்றுள்ளதால் இந்த வழக்கை ஒத்திப்போட வேண்டும் என பொலிஸார் கேட்டனர். எனினும் கடந்த ஏப்பிரல் 23ம் திகதியில் இருந்து சோ.ச.க.அங்கத்தவருக்கு எதிரான இந்த வழக்கு ஆகஸ்ட் 6ம் திகதிக்கு விசாரணைக்கு வர உள்ளது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

சினமாவின் வழக்கறிஞரான டேவிட் பிரேஸ் கியூ.சி.இந்த ஒத்திவைப்புக்கு எதிராக வாதிட்டார். இந்த வழக்கு விசாரணையில் கலந்து கொள்வதற்காக எதிரிதரப்பு சாட்சிகள் படிப்பு, தொழில்களுக்கு செல்லாது விடுமுறையில் வந்துள்ளதால் இந்த ஒத்திவைப்பு பெரும் சிரமமானதாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

எனினும் மஜிஸ்திரேட் டேவிட் மக்லெனன் பொலிசாருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கினார். "முழுச் சமுதாயத்தின் நன்மைக்கு" ஆகவே இங்ஙனம் செய்யப்பட்டுள்ளதாக மஜிஸ்திரேட் கூறிக்கொண்டார். அவரின் வார்த்தைப் பிரயோகங்கள் எதிரி தரப்பு வழக்கு, பொலிசாரின் பாத்திரத்திற்கு ஒரு சவாலாக உள்ளதை அங்கீகரிப்பதைப் பிரதிநிதித்துவம் செய்தது.

நீதிமன்றத்துக்கு வெளியே சோசலிச சமத்துவக் கட்சியினாலும் அண்ட்ரூ சினமாவைக் காப்பதற்கான குழுவினராலும் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மாணவர்கள்,தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். பல உயர்நிலைப் பாடசாலைகள், மெல்பேர்ண், லாட்ரொப், சுவின்பேர்ண், ஆர்.எம்.ரீ.ரீ. பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மாணவர்களும் ட்ராம் தொழிலாளர்கள், தொழில் இல்லாத இளைஞர்கள், குடும்பப் பெண்கள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

நீதிமன்றப் படிகளில் பேசிய சோ.ச.க. மத்திய குழு உறுப்பினர் தோழி.சூ பிலிப்ஸ் சோடிப்பு வழக்கினை அம்பலப்படுத்தியதோடு பாதுகாப்பு பிரச்சாரத்தின் அடிப்படையையும் விளக்கினார்.

சூ பிலிப்ஸ் கூறியதாவது : "எமது அணுகுமுறைகள் மிகவும் தெளிவானவை- நாம் இளம் பாடசாலை மாணவர்கள், வேலை இல்லாக் கந்தோருக்கு வரும் வேலையற்றவர்கள், டிப்போக்களில் உள்ள ட்ராம் தொழிலாளர் பக்கம் திரும்பியுள்ளோம். நாம் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் பக்கமோ அல்லது தொழிற்கட்சி அல்லது சமூக ஜனநாயகம் பக்கமோ திரும்பவில்லை. இவர்கள் கல்வி, மற்றும் சமூக வசதிகள், ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதலில் ஒன்று பட்டு நிற்கின்றனர்.

ஒரு சக்தியான செல்வாக்கு இருந்து கொண்டுள்ளது. தொழிலாளர் பக்கம் பூராவும் ஒரு பொது உணர்வு வளர்சசி கண்டு வருகின்றது. பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் , சமூகப் பாதுகாப்பு மீதான தாக்குதல்களை அதிகரித்த அளவிலானோர் எதிர்க்கின்றனர். அவர்கள் பொலிசாரினது பயமுறுத்தல்களாலும் வன்முறைகளாலும் சலிப்படைந்து போயுள்ளனர். சிலர் ஒரு கொள்கைப்பிடிப்பான நிலைப்பாட்டை எடுத்துள்ளதை உணர்கின்றனர்."என்றார்.

# சீனத் தொழிலாளர் பக்டரி மூடுவிழாவுக்கு எதிர்ப்பு

சீன தென்மேற்கு நகரமான மியாங்யாங்கில் இடம்பெற்ற 1 இலட்சம் சீனத் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம் பொலிசாரினால் தாக்கப்பட்டதாக நியூயோர்க்கில் இருந்து இயங்கும் சீனாவில் மனித உரிமைகள் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. 100க்கும் அதிகமான ஆர்ப்பாட்டக்காரர்கள் காயமடைந்ததோடு 80க்கும் கூடுதலானோர் கைது செய்யப்பட்டனர்.

மூன்று பெரும் அரசுடமை துணி ஆலைகள் மூடப்பட்டதை எதிர்த்த இந்த ஆர்ப்பாட்டங்கள் ஜூலை மாத முற்பகுதியில் நடைபெற்றன. தொழிலாளர்கள் தொழிலும் வேலையின்மை நிவாரண நிதியைக் கையாடுவதை நிறுத்தும்படியும் கோரி இதை நடாத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டம், சீனாவில் எழுச்சி கண்டுவரும் அளவுகடந்த எதிர்ப்புக்களிலும் வேலை நிறுத்தங்களிலும் ஒன்றாகும். கடந்த ஆண்டில் சீனாவில் 3000 தொழிலாளர் எதிர்ப்புக்கள் இடம்பெற்றன. இதில் அதிகமானவை அரச நிறுவனங்கள். பீகிங் அதிகாரியான வாங் டொங்ஜின் கடந்த மே மாதத்தில் 54 மில்லியன் அரசுடமை நிறுவனத் தொழிலாளர்கள் தேவைக்கு மேலதிகமாக இருப்பதாகவும் வறுமைக்கோட்டு ஊதியத்தையே பெறுவதாகவும் தெரிவித்தார்.

1970பதுகளில் இருந்து சீன ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் பொருளாதாரத்தின் பெரிதும் இலாபகரமான துறைகளை தனியார் முதலீட்டாளர்களுக்கு திறந்து விட்டு அரசுடமை நிறுவனங்களை நசுக்கினர். இப்போது சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் திறமையற்ற அரசுடமை கம்பனிகள் எனப்படுபவற்றை ஒரேயடியாக இழுத்து மூடும்படி சீனாவை நெருக்கி வருகின்றது.

ஏற்கனவே பல மில்லியன் கணக்கான அரசுடமை நிறுவனத் தொழிலாளர்கள் பல மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமல் உள்ளனர். வேலையற்ற தொழிலாளர்களினதும் அவ்வாறே சிறிய விவசாயிகளினதும் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள பெரும் உயர்வு சமூகப் பதட்ட நிலையை ஆழமாக்குவதோடு மேலும் மோதுதல்களை தூண்டிவிடும்.

## உலக சுகாதார நெருக்கடி

ஜூலை 22ம் திகதி ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட ஒரு அறிக்கையின்படி உலக சனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானோர்-கிட்டத்தட்ட 300 கோடி மக்கள் அடிப்படை சுகாதார வசதிகளும் இல்லாமல் உள்ளனர். இது புதிய உயிராபத்தான நோய்களின் பரம்பலுக்கும் முன்னர் ஆதிக்கம் கொண்டிருந்த நோய்களின் ஆதிக்கத்துக்கும் இடமளிக்கின்றது.

யூனிசெப் அறிக்கையின்படி மிகவும் அடிப்படையான குறைந்தபட்ச கழிவறை வசதியும் கூட இல்லாமல் பலர் இருப்பது சமீபத்திய ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. 1990ல் இருந்ததைவிட 300 மில்லியன்களுக்கும் அதிகமான மக்கள் இன்று அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாமல் உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பற்றாக்குறையான சுகாதார குறைபாடுகளின் தாக்கம் காரணமாக-வருடாந்தம் 2.2 மில்லியன் குழந்தைகள் வயிற்றோட்டத்துடன் தொடர்புபட்ட நோய்களால் இறக்கின்றனர்.

# மக்களின் உரிமைகளைக் காக்கும் போராட்டம் .....

10ம் பக்கத் தொடர்ச்சி

என்னை முகாமில் பார்வையிட வந்த சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர்களுக்கு இடமளிக்க மறுத்த முகாம் நிர்வாகம் இது சம்பந்தமாக இருந்து வந்த பாதுகாப்பு விதிமுறைகளையும் மேலும் கடுமையாக்கியது. இது நான் முகாம் அதிகாரிகளின் கண்காணிப்பில் வெளியே சென்று சிகிச்சை பெறுவதை நிராகரித்ததற்கு முக்கிய காரணமாகும்.

நான் சிறையில் இருந்து சோசலிச சமத்துவக் கட்சியினதும் அதன் சக சிந்தனையாளர்களான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதிகளதும் அனைத்துலகப் பிரச்சாரத்தின் தாக்கம் காரணமாக விடுதலை செய்விக்கப்பட்டுள்ளேன் என்பது உண்மை. எனினும் நாம் அத்துடன் திருப்திப்பட்டுவிட முடியாது. இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. நான் கைதான பின்னர் வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் பல இடம்பெற்றுள்ளன. இந்த இராணுவ நடவடிக்கைகளால் அம்மாவட்டங்களில் உள்ள யுத்த அகதிகளின் நிலைமை இன்னும் பரிதாபமான கட்டத்துக்குத் திரும்பியுள்ளது. எனது தாயார் எங்கே உள்ளார்? எனது உறவினர்கள் எங்கே? அவர்கள் முகம் கொடுத்துள்ள நிலைமை என்ன? என்பதையிட்டு எனக்கு எதுவிதமான தகவல்களும் கிடைக்கவில்லை.

இன்று இருந்துவரும் இராணுவ நடவடிக்கைகளின் நிலைமைகளின் கீழ் அகதிகளின் நிலைமை மேலும் மோசமடைந்து அவர்கள் அனாதரவான ஒரு மக்கட் பகுதியினராகி உள்ளனர். அவர்களுக்கு கிடைத்து வந்த அற்பசொற்ப உதவி மானியங்களும் கூட நிறுத்தப்பட்டுள்ளது. நான் மீண்டும் கிளிநொச்சிக்கு அல்லது வவுனியாவுக்கு செல்வது என்பது ஒரு சாதாரணமான பயணமாக அமைந்துவிட முடியாது. வடக்கு-கிழக்கு மாகாண மக்களின் ஜனநாயக உரிமைகள் ஸ்தாபிதம் செய்யப்படும் வரை அங்ஙனம் செல்வது என்பது இலகுவான காரியம் அல்ல.புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டி இந்த முதலாளித்துவ அமைப்பை தூக்கி வீசி தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை கட்டியெழுப்பாத வரை அது இடம்பெற்றுவிடாது. அது ஒரு புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் இடம்பெற்றாக வேண்டும். நான் தெளிவுபடுத்தியவற்றுக்கு மேலாக இளைஞர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் பற்றிக் குறிப்பிட இன்னும் பல உள்ளன. அப்பிரச்சினைகளைத் தீர்க்க தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம் அவசியம். வேறு வழி கிடையாது.

படிப்பகம்

www.padippakam.com

# துறைமுக சீ.எம்.யூ.தொழிலாளர் எதிர்ப்பு பிரச்சாரம்

துறைமுகம் தனியார்மயமாகுவதற்கும் சீ.எம்.யூ.தலைவர்கள் அரசின் வேட்டைக்கு உள்ளாகுவதற்கும் எதிரான பல கோரிக்கைகளின் அடிப்படையில் சீ.எம்.யூ.வும் போராளிகளும் ஆகஸ்ட் 28ம் திகதி அரை நாள் வேலைநிறுத்தி, ஊர்வலம் சென்று கொம்பனித் தெரு டீ மெல் வீதியில் பொதுக்கூட்டம் நடாத்தியது.

துறைமுகம் தனியார்மயப் படுத்தப்படுவதற்கு எதிராகத் தொழிலாளர்களிடையே எதிர்ப்பு பலம் அடைந்து வருகின்றது. இத்தருணத்தில் அரசாங்கம் அவர்களுக்கு எதிராக பாய்ந்து விழுந்து வருகின்றது. 1996 டிசம்பர் 27ம் திகதி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்த 185 துறைமுகத் தொழிலாளர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஆகஸ்ட் 13ல் இருந்து சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் ஆரம்பமானதும் நான்கு தொழிலாளர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டனர். 20 பேர் காலித் துறைமுகத்துக்கு தண்டனை இடமாற்றத்தில் அனுப்பி வைக்கப்பட்டனர்.மேலும் 25 பேர் திருமலைத் துறைமுகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளனர். சீ.எம்.யூ. தொழிற்சங்கத் தலைவர் கொழும்புத் துறைமுகத்தினுள் நுழைய வழங்கப்பட்ட அறிமுக அட்டை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியக் கம்பனியான பீ.அன்ட் ஓ கம்பனி -ஜோன் கீல்ஸ் கூட்டிடம் எலிசபெத் இறங்குதுறையை ஒப்படைப்பதன் மூலம் துறைமுகம் தனியார்மயமாகு வதற்கான துரும்புச் சீட்டை பொதுஜன முன்னணி அரசாங்கம் தயாரித்தது. இந்த நடவடிக்கை பூர்த்தியாகுமாயின் துறைமுகத்தில் 20,000 தொழில்களுக்கு வேட்டு வைக்கப்படும். வெளிநாட்டு முதலீட்டாளரை விரைந்து வரவழைக்கச் செயற்பட்டுவரும் பொதுஜன முன்னணி அரசாங்கம் அண்மையில் ரெலிகொம், தேசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றை விற்றுத் தள்ளியதோடு தபால், துறைமுகம் போன்ற எஞ்சிய அரச துறைகளிலும் கைவைத்துள்ளது.

தொழிலாளர்களிடையே எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வருகையில் சீ.எம்.யூ.தலைமை ஆகஸ்ட் 28ம் திகதி எதிர்ப்பு இயக்கத்துக்கு ஏற்பாடு செய்தது. எனினும் இது தொழிலாளர் எதிர்ப்புக்கு கால்கட்டு போட பாலாதம்பு தலைமை முயல்வதை அவரின் பொதுக்கூட்ட பேச்சு எடுத்துக் காட்டுகின்றது. 28ம்திகதி பிரச்சாரத்தில் "பங்கு கொள்ள விருப்பமானால் வரலாம்" எனத் தம்பு கிளைச் சங்கங்களுக்கு தெரிவித்துள்ளார்.

சீ.எம்.யூ.தலைமைகள் தொழிலாளருக்கு வழங்கியுள்ள வேலைத்திட்டம் என்ன? எதிர்ப்புக் காட்டி தனியார் மயமாக்கலையும் அரச வேட்டையையும் தோற்கடிக்கவும் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுக்கவும் முடியும் என்பது இருந்து கொண்டுள்ளது. கடந்த காலங்களில் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் மற்றும் பல்வேறு தொழிற்சங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் சிற்சில கோரிக்கைகளை வென்றெடுத்தது உண்டு. இது உண்மை. இன்றும் சீ.எம்.யூ. தொழிற் சங்கத் தலைமை அந்தப் பழைய தொழிற் சங்கவாதத் துடன் தொழிலாளர்களைக் கட்டிப்போட்டு அதைப் பற்றிப் பெரிதாக கதையளக்கின்றது. எனினும் இன்று தொழிலாளர், பன்நாட்டு கம்பனிகள், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி இவற்றின் ஏஜந்தான முதலாளித்துவ அரசாங்கத்தினால் நாடுபூராவும் நடைமுறைப் படுத்தப் பட்டுவரும் தாக்குதல்களுக்கு உள்ளாகி உள்ளனர். இதன் ஒரு பாகமே துறைமுகத்தில் ஆரம்பமாகியுள்ள தாக்குதல்.

சீ.எம்.யூ.தலைவர்கள் பழைய உளுத்துப்போன தொழிற்சங்க வாத வேலைத்திட்டங்களுக்கு ஏற்ப ஒரு புறத்தில் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். மறுபுறத்தில் அரசாங்கம், தொழில் ஆணையாளர், சர்வதேச தொழில் அமைப்பு, சீ.எம்.யூவை உள்ளடக்கிய சர்வதேச தொழிற்சங்க அமைப்பு ஆகியவற்றுக்கு கடிதங்கள் வரைவதன் மூலம் இந்த பேரழிவில் இருந்து மீட்சி பெறலாம் எனத் தொழிலாளர்களுக்குப் போதிக்கின்றது.

எதிர்ப்பு என்னதான் பலம் வாய்ந்ததாக இருந்தாலும் கடிதம் வரைவது என்னதான் உரத்ததாக இருந்தாலும் அவை மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் ஏகாதிபத்தியவாதிகளதும் வேலைத் திட்டங்களைத் தோற்கடித்துவிட முடியாது. ஏனைய தொழிலாளர்களுடன் இணைந்து ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டிக் கொள்ளும் அரசியல் வேலைத்திட்டத்தின் கீழ் அமைப்பு ரீதியில் ஒன்றிணைவது மட்டுமே தாக்குதலைத் தோற்கடிப்பதற்கான ஒரே வழி

# ரெலிகொம் நிறுவனம் ஜப்பானிய கம்பனிக்கு விற்பனை

இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் பங்குகளில் 35 வீதத்தினை பொதுஜன முன்னணி அரசாங்கம் 225 மில்லியன் டாலர்களுக்கு அல்லது 1350 கோடி ரூபாக்களுக்கு நிப்பொன் ரெலிகிராப் அன்ட் ரெலிபோன் கோப்பரேசன் என்ற ஜப்பானியக் கம்பனிக்கு விற்றுள்ளது. இந்தக் கொடுக்கல் வாங்கல் மூலம் இலங்கைக்கு பெரும் இலாபம் ஏற்பட்டுள்ளதாக தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர தம்பட்டம் அடித்துக் கொண்டுள்ளார்.

அரசாங்கம் வசமுள்ள எஞ்சிய 61.5வீத பங்குகளும் ஊழியர்களுக்கு பங்கிடப்பட்டதாகக் கூறப்படும் 3.5வீதப் பங்குகளும் எதிர்வரும் காலத்தில் நிப்பொன் கம்பனிக்கு விற்றுத் தள்ளப்படும். இந்த 35 வீதப் பங்குகள் விற்பனை செய்யப்பட்டதன் பின்னர் நிர்வாக உரிமை முழுமயே ஜப்பானிய கம்பனியிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

டெலிகொம் நிறுவனத்தின் பங்குகளின் விற்பனை உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளைக்கு இணங்க இடம்பெறும் தனியார்மயத் திட்டத்தின் ஒரு பாகமாகும்.இத்திட்டத்தின் கீழ் 9000 ரெலிகொம் ஊழியர்களின் தொழில், சேவை நிலைமைகளுக்கு தாக்குதல் தொடுக்கப்படும்.ஏற்கனவே இந்த 9000 ஊழியர்களுள் 3000 ஊழியர்கள் உபரி ஊழியர் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர். நவீன தொலைத் தொடர்பு முறைகளதும் கணனி முறைகளதும் அறிமுகங்களால் தொழில்கள் இல்லாது போகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. மேலும் 300 மில்லியன் டாலர்களை முதலீடு செய்வதன் மூலம் புதிய தொழில்நுட்ப முறையை அறிமுகம் செய்ய நிப்பொன் கம்பனி திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் தொழில், சேவை நிலைமைகளுக்கு தாக்குதல் தொடுக்கும் உரிமையை கம்பனி தனது கைக்குள் போட்டுக் கொண்டுள்ளது.

"போதிய அறிவித்தலின் பின்னர் இந்த நியமனக் கடிதத்தில் தங்களின் சேவைக்கு உரிய நிபந்தனைகளை கம்பனி மாற்றிக் கொள்ள முடியும்"என ஊழியர்களுக்கு புதிதாக வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தின் 17வது சரத்தில் கம்பனி குறிப்பிட்டுள்ளது. இது தொழிலாளர்களின் தொழில் உரிமைக்கு வேட்டு வைக்கும் ஒரு அச்சுறுத்தலாகும்.

# ரெலிகொம் தொழிற் சங்கங்கள் தனியார்மயத்துக்கு....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

உலகளாவிய ரீதியிலான தோற்றப்பாடாகும்.

தொழிற்சங்கங்களுக்குள் அடைபட்டுக் கிடப்பதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் எந்த ஒரு உரிமைகளையும் வெற்றி கொள்ளவோ அல்லது காக்கவோ முடியாது. தொழிற்சங்க அதிகாரிகள் இன்று உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்துக்கு எதிரான வழித்தடையாக உள்ளனர். உள்ள உரிமைகளையும் முதலாளிகள் பிடுங்கிக் கொள்ள இடமளிக்கும் ஆயுதமாக உள்ளனர். தொழிலாளர் தமது உரிமைகளைக காக்க புதிய முன்நோக்கும் புதிய அமைப்பும் அவசியம.முதலாளிகள், தொழிற்சங்க அதிகாரிகள், சந்தர்ப்பவாதிகளில் இருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமாக தொழிலாளர் அணி திரள வேண்டும்.

அனைத்துலக மூலதனத்தினதும் அதன் ஏஜன்டு முதலாளிகளினதும் தாக்குதலுக்கு உள்ளாகும் விவசாயிகள், மீனவர்கள், இனவாத யுத்தத்தினால் நசுக்கப்படும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவு இல்லாமல் தொழிலாளர் தமது உரிமைகளுக்காக எந்த விதமான போராட்டத்தையும் வெற்றிகரமாக நடாத்த முடியாது. கடந்த இரண்டு தசாப்தகாலத்தின் தீர்க்கமான படிப்பினை இதுவாகும்.

தொழில், சம்பளம், வாழ்க்கைத் தரம், சேவை நிலைமைகள், இலவசக் கல்வி, சுகாதார சேவை, ஜனநாயக உரிமைகளைக் காக்கும் போராட்டம் இலாபம் கறக்கும் அமைப்புக்கு எதிராக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்துடன் கூட்டாக தொடுக்கப்பட வேண்டிய போராட்டமாகும். தொழிலாளர் வர்க்கப் போராட்டத்தின் பயணப் பாதையும் முன்னோக்கும் அந்தளவுக்கு குறுகியது அல்ல. அந்த வேலைத்திட்டத்தினையும் முன்நோக்கினையும் தொழிலாளாகளின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதியான சோசலிச சமததுவக் கட்சியே முன்வைத்துள்ளது.

தொழிற்சங்கங்களின் உள்ளும் வெளியிலும் உள்ள தொழிலாளர் இடையேயும் ஒடுக்கப்படும் மக்களிடையேயும் இந்த முன்நோக்கு , வேலைத்திட்டத்தை ஸ்தாபிதம் செய்ய சோசலிச சமத்துவக் கட்சி போராடுகின்றது. ரெலிகொம்மிலும் மற்றும் இடங்களிலும் தொழிற்சங்க வரையறைகளை உடைத்துக் கொண்டு தொழிலாளர் நடவடிக்கை குழுக்களை அமைக்குமபடி நாம் வேண்டுகின்றோம். அந்த விதத்தில் நடவடிக்கை குழுக்களை அமைப்பது இலங்கையிலும் அனைத்துலகிலும் தொழிலாளர் பக்கம் கைநீட்டுவதன் மூலம் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவை வென்றெடுக்க வழிவகுக்கும்.

# இலங்கை மின்சார சபை: இரகசிய தனியார்மய திட்டம்

இலங்கை மின்சாரசபையை தனியார்மயமாக்கும் திட்டம் இரகசியமான முறையில் இடம்பெற்றுவருகின்றது. முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கமும் மின்சார சபை நிர்வாகமும் இந்தத் திட்டங்களை தொழிலாளர்களுக்கு மூடிமறைகக்கும் பெரும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளனர். 1996 மே மாதக் கடைப்பகுதியில் தனியார்மயத்துக்கு எதிராக தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் வெடித்ததும் பொதுஜன முன்னணி அரசாங்கம் இராணுவத்தைக் கொண்டு தொழிலாளர் போராட்டத்தை நசுக்கியது. தொழற்சங்கத் தலைவர்கள், அவர்களின் உறவினர்கள் ஆகியோர் இராணுவ-பொலிஸ்-குண்டர் தாக்குதல்களுக்கு இலக்காகினர்.

மின்சார சபைக்கு சொந்தமான நிதியை அரசாங்கம் அடிக்கடி எடுத்ததோடு தொழிலாளர்களின் சம்பள உயர்வை வழங்க நிதி இல்லை எனக் கூறிக் கொண்டுள்ளது. கடந்த வேலைநிறுத்தத்தின் போது வேலை இடைநிறுத்தம் செய்யபபட்ட தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. அவர்களில் பலரை சேவையில் இருந்து நீக்க தயாரிப்புக்கள் இடம்பெற்று வருவதாக தெரிகின்றது.

இலாபகரமான மின்சார சபை விநியோகப் பிரிவில் பாவனையாளர்கள் அதிகம் உள்ள இ.மி.ச. பங்காளர்களை இலங்கை மின்சாரசபை(தனியார்) கம்பனிக்கு கையேற்றுள்ளது. தற்சமயம் சப்புகஸ்கந்தவில் அமைக்கப்பட்டுவரும் மெ.வோ.61 டீசல் மின்நிலையம் பன்நாட்டு கம்பனிகளால் அமைக்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு 20மெ.வோ.மின்சார நிலையம் பன்நாட்டு கம்பனி, கூட்டு லங்கா ட்ரான்ஸ்போமர் கம்பனியால் அமைக்கப்பட உள்ளது. இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான சப்புகஸ்கந்த டீசல் மின்நிலையத்தின் பராமரிப்பு "அல்ஸ்கொம்" என்ற பிரான்சிய பன்நாட்டுக் கம்பனிக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

www.padippakam.com

# கொடிய யுத்த பயங்கரங்களில் இருந்து மீட்சி பெற வழி என்ன?

1ம் பக்கத் தொடர்ச்சி

பரீட்சை எழுதிக் கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் அதிர்ச்சி அடைந்து ஓட்டமெடுத்துள்ளனர்.

வவுனியாவுக்கு அப்பால் வன்னியில் இயங்குவது மல்லாவி ஆஸ்பத்திரி மட்டுமே. மே மாதத்தில் இருந்து ஆஸ்பத்திரியின் அறிக்கை, யுத்தத்தின் உக்கிரமான அழிவுகளுக்கு முகம் கொடுக்கும் பொதுமக்களின் துயர நிலையைக் காட்டுகின்றது. மே மாதத்தில் மல்லாவி ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை நூற்றுக்கு 20 வீதத்துக்கும் அதிகம். ஜூலை மாதத்தில் சத்திர சிகிச்சை 800 நடைபெற்றுள்ளது. மல்லாவி வைத்திய ஊழியர் ஜூலை மாதத்தில் 16300 பேருக்கு சிகிச்சை அளித்துள்ளனர். மேலும் 1200 பேர் சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.இவை அனைத்தும் வைத்திய உபகரணங்களுக்கும் மருந்துப் பொருட்களுக்கும் நூற்றுக்கு 80 வீதமான தட்டுப்பாடு இருக்கையிலேயே இடம்பெற்றன.

மல்லாவியிலும் அயல் பகுதிகளிலும் வதிவிடங்களை இழந்த 300000 மக்கள் திரண்டு போயுள்ளனர். முல்லைத்தீவில் குவிந்து போயுள்ள மக்களுக்கு ஆஸ்பத்திரி கிடையாது. மடுப்பகுதியில் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. 35000-38000 அளவிலான மக்கள் மடுப்பகுதிக்கு ஓடி வந்துள்ளனர். பிராந்தியம் பூராவும் போஷாக்கின்மையும் வயிற்றோட்டமும் பெரும் பிரச்சினையை உருவாக்கி உள்ளது என எம்.எஸ்.எஸ்.குறிப்பிட்டுள்ளது. மடுவுக்கு அருகில் முள்ளிக்குளம் பழம்பிட்டி பகுதிகளில் உக்கிரமான போஷாக்கின்மை பரந்து போயுள்ளது. சமீபத்தில் அகதிகளான மக்கள் இடையே 6 மாதங்களுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட 50 குழந்தைகள் மோசமான போஷாக்கின்மையால் வாடுவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என அந்த அமைப்பு அறிக்கை செய்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வன்னிப் பகுதியிலும் சுமார் 10 இலட்சம் மக்கள் பசிக்கும் பட்டினிக்கும் பலிகடாக்கள் ஆகியுள்ளனர்.வன்னியில் இடத்துக்கு இடம் கலைக்கப்படும் மூன்று இலட்சம் மக்கள் பட்டினிக்கு முகம் கொடுத்து உள்ளனர்.

முல்லைத் தீவில் அடைந்து போய்க் கிடக்கும் மக்கள் குடிக்க உகந்த தண்ணீர் இல்லாமல் ஆஸ்பத்திரிகளுக்குள் தள்ளப்படும் ஆபத்தான நிலையில் மக்கள் இருந்து வருவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.தண்ணீர் இருப்பது தேடிக் கண்டு பிடிக்கப்பட்ட இடங்களில் கிணறு தோண்டுவது பதட்ட நிலைமைகளின் கீழ் 14 நாட்கள் செல்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண போதனா ஆஸ்பத்திரியில் வசதிகள், கருவிகள், இடவசதி இல்லாமல் பொதுமக்கள் கஷ்டப்படுகின்றனர்.கடந்த சில மாதங்களாக குழந்தை வாட்டுகளில் குழந்தைகள் அதிகம் அதிகமாக மரணத்தை தழுவிக் கொண்டுள்ளன. ஜூன் மாதத்தில் மூச்சடைப்புக்கு வெளியில் சிகிச்சை பெற்ற குழந்தைகளில் நூற்றுக்கு 46.2 வீதம் இறந்துள்ளன.அத்தகைய குழந்தைகள் சாதாரண ஒரு நிலைமையில் நூற்றுக்கு 15 வீதமே இறப்பதுண்டு. அகதிகளாக இருந்து கடந்த மாதம் யாழ்ப்பாணம் வந்த மக்களிடையே 32 வீதமான குழந்தைகள் கடுமையான மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது| கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த யுத்தமானது தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளி அடிபணிய வைத்து விடுதலைப் புலிகளைக் கொண்ட அல்லது கொண்டிராத தமிழ் முதலாளித்துவ கட்சிகளுடன் ஒரு சமரசத்துக்கு செல்வதற்கு தொடுக்கப் பட்டுள்ள யுத்தமாகும். அது முழு இலங்கையையும் ஒரு காட்டுமிராண்டி சர்வாதிகார ஆட்சியின் கீழ் கொணரும் பிற்போக்கு வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும். அனைத்து முதலாளித்துவச் சார்பு கட்சிகளும் அமைப்புக்களும் இந்த உண்மையை மூடிமறைக்கின்றன. ஆனால் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இதை எந்த விதத்திலும் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது.

வடக்கு-கிழக்கு மாகாண யுத்தத்தினை முன்னெடுக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கம் தென் மாகாணங்களில் நடாத்துவது என்ன? பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளையும் வாழ்க்கை உரிமைகளையும் வெட்டிச் சரிக்கும் யுத்தமாகும். ஜூலை மாதத்தில் வாழ்க்கைச் செலவு புள்ளி 2102.5ஆக உயர்ந்துள்ளது. இந்த அரசாங்கம் ஆகஸ்ட் மாதத்தில் பாண் விலையை ஒரு ரூபாவினால் கூட்டியதோடு மாவின் விலையை இரண்டு ரூபாய்களால் ஏற்றியது. கடந்த வாரத்தில் ஒரு கிலோ சீனியின் விலை ரூபா.1.75 ல் கூட்டப்பட்டுள்ளது. செப்டம்பரில் மின்சாரக் கட்டணம் நூற்றுக்கு 11 வீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளது. இலவசக் கல்வியின் கழுத்தைத் துண்டிக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறைக்கிடத் தருணம் பார்த்துக் கொண்டுள்ளனர். இந்த கல்விச்சீர்திருத்தம் எனப்படுபவைக்கு எதிர்ப்புக் காட்டிய மாணவர்களை நசுக்க பொலிசாரைத் தூண்டிவிட்ட அரசாங்கம் போக்குவரத்துத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தினை நசுக்க வெளிவெளியாக பொலிசாரையும் குண்டர்களையும் அணிதிரட்டி இறக்கியது. பின்னர் இப்போது துறைமுகத் தொழிலாளர் தனியார்மயமாக்கல் எதிர்ப்பு பிரச்சாரத்தினைத நசுக்க தொழிற்சங்க வேட்டையையும் தாக்குதலையும் உக்கிரமாக்கி உள்ளது.

இந்த அரசாங்கம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தை தொடுத்து இருப்பது தமிழ் மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்குவதற்காகும் என கூறிக்கொள்ள இனவாதத்தில் வெந்து போன சமசமாஜ ஸ்டாலினிஸ்ட் கட்சிகளின் தலைவர்களுக்கும் அரசாங்கத்தின் 'அரசியல் பொதி' எனப்படுவதற்கு சாமரை வீசும் 'தியச' சஞ்சிகைக்காரர்களுக்கும் நவசமசமாஜக் காரர்களுக்கும் மட்டுமே முடியும்.

வடக்கு-கிழக்கு மாகாண மக்களை நசுக்கித் தள்ளும் இனவாத யுத்தத்தினை பொதுஜன முன்னணி அரசாங்கம் முன்னெடுப்பது ஏகாதிபத்தியவாதிகளின் முதலீடுகளுக்கு இலங்கையை ஒரு சுவர்க்கமாக்கி, தமது இலாப வெறியை தணித்துக் கொள்ள கைகொடுக்கும் முதலாளிகளின் அவசியங்களை பூர்த்தி செய்வதற்கே. சமாதானம், சுபீட்சம் என்பவை எல்லாம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் நலன்களுக்காக அல்ல. ஏகாதிபத்தியவாதிகளதும் ஏகாதிபத்திய சார்பு கையாட்களினதும் சுரண்டலுக்காகவுமே.

## தமிழ் முதலாளித்துவக் கட்சிகள்

தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் எந்த விதமான மக்களின் அடிப்படையையும் கொண்டிராத தமிழ் முதலாளித்துவக் கட்சிகள், இனவாத யுத்தத்தின் எதிரில் மீண்டும் மீண்டும் தமது பிற்போக்கினையும் பலவீனத்தையும் காட்டிக் கொண்டுள்ளன.இன்று வன்னியில் மக்கள் மீது விமானக் குண்டுவீச்சுக்கள் இடம்பெற்று வரும் நிலையில் ஜனாதிபதிக்கு கடிதம் வரையும் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் எம்.சிவசிதம்பரம் "அளவு கணக்கின்றி ஷெல் வெடி வீசுவதையும் விமானத் தாக்குதல்களையும் உடன் நிறுத்துமாறு" கெஞ்சியுள்ளார். இந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தமிழ் மக்களின் எதிரில் இந்த மோசடி அறிக்கையை விடுப்பது பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிக் கொண்டும் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டினால் பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பி.யும் இணைந்து நடாத்தும் சமரசங்களுக்கு அழைப்பு விடுத்துக் கொண்டுமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் இனவாத யுத்தத்தினை இந்தளவு தீர்க்கமான மட்டத்துக்கு கொணர வழிவகுத்துக் கொடுத்தவர்கள் ஆட்சிக்கு வந்ததுதான் தாமதம் அதை அணைத்துக் கட்டிக்காத்துக் கொண்டவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈபீஆர்எல்எப், விடுதலைப் புலிகள் போன்ற தமிழ் முதலாளித்துவக் கட்சிகளேயாகும். விடுதலைப் புலிகள் தனக்குக் கிடைக்கும் சகல இராணுவப் பின்னடைவுகளுக்கும் மத்தியிலும் அது தமிழ் மக்களைக் கசக்கிப் பிழிந்து தனது இனக்குழுவாத யுத்தத்துக்கு வளங்களைக் கொள்ளையடிப்பதை உக்கிரமாக்கிக் கொண்டுள்ளது. இச்சமயத்தில் தம்மை ஒதுக்கித் தள்ளியுள்ள ஏகாதிபத்தியவாதிகளை எந்த விதத்திலாவது அணைத்துக் கொண்டு, பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் தமக்கு வாய்ப்பான சமரசத்தினுள் நுழைந்து கொள்ள விடுதலைப் புலிகள் தலைகீழாக நின்று வருகின்றது. இது சகல ஒடுக்கப்படும் தமிழ் மக்களையும் தமிழ் முதலாளித்துவ கட்சிகள் ஆதாளபாதாளத்தில் தள்ளி உள்ளதைக் காட்டுகின்றது.

## தீர்வுக்கான வழி

வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் பேசும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு பிரச்சினைக்கான தீர்வு, சோசலிச சமத்துவக் கட்சி முன்வைக்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக மட்டுமே உள்ளது. அத்தோடு வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ் தொழிலாளர்- ஒடுக்கப்படும் மக்களைப் பாதுகாக்கும் தீர்க்கமான பணியும் பொறுப்பும் தென் மாகாணங்களின் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டிக் கொண்டு சோசலிச சமத்துவக் கட்சி போராடுகின்றது."மற்றொரு தேசிய இனத்தை ஒடுக்கும் "தமது" முதலாளித்துவ வர்க்கத்தினை எதிர்க்காத தொழிலாளர் வர்க்கம் தன்னையே ஒடுக்குவதற்கான நிலைமைகளைச் சிருஷ்டித்துக் கொள்வதாக" மார்க்ஸ் தெளிவுபடுத்தினார். வடக்கு-கிழக்கு தொழிலாளர்,ஒடுக்கப்படும் மக்களை நசுக்கவும் இரத்த வெள்ளத்தில் தள்ளவும் எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிராக போராட்டத்துக்குக் கிளர்ந்து எழாது போனால் தென் மாகாணங்களில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் எதிர்காலம் இருள்மயமானதாக விளங்கும்; ஆபத்தானதாக இருக்கும்.

சமசமாஜ, ஸ்டாலினிஸ்ட், நவசமசமாஜ, இ.தொ.கா.கட்சிகளும் தொழிற் சங்கத் தலைவர்களும் இந்த யுத்தத்துக்கு தோள் கொடுத்துள்ளனர். அதன் மூலம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை இந்த அழிவுக்குள் மாட்டிவிடச் செயற்படுகின்றனர். ஜே.வீ.பி. பிற்போக்காளர்கள் பாசிச இயக்கம் அமைக்க பந்தயம் பிடிப்பது இந்த இருள்மயமான நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டாகும்.

துறைமுகம், தபால், வங்கி, மற்றும் எந்த ஒரு இடத்திலும் தொழிலாளர் தமது ஜனநாயக உரிமைகளையும் வாழ்க்கை உரிமைகளையும் அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தினைக் காப்பதன் மூலம் மட்டுமே வென்றெடுக்க முடியும்.இலங்கையினுள் இந்த ஐக்கியம் ஆரம்பமாகுவது, தமிழ் மக்களிற்கு எதிரான இனவாத யுத்தத்துக்கு எதிராக அணிதிரண்டு கொள்வதன் மூலமாகவேயாகும். மறுபுறத்தில் தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் பிரிவினைவாத பிற்போக்குப் பிளவுகளுக்கு எதிராக அனைத்துலகவாத ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கு முன்நோக்கிச் செல்ல வேண்டும். இந்த இரண்டு பணிகளையும் முதலாளித்துவ கையாட்களான சகல கட்சிகளுக்கும் அமைப்புக்களுக்கும் எதிரான போராட்டத்தின் மூலம் தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத கட்சியைக் கட்டியெழுப்புவதன் மூலமே சாதிக்க முடியும். அக்கட்சி சோசலிச சமத்துவக் கட்சியாகும்.

* இனவாத யுத்தம் வேண்டாம்! பிரிவினைவாதம் வேண்டாம்! சிங்கள-தமிழ் தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தைக் கட்டியெழுப்பு! அதைச் சூழ தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டு!

* தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிசெய்! நாடு பூராவும் மனிதப் பிணங்கள் குவிய பொதுஜன முன்னணி -யூ.என்.பி. ஏகாதிபத்தியச் சார்பு கூட்டுக்கு இடங்கொடாதே! அதற்கு ஒரு ஆளோஒரு சதமோ வழங்காதே! இனவாத யுத்தம் எமது யுத்தம் அல்ல!

இனவாத யுத்தத்தின் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டு, தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் வர்க்கப் போராட்டத்தை நசுக்க இடம் கொடாதே. தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் வாழ்க்கை உரிமைகளையும் நலன்புரி உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் காக்க இலாபம் கறக்கும் முதலாளித்துவ அமைப்புக்கும் அதன் ஆட்சிக்கும் எதிராக வர்க்கப் போராட்டத்தை வளர்ச்சி காண வைப்போம். வர்க்கப் போராட்டத்தை வளர்ச்சி காண வைக்க சகல வேலைத்தலங்களிலும் குடியிருப்புக்களிலும் தொழிலாளர் வர்க்கத் தலைமையின் கீழ் ஒடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகளையும் கொண்ட நடவடிக்கைக் குழுக்களைக் கட்டியெழுப்பு.

மோசடி அரசியலமைபபு சட்டத்திற்குப் பதிலாக பொதுமக்களின் ஜனநாயக உரிமைகளைக் காக்கும் அரசியலமைப்பு சட்டத்தை சிருஷ்டிக்க முதலாளித்துவக் கையாட்கள் இல்லாத நடவடிக்கைக் குழுக்களின் ஆதரவைப் கொண்ட - அவற்றின் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகளை கொண்ட அரசியலமைப்புச் சட்ட நிர்ணய சபையை கூட்டு! ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ வர்க்க ஆட்சியை தூக்கி வீசி, சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை கட்டியெழுப்பு. இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிச குடியரசு ஒன்றிய முன்னோக்குக்காகப் போராடு

சோசலிச சமத்துவக் கட்சியின் வேலைத்திட்டம் இதுதான்.

சகல வர்க்க நனவுகொண்ட தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இளைஞர்களும் புத்திஜீவிகளும் இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையில் பரந்த மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். தென்மாகாணங்களிலும் கொடிய யுத்தத்தினால் பீடிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்களிலும் சோசலிசத்துக்கான போராட்டத்தின் பதாகையை உயர்த்திப் பிடித்துள்ள ஒரே இயக்கம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமேயாகும். இலங்கையில் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ வர்க்கம் நிர்மாணித்துள்ள -தினமும் உக்கிரமாக்குகின்ற தரித்திரம் பிடித்ததும் துயரமானதுமான காட்டுமிராண்டி நிலைமையில் இருந்து விடுபடுவதற்கான வழி இதுவே.

படிப்பகம்

www.padippakam.com

# பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் உண்ணாவிரதம்

பண்டாரவளை-பிந்துனுவெவ அரச புனர்வாழ்வு சித்திரவதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு பகுதியினர் ஆகஸ்டு 25ம் திகதியிலிருந்து உண்ணாவிரத எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். கைதிகளின் கோரிக்கை கிடைக்காது போனால் மேலும் ஒரு பகுதியினர் இன்னும் சில தினங்களில் அடுத்த கட்ட உண்ணாவிரதத்தில் இறங்க இருப்பதாக இந்த அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

தமது எதிர்ப்பு பிரச்சார இயக்கத்துக்கு ஆதரவளிக்கும்படியும் அதைப் பகிரங்கப் படுத்துமாறும் கோரி கைதிகள் சோசலிச சமத்துவக் கட்சிக்கு கடிதம் எழுதியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கோரிக்கைகளை முன்வைத்து 97 பேர் கையொப்பமிட்ட மனுவொன்றை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்துள்ளதாகக் கூறி அதன் பிரதிகளை கைதிகள் சோசலிச சமத்துவக் கட்சிக்கும் அதன் பத்திரிகைகளான தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்தவுக்கும் அனுப்பி இருந்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டு சித்திரவதை முகாம்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் வருடக் கணக்காக சிறைவைக்கப்பட்ட இக்கைதிகள் எந்த ஒரு குற்றச்சாட்டையும் நிருபிக்க அரசினால் முடியாது போன கட்டத்தில் "புனர்வாழ்வு" என்ற பெயரில் மூளைச் சலவைக்காக இந்த புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டவர்களாவர். சோசலிச சமத்துவக் கட்சி இந்த அரசியல் கைதிகளை நிபந்தனை இல்லாமல் விடுதலை செய்யுமாறு பிரச்சாரம் செய்கிறது. இவர்களைப் போன்ற பலர் முன்னைய யூ.என்.பி.அரசாங்க காலத்திலும் இன்றைய பொதுசன முன்னணி அரசாங்கத்தின் கீழும் இனவாத யுத்தத்தின் பகடைக்காய்கள் ஆகியுள்ளனர். பொலிஸ், இராணுவ முகாம்களிலும் புனர்வாழ்வு முகாம்களிலும் இத்தகைய அரசியல் கைதிகள் ஆயிரக்கணக்கில் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

பிந்துனுவெவ முகாமிலுள்ள இந்த அரசியல் கைதிகளின் இன்றைய நிஜ தேவை நிபந்தனை இல்லாது விடுதலை செய்யப்படுவதே. இதில் சந்தேகம் கிடையாது. எனினும் அவர்கள் இருந்து கொண்டுள்ள நிலையில் எதுவித வழியுமின்றி அரசாங்கத்துக்கு சமர்ப்பித்துள்ள கோரிக்கையானது தம்மை ஒடுக்கிக் கொண்டுள்ள அரசுடனும் அரசாங்கத்துடனும் ஒத்துப்போகும் -ஒத்தூதும் சமரசவாதக் கோரிக்கைகளாக இருந்து கொண்டுள்ளதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

இவர்கள் இந்த முகாமை யாழ்ப்பாணம்-தெல்லிப்பழைக்கு மாற்றாது இங்கேயே வைத்திருக்க வேண்டும் எனவும் புனர்வாழ்வினை ஆறு மாதங்களுக்கு வரையறுக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளனர். முகாமின் இன்றைய நிர்வாகியாக உள்ள பிரிகேடியர் அபேரத்னாவை இடமாற்றம் செய்யாமல் தொடர்ந்து அம்முகாமிலேயே வைத்திருக்க வேண்டும் எனவும் கைதிகள் கேட்டுள்ளனர். பிரிகேடியர் அபேரத்ன கைதிகளை "நன்கு" கவனிப்பதாயும் இக்கைதிகள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்கள் "தாச்சியில் இருப்பது அடுப்பிற்குள் விழுவதை விட மேல்" என்ற விதத்தில் சிந்திப்பதாகத் தெரிகிறது. யுத்த அடக்குமுறையில் பொதுஜனங்களை அடக்கவும் அதன் ஒரு இலட்சணமாக அரசியல் கைதிகளை பிடித்து அடைக்கவும் முதலாளி வர்க்கத்துக்கு எந்த ஒரு உரிமையும் கிடையாது. இதுவே தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களதும் சரியான நிலைப்பாடாகும். புனர்வாழ்வு முகாம் என்ற பெயரில் முதலாளித்துவ அரசாங்கம் நடாத்தி வருவதும் கூட ஒரு சித்திரவதை முகாமே. இவை கைதிகளை மூளைச் சலவைக்கு உள்ளாக்கி, அரசாங்கத்துக்கும் அரச இயந்திரத்துக்கும் இலாயக்கான பேர்வழிகளாக அவர்களை மாற்றி அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. பொலிஸ், இராணுவ முகாம்களில் பெரும் சித்திரவதைக்கு ஆட்பட்டு பாதிப்புக்கு உள்ளான கைதிகள் உள ரீதியில் முதலாளித்துவ அடிமை ஏஜந்துகளாக சிருஷ்டிக்கப்படும் சித்திரவதை, எடுத்த எடுப்பில் ஒரு சித்திரவதையாக தென்படாது போகலாம்.

பிந்துனுவெவை புனர்வாழ்வு முகாமில் உண்ணாவிரதம் இருந்து எதிர்ப்புக் காட்டும் கைதிகளின் நிலைப்பாட்டுக்கும் எட்டுமாத காலம் அங்கிருந்து -கடந்த ஜூலை 20ம் திகதி விடுதலையான செல்லையா இராஜ்குமாரின் நிலைப்பாட்டுக்கும் இடையே ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடையிலான ஆதாளபாதாளம் உள்ளது.

செல்லையா இராஜ்குமார் தொழிலாளர் வர்க்கத்தின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர். அவர் அக்கட்சியின் வேலைத்திட்டம் , முன்நோக்குகளில் பயிற்றப்பட்ட ஒருவராக விளங்கியதால் முதலாளித்துவ அரசாங்கத்தினதும் அரச இயந்திர அடக்குமுறைகளுக்கும் அடிபணியாது நிமிர்ந்து நின்று முகாமில் இருந்து விடுதலை பெற்று வர முடிந்தது. இராஜ்குமாரை விடுதலை செய்யும்படி அனைத்துலக குழுவும் அதன் இலங்கை பகுதியும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் பகுதியினரிடையே பலத்த பிரச்சார இயக்கத்தை நடாத்தியது. அதன் பெறுபேறாகவே இராஜ்குமார் விடுதலையானார். இன்று அவர் தனது சிறை வாழ்க்கை அனுபவங்களையும் - படிப்பினைகளையும் மக்களுக்கு எடுத்து விளக்கி வருகின்றார். சோ.ச.க.வினால் ஒழுங்கு செய்யப்பட்டுவரும் ஒரு தொகை கூட்டங்களில் பேச அவர் முன்வந்துள்ளார்.

இது பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் சிறைவைக்கப்பட்டுள்ள இளைஞர்களைப் போன்று இலங்கை பூராவும் உள்ள தொழிலாளர்-ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் இளைஞர்களுக்கும் ஒரு பலத்த ஒரு படிப்பினையை ஊட்டியுள்ளது. அது என்ன? தமது உரிமைகளுக்காகப் போராடுவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் பகுதிகளுமே. முதலாளித்துவ வர்க்கத்தின் பிற்போக்கு அரசியல் ஒடுக்குமுறைக்குள் சிக்கிக் கொள்ளாது தொழிலாளர் வர்க்க நடவடிக்கைகளின் அடிப்படையில் நேரடியாக நிமிர்ந்து நிற்க உரம் ஊட்டுவதும் அறிவு ஊட்டுவதும் இந்த அமைப்பு மட்டுமே.

பிந்துனுவெவ அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் பாதுகாக்கவும் பிரச்சாரம் செய்யும் சோசலிச சமத்துவக் கட்சி, மறுபுறத்தில் அவர்களது தற்போதைய சமரசவாத கோரிக்கைகளுக்கு அல்லாது அவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யும் போராட்டத்துக்காக தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவை வென்றெடுக்க சோ.ச.க.ஊடாக முன்வரும்படி கோருகின்றது.


## அக்டோபர் புரட்சியின் 80வது ஆண்டு நிறைவு




**அக்டோபர் 12**

**கொழும்பு பொது நூல்நிலைய கேட்போர் கூடம்**

**கண்காட்சி : காலை 10 மணி**

**பொதுக்கூட்டம்: மாலை 3 மணி**

**சோசலிச சமத்துவக் கட்சி, இளம் சோசலிஸ்டுகள்**






சந்தா (தபால் கட்டணம் உட்பட)

இதழ் 8 ரூ.40
இதழ் 12 ரூ.60
இதழ் 24 ரூ.120
இதழ் 48 ரூ.240

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220



## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . . திகதி . . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு-10
தொ.பே. 682220


90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்